


# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com




CHENNAI | Volume- 3 | Issue:253 | 29-03-2026 | ஞாயிற்றுக்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி

## இன்றைய பஞ்சாங்கம்

29.03.2026 பங்குனி 16
ஞாயிற்றுக்கிழமை

சூரிய உதயம் 6.15

திதி:
ஏகாதசி காலை 9.32 வரை
பிறகு துவாதசி.

நட்சத்திரம்:
ஆயில்யம் மாலை 4.04 வரை
பிறகு மகம்

யோகம் :
சித்த/மரணயோகம்

நல்ல நேரம்
காலை 7–8 மணி.
மாலை 3–4 மணி.

இராகு காலம்
மாலை 4.30–6.00 மணி

எமகண்டம்
நண்பகல் 12.00–1.30 மணி

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# திமுக சார்பில் போட்டியிடும் 164 வேட்பாளர்களை அறிவித்தார் ஸ்டாலின்

**சென்னை, மார்ச் 29:**

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் திமுக சார்பில் போட்டியிடும் 164 வேட்பாளர்கள் பட்டியலை கட்சித் தலைவர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார். இதில் 60-க்கும் மேற்பட்ட புதுமுகங்களுக்கு வாய்ப்பு தரப்பட்டுள்ளது. முதல்வர் ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதி, அமைச்சர் துரைமுருகன் உட்பட 31 அமைச்சர்களுக்கு மீண்டும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ள நிலையில், 3 அமைச்சர்கள், 17 மாவட்டச் செயலாளர்களுக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் ஏப்ரல் 23-ம் தேதி நடைபெறுகிறது. இதையொட்டி, அனைத்து கட்சிகளும் வேட்பாளர் பட்டியலை வெளியிட்டு வருகின்றன. அதிமுக ஏற்கெனவே தொகுதிப் பங்கீட்டை முடித்து, 150 தொகுதிகளுக்கு வேட்பாளர்களை அறிவித்துள்ளது. இந்நிலையில், பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் ஆளும்கட்சியான திமுக சார்பில் போட்டியிடும் 164 வேட்பாளர்கள் பட்டியலை கட்சித் தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் சென்னையில் நேற்று வெளியிட்டார்.

கன்னியாகுமரி - ரெ. மகேஷ், நாகர்கோயில் - எஸ். ஆஸ்டின், இராதாபுரம் - மு. அப்பாவு, பாளையங்கோட்டை - மு. அப்துல் வஹாப், திருநெல்வேலி - சு. சுப்பிரமணியன், ஆலங்குளம் - முனைவர். பால் மனோஜ் பாண்டியன், தென்காசி - டாக்டர் கலை கதிரவன், வாசுதேவநல்லூர் - ஈ. ராஜா, கோயில்பட்டி - கா. கருணாநிதி, ஓட்டபிடாரம் (தனி) - பி.எம். ராமஜெயம், திருச்செந்தூர் - அனிதா ராதாகிருஷ்ணன், தூத்துக்குடி - கீதா ஜீவன், விளாத்திகுளம் - ஜி.வி. மார்கண்டேயன், முதுகுளத்தூர் - ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், இராமநாதபுரம் - காதர்பாட்சா (எ) முதுதுராமலிங்கம், பரமக்குடி (தனி) - கே.கே. கதிரவன், திருச்சுழி - தங்கம் தென்னரசு, அருப்புக்கோட்டை - கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், சாத்தூர் - அ. கடற்கரை ராஜ், ராஜபாளையம் - செள. தங்கப்பாண்டியன், கம்பம் - நா. ராமகிருஷ்ணன், போடிநாயக்கனூர் - ஓ. பன்னீர் செல்வம், ஆட்டிப்பட்டி - ஆ. மகராஜன்

திருமங்கலம் - சேடப்பட்டி மணிமாறன், திருப்பரங்குன்றம் - கிருத்திகா தங்கபாண்டி, மதுரை மேற்கு ரகு பாலாஜி, மதுரை மத்திய - பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன், மதுரை வடக்கு - கோ. தளபதி, சோழவந்தான் (தனி) - ஆ. வெங்கடேசன், மதுரை கிழக்கு - பி. மூர்த்தி, மானாமதுரை - தமிழரசி ரவிக்குமார், திருப்பத்தூர் - கே.ஆர். பெரிய கருப்பன், ஆலங்குடி - மெய்யநாதன், திருமயம் - எஸ். ரகுபதி ஆகியோர் போட்டியிடுகிறார்கள்.

குறிஞ்சிப்பாடி - எம். ஆர். கே. பன்னீர்செல்வம், நெய்வேலி - சபா. ராஜேந்திரன், திட்டக்குடி (தனி) - சி.வி. கணேசன், ஜெயங்கொண்டம் - க.சொ.க.கண்ணன்,



அரியலூர் - லதா பாலு, குன்னம் - சா. சி. சிவசங்கர், பெரம்பலூர் (தனி) டாக்டர். எஸ்.டி. ஜெயலட்சுமி, முசிறி - என்.எஸ். கருணைராஜா, மண்ணச்சநல்லூர் - சீ. கதிரவன், லால்குடி - த. பாரிவள்ளல், திருவெறும்பூர் - முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, திருச்சி கிழக்கு - முனைவர் இனிகோ இருதயராஜ், திருச்சி மேற்கு - கே.என். நேரு, ஸ்ரீரங்கம் - எஸ். துரைராஜ், குளித்தலை - சூரியனூர் அ. சந்திரன், கிருஷ்ணராயபுரம் (தனி) - சி. கே. ராஜா, கரூர் - ஆசி. எம். தியாகராஜன், அரவக்குறிச்சி - மொஞ்சனூர் ஆர். இளங்கோ, வேடசந்தூர் - டி. சாமிநாதன், திண்டுக்கல் - ஐ. பி. செந்தில்குமார், நிலக்கோட்டை (தனி) - நாகஜோதி, ஆத்தூர் - இ. பெரியசாமி, ஒட்டன்சத்திரம் - அர. சக்கரபாணி

மடத்துக்குளம் - இரா. ஜெயராமகிருஷ்ணன், உடுமலைப்பேட்டை - மு. ஜெயகுமார், வால்பாறை (தனி) - ஆ. சுதாகர், கிணத்துக்கடவு - சபரி கார்த்திகேயன், கோவை தெற்கு - செந்தில் பாலாஜி, தொண்டாமுத்தூர் - என்.ஆர். காத்திகேயன், கோவை வடக்கு - செந்தமிழ்ச் செல்வன், சூலூர் - தளபதி முருகேசன், பல்லடம் - க. செல்வராஜ், திருப்பூர் தெற்கு - தினேஷ்குமார், அவினாசி (தனி ) - கோகிலா மணி எம்பிபிஎஸ், மேட்டுப்பாளையம் - கவிதா கல்யாணசுந்தரம், குன்னூர் - கே.எம். ராஜு, கூடலூர் (தனி) - மு. திராவிடமணி, கோபிசெட்டிப்பாளையம் - நல்லசிவம், அந்தியூர் - சிவபாலன், பவானி - கேஏ சேகர், பெருந்துறை - தோப்பு வெங்கடாசலம், காங்கேயம் - மு.பெ. சாமிநாதன், தாராபுரம் (தனி), டாக்டர் இந்திராணி, ஈரோடு மேற்கு - சு. முத்துசாமி, குமாரபாளையம் - எஸ். பாலு, பரமத்திவேலூர் - கே.எஸ். மூர்த்தி, நாமக்கல் - ப. இராணி, சேந்தமங்கலம் (தனி), பி. பூமலர் ஆகியோர் போட்டியிடுகிறார்கள்.

இராசிபுரம் (தனி) - டாக்டர் மா. மதிவேந்தன், வீரபாண்டி - டாக்டர் ஆ. கா. தருண், சேலம் தெற்கு - எம். லோகநாதன், சேலம் வடக்கு - இரா. இராஜேந்திரன், சங்ககிரி - மு. மணிகண்டன், எடப்பாடி - காசி, மேட்டூர் - மிதுன் சக்ரவர்த்தி, ஏற்காடு (தனி) டி. எம். ரேவதி மாதேஸ்வரன், கெங்கவல்லி (தனி) - கு. சின்னதுரை, சங்கராபுரம் - தா. உதயசூரியன், ரிஷிவந்தியம் - வசந்தம் கார்த்திகேயன், உளுந்தூர்பேட்டை - ஜி. ஆர். வசந்தவேல், திருக்கோயிலூர் - டாக்டர் பொன். கௌதமசிகாமணி, விக்கிரவாண்டி - அன்னியூர் சிவா (எ) அ. சிவசண்முகம், விழுப்புரம் - டாக்டர் இரா. லட்சுமணன், வானூர் (தனி) - கௌதம் திராவிடமணி, செஞ்சி - கே.எஸ். மஸ்தான், வந்தவாசி (தனி) - எஸ். அம்பேத்குமார், செய்யாறு - ஓ. ஜோதி, ஆரணி - மகாலட்சுமி கோவர்த்தனன், கலசப்பாக்கம் - பெ. =சு. தி. சரவணன், கீழ்பென்னாத்தூர் - கு. பிச்சாண்டி, திருவண்ணாமலை -எ. வ. வேலு, செங்கம் - மு. பெ. கிரி

அரூர் - அ. சண்முகம், பாப்பிரெட்டிப்பட்டி - முனைவர் பெ. பழனியப்பன், பாலக்கோடு - டாக்டர் டி.என்.வி. செந்தில் குமார். ஒசூர் - எஸ்.ஏ. சத்யா, வேப்பனஹள்ளி - பி. எஸ். சீனிவாசன், பர்கூர் - தே. மதியழகன், திருப்பத்தூர் - அ. நல்லதம்பி, ஜோலார்பேட்டை - கவிதா தண்டபாணி, ஆம்பூர் - அ.செ. வில்வநாதன், கீழ்வைத்தினாங்குப்பம் (தனி)- டாக்டர். ராஜேஸ்வரி மோகன்காந்தி, அணைக்கட்டு - ஏ.பி. நந்தகுமார், வேலூர் - ப. கார்த்திகேயன், ஆற்காடு - ஜெ.எல். ஈஸ்வரப்பன், இராணிப்பேட்டை - வினோத் காந்தி, காட்பாடி - துரைமுருகன், காஞ்சிபுரம் - நித்யா சுகுமார், உத்திரமேரூர் - க. சுந்தர், மதுராந்தகம் (தனி) - எஸ். அமுலு பொன்மலர், செங்கல்பட்டு - எம்.கே.டி. கார்த்திக் தண்டபாணி, தாம்பரம் - டாக்டர் ஆர்.எஸ். கிருத்திகாதேவி, ஆலந்துர் - தா. மோ. அன்பரசன், சோழிங்கநல்லூர் - ச. அரவிந்த் ரமேஷ், மயிலாப்பூர் - தா. வேலு, தியாகராயநகர் - ராஜா அன்பழகன்

சைதாப்பேட்டை - மா. சுப்பிரமணியன், விருகம்பாக்கம் - பிரபாகர்ராஜா, அண்ணாநகர் - நே. சிற்றரசு, ஆயிரம் விளக்கு - டாக்டர் எழிலன் நாகநாதன், சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி - உதயநிதி ஸ்டாலின், துறைமுகம் - பிகே சேகர்பாபு, இராயபுரம் - டாக்டர் சுபேர்கான், எழும்பூர் (தனி) - தமிழன் பிரசன்னா, திரு.வி.க. நகர் (தனி) - கே.எஸ். ரவிச்சந்திரன், வில்லிவாக்கம் - கார்த்திக் மோகன், பெரம்பூர் - ஆர்.டி. சேகர், டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் - ஜே.ஜே. எபினேசர், மாதவரம் - எஸ். சுதர்சனம், அம்பத்தூர் - டாக்டர் பூர்ணிமா, மதுரவாயல் - காரம்பாக்கம் கணபதி, ஆவடி - சா.மு. நாசர், பூந்தமல்லி - ஆ. கிருஷ்ணசாமி, திருவள்ளூர் - வி.ஜி. ராஜேந்திரன், கும்மிடிப்பூண்டி - டி.ஜெ. கோவிந்தராஜன், கொளத்தூர் - மு.க. ஸ்டாலின் போட்டியிடுகிறார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## எதிரிகளுக்கு உதவுவதை நிறுத்துங்கள்: ஈரான் அதிபர் எச்சரிக்கை



**ஈரான், மார்ச் 29:**

இஸ்ரேல் அமெரிக்காவுடன் இணைந்து கடந்த 1 மாதமாக ஈரான் மீது கூட்டுத் தாக்குதல் நடத்தி வருகிறது.

இதற்கு பதிலடியாக ஈரான், யுஏஇ, சவூதி அரேபியா, கத்தார், பஹ்ரைன் உள்ளிட்ட மத்திய கிழக்கு வளைகுடா நாடுகளில் அமைந்துள்ள அமெரிக்க படைத்தளங்களை தாக்கி வருகிறது.

இன்று சவுதி அரேபியாவில் உள்ள அமெரிக்காவின் பிரின்ஸ் சுல்தான் படைத்தளம் தாக்கப்பட்டதில் அமெரிக்க வீரர்கள் காயமடைந்துள்ளனர்.

இந்நிலையில் ஈரான் அதிபர் மசூத் பெசஸ்கியான் அண்டை நாடுகளுக்கு எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

அவர் கூறியதாவது, "ஈரான் ஒருபோதும் போரைத் தானாகத் தொடங்காது. ஆனால், ஈரானின் உள்கட்டமைப்புகள் அல்லது பொருளாதார மையங்கள் குறிவைக்கப்பட்டால், அதற்கு மிக வலிமையான பதிலடி கொடுக்கப்படும்.

உங்கள் நாட்டில் வளர்ச்சி, அமைதி மற்றும் பாதுகாப்பை நீங்கள் விரும்பினால், உங்கள் நிலத்தைப் பயன்படுத்தி எதிரிகள் போர் நடத்த அனுமதிக்காதீர்கள்.

அண்டை நாடுகளுடன் நிலையான மற்றும் சுமூகமான உறவையே ஈரான் விரும்புகிறது.

ஆனால் அந்த நாடுகளின் ராணுவத் தளங்களைப் பயன்படுத்தி ஈரான் மீது தாக்குதல் நடத்தப்பட்டால், அதற்கு அந்த நாடுகளே பொறுப்பேற்க நேரிடும்" என்று எச்சரித்துள்ளார்.

# தே.மு.தி.க வேட்பாளர் பட்டியல் வெளியீடு!

**சென்னை, மார்ச் 29:** தமிழ்நாட்டில் சட்டமன்ற தேர்தலை சந்திக்க தி.மு.க. 20-க்கும் மேற்பட்ட கட்சிகளுடன் இணைந்து மெகா கூட்டணியை உருவாக்கி உள்ளது.

இந்த கூட்டணியில் காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள், கம்யூனிஸ்டுகள், ம.தி.மு.க., தே.மு.தி.க. உள்ளிட்ட முக்கியமான கட்சிகள் அனைத்தும் இடம் பெற்று உள்ளன.

இதில் தே.மு.தி.க வுக்கு 10 தொகுதிகள் ஒதுக்கப்பட்டன. இதற்கிடையே இன்று கூட்டணி கட்சிகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகுதிகளை திமுக அறிவித்தது.

இதைத்தொடர்ந்து தேமுதிகவுக்கு ஒதுக்கப்பட்ட தொகுதிகளில் போட்டியிடும் வேட்பாளர் பட்டியல் வெளியாகி உள்ளது.



அதன்படி தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விருத்தாச்சலம் தொகுதியில் போட்டியிடும் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

அதேபோல் அவரது மகன் விஜய பிரபாகரன் விருதுநகர் தொகுதியில் போட்டியிடுகிறார்.

மேலும், தருமபுரி - இளங்கோவன்

சேலம் மேற்கு - அழகாபுரம் மோகன்ராஜ்

ஓமலூர் - ஏ.ஆர். இளங்கோவன்

மயிலம் - எல். வெங்கடேசன்

பல்லாவரம் - அனகை முருகேசன்

திருத்தணி - டி. கிருஷ்ணமூர்த்தி

குடியாத்தம் - கே.பி. பிரதாப்

போளூர் - டிபி சரவணன்

போட்டியோடுகின்றனர்.

இந்த தேர்தலில் தேமுதிக, 6 தொகுதிகளில் அதிமுகவின் இரட்டை இலையை எதிர்த்தும், மீதமுள்ள 4 தொகுதிகளில் அன்புமணி பாமகவின் மாம்பழ சின்னத்தை எதிர்த்தும் போட்டியிடுகிறது. விருத்தாசலத்தில் பிரேமலதா மாம்பழம் சின்னத்தை எதிர்த்து போட்டியிடுகிறார். அதேபோல் விஜய பிரபாகரன் ஏற்கனவே மக்களவை தேர்தலில் விருதுநகர் தொகுதியில் போட்டியிட்டு தோற்ற நிலையில் தற்போது சட்டமன்றத் தேர்தலில் விருதுநகரில் மீண்டும் களமிறங்குவது குறிப்பிடத்தக்கது.




# 26 வயது இளம் வேட்பாளருக்கு வாய்ப்பு கொடுத்த திமுக!

**சென்னை, மார்ச் 29:** திமுக கூட்டணியில் போட்டியிட உள்ள மதிமுக வோட்பாளர்கள் பெயர்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

திமுக வேட்பாளர் பட்டியலில் இளம் வயது வேட்பாளராக கோகிலாமணி (26), அவிநாசி (தனி) தொகுதியில் போட்டியிடுகின்றார். திமுக வேட்பாளர்களில் இவரே குறைந்த வயதுள்ளவர்.

எம்பிபிஎஸ் மருத்துவப்படிப்பு படித்துள்ள கோகிலாமணி, மூன்று ஆண்டுகள் தனியார் மருத்துவமனையில் பணியாற்றி, பின்னர் கடந்தாண்டு ஆகஸ்ட் முதல் அவிநாசி வட்டத்தில் ஆரம்ப சுகாதார நிலைய அரசு மருத்துவராக பணியாற்றி வருகிறார். இவர் முதல் முறையாகத் தேர்தலில் போட்டியிடுகின்றார்.

அவிநாசி (தனி) தொகுதியில் கடந்த 1996-க்குப் பிறகு நடைபெற்ற எந்த சட்டப்பேரவைத் தேர்தலிலும் திமுக வெற்றிபெறவில்லை. 2001, 2006, 2011, 2016, 2021 எனத் தொடர்ந்து 5 முறையாக இந்தத் தொகுதி அதிமுக-வின் வசமுள்ளது.

இந்தத் தொகுதியில் அதிமுக சட்டப்பேரவைத் தலைவராக



இருந்த ப.தனபால் கடந்த இரு சட்டப்பேரவைத் தேர்தல்களில் தொடர்ந்து வெற்றி பெற்று எம்.எல்.ஏ.-ஆக உள்ளார்.

இதில், கடந்த 2016 -ம் ஆண்டுத் தேர்தலில் 30,674 வாக்குகள் வித்தியாசத்திலும் 2021-ம் ஆண்டு தேர்தலில் 50,902 வாக்குகள் வித்தியாசத்திலும் திமுக வேட்பாளர்கள் தோல்வியடைந்தனர்.

ஆனால், தற்போது நடைபெறவுள்ள 2026 சட்டப்பேரவைத் தேர்தலில் அவிநாசி தொகுதியில் அதிமுகவுக்கு பதிலாக கூட்டணி கட்சியான பாஜக போட்டியிடுகின்றது.

எனவே, இந்தத் தொகுதி அதிமுகவின் வெற்றியைத் தக்கவைக்குமா அல்லது திமுகவின் இளம் வேட்பாளர் வசம் செல்லுமா என்பது கேள்விக்குறியாக உள்ளது.



# திருக்குறள் குறள்-573

பண்ணென்னாம் பாடற் கியைபின்றேற்
கண்ணென்னாங்கண்ணோட்டம் இல்லாத கண்



பாடலோடு பொருந்துதல் இல்லையானால் இசை என்ன பயனுடையதாகும், அதுபோல் கண்ணோட்டம் இல்லாவிட்டால் கண் என்ன பயனுடையதாகும்.

## சிந்திக்க ஒரு நொடி



எப்போதாவது கிடைப்பது
வாய்ப்பு
எப்போதும்
கிடைப்பது வியப்பு

விவேகம் இருந்தால்
வியப்பை வாய்ப்பாக
மாற்றலாம்

**ராஜகோபாலன்.J**
பெங்களூரு

## வசந்த நவராத்திரி விழாவில் சிறப்பு அலங்காரத்தில் நம் வாசவி அம்மன் 9-ஆம் நாள் உற்சவம்



**சென்னை, மார்ச்29:**
திருவள்ளூர் ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் திருக்கோயிலில் பராபவ வருஷ வசந்த நவராத்திரியை முன்னிட்டு நவராத்திரி 9-ஆம் நாள் உற்சவத்தில் சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்கரித்து, மூலவர் நம் வாசவி அம்மன் (தங்க தாமரையில் குங்கும காப்பு ) சிறப்பு அலங்காரமும், உற்சவர் (அன்னபூரணி) அலங்காரமும், பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகா தீபாராதனையும் நடைபெற்றது. ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும் பூஜையில் கலந்து கொண்டு வாசவி அம்மனை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.

## ஊஞ்சல் உற்சவம்



தஞ்சாவூர் மகர்நோம்புச்சாவடி V.P. கோவில் தெருவில் அமைந்துள்ள ஸ்ரீதேவி பூதேவி ஸ்ரீஅலமேலு மங்கா ஸமேத ஸ்ரீ ப்ரஸன்ன வேங்கடேஸப் பெருமாள் திருக்கோவிலில் நேற்று (27.03.2026) ஆங்கில மாதத்தின் கடைசி வெள்ளிக்கிழமை முன்னிட்டு காலை தாயாருக்கு திருமஞ்சனம், மாலை 7 மணி அளவில் ஸ்ரீ அலமேலு மங்கை தாயார் பிரகார புறப்பாடு மற்றும் ஊஞ்சல் சேவை சிறப்பாக நடைபெற்றது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர். இதில் கலந்து கொண்ட அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது. நிகழ்ச்சி ஏற்பாடுகளை கோவில் நிர்வாக பரம்பரை அறங்காவலர் திரு.B.S. சேஷாத்திரி அவர்கள், ஸ்ரீ அலமேலு மங்கை தாயார் ஊஞ்சல் சேவை குழு மற்றும் உபயதாரர்கள் செய்து இருந்தனர். செய்தி: தேனே T.P.குமரன், மகர்நோம்புச்சாவடி, தஞ்சாவூர்

# வசந்த நவராத்திரி 9-ஆம் நாள் நிறைவு நாள் உற்சவம் சிறப்பு வழிபாடு

**திருவண்ணாமலை , மார்ச் 29:**
திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில் வசந்த நவராத்திரி உற்சவம் 9-ஆம் நாள் நிறைவு நாள்( அனைத்து வளங்களும் கிட்டும் ) ஸ்ரீமீனாட்சி அம்மனுக்கு சிறப்பு அபிஷேகங்கள், வண்ண மலர் மாலைகளால் அலங்கரித்து, வேத மந்திரங்கள் ஒலிக்க, சிறப்பு பூஜைகள், பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் மகா தீபாராதனையும் நடைபெற்றது.
ஏராளமான பக்தர்கள் வசந்த நவராத்திரி உற்சவத்தில் கலந்துகொண்டு மீனாட்சி அம்மனை வேண்டி அருள் பெற்றனர். வசந்த நவராத்திரி உற்சவம் 9 நாட்களும் வெகு சிறப்பாக நடைபெற்றது. அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை



# TNGPA ன்வேலூர் மண்டல கருத்தரங்கம்

**வேலூர், மார்ச் 29:**
தமிழ்நாடு அரசு அனைத்து துறை ஓய்வூதியர் சங்கம் மாநில முழுவதும் மண்டல கருத்தரங்கம் வேலூர் சத்துவாச்சாரி தனியார் மண்டபத்தில் 28.3.26காலை 10 மணிக்கு எம். பன்னீர்செல்வம் மாவட்ட தலைவர் வேலூர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. முன்னிலை ராஜி மாவட்ட தலைவர் திருப்பத்தூர். வரவேற்புரை எம். சுந்தரேசன் மாவட்ட தலைவர் ராணிப்பேட்டை. சிறப்புரை ரவி மாநில பொதுச் செயலாளர், கருத்துரை அரசும் நாமும் பி. கிருஷ்ணமூர்த்தி TNGPA மாநிலத் துணைத் தலைவர், அகில இந்திய துணைப் பொதுச் செயலாளர். அமைப்பும் கோரிக்கைகளும் மாநில துணைத்தலைவர் ஆர். சுப்பிரமணியம். மண்டல கருத்தரங்கத்தில் வேலூர் ,ராணிப்பேட்டை, திருப்பத்தூர், திருவண்ணாமலை மாவட்ட ,வட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள். நன்றி உரை பி. கிருஷ்ணமூர்த்தி மாவட்ட தலைவர் திருவண்ணாமலை. மதிய உணவு அனைவருக்கும் சிறப்பாக வேலூர் மாவட்டத்தின் சார்பில் வழங்கப்பட்டது. கருத்தரங்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்தது.




# தவக்கால வழிபாட்டில் யேசுவின் திருப்பாடுகள்



வடகரை,"புனித லூர்து அன்னை" ஆலயத்தில் தவக்கால சிலுவைப் பாதை வழிபாட்டில் யேசுவின் திருப்பாடுகள் மேடையில் காட்சிப்படுத்தப் பட்டது.செய்தி குடந்தை பரிபூரணன்.

# "ஆன்மீகத்தேடல் " முதல் பாகம் நூல் லண்டன் மாநகரில் வெளியீடு .



இலங்கையில் சாகித்திய மண்டல பரிசுபெற்ற எழுத்தாளர் இரா. உதயணன் அவர்களின் ஆன்மீகத் தேடல் நூல் வெளியீடு அண்மையில் லண்டன் மாநகரில் உள்ள லெவிஷம் சிவன் கோவில் வளாகத்தில் நடைபெற்றது. நூலின் முதல் பிரதியை தினேஸ் நகைக்கடை உரிமையாளர் திரு. கேதீஸ்வரன் பெற்றுக்கொண்டு வாழ்த்துரை வழங்கினார். படத்தில் திரு இரா, உதயணன். நூலாசிரியர் திரு, நா, புஸ்பநாதன், செல்வி கயனிஷா சஜீவன், திரு, கேதீஸ்வரன் தினேஸ் நகைக்கடை உரிமையாளர்,

## ஸ்ரீ கோதண்டராமர் பட்டாபிஷேக சேவை



மாம்பலம் ஸ்ரீகோதண்டராமர் ஸன்னதி விஸ்வாவஸ் வருட ஸ்ரீராம நவமி 27.03.2026 வெள்ளிக்கிழமை இரவு 7.30 மணியளவில் ஸ்ரீ கோதண்டராமர் பட்டாபிஷேக சேவையில் மாட வீதி புறப்பாடு நடைபெறும்.

## பறக்கும் படையினர் வாகன தணிக்கை சோதனை



**திருவண்ணாமலை மார்ச்29:**
சோ. கீழ்நாச்சிப்பட்டு திண்டிவனம் சாலையில் பறக்கும் படையினர் வாகன தணிக்கை சோதனையில் ஈடுபட்டு வருவதை திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் க. தர்ப்பகராஜ் இ.ஆ.ப. அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீ தர் திருவண்ணாமலை

# வைகுண்டவாச பெருமாள் திருக்கோயிலில் ஸ்ரீராமநவமி சிறப்பு வழிபாடு

**திருவண்ணாமலை , மார்ச் 29:**
திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் தெலுங்கு அக்ரஹாரம், லால் பகதூர் தெருவில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ வைகுண்ட வாசல் பெருமாள் திருக்கோயிலில் ஸ்ரீராம நவமியை முன்னிட்டு ரமேஷ் ஐயர் அவர்களால் ஸ்ரீதேவி,பூமிதேவி, வைகுண்டவாச பெருமாளுக்கும், உற்சவருக்கும் சிறப்பு அபிஷேகங்கள் வண்ணமலர் மாலைகளால் அலங்காரங்கள் மற்றும் ஆஞ்சநேயருக்கு வண்ண மலர்களால் அலங்கரித்து, வெற்றிலை மாலை, வடை மாலையுடன் பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகா தீபாராதனையும் நடைபெற்றது.
ஏராளமான பக்தர்கள் ஸ்ரீராமர், லக்ஷ்மணர், ஆஞ்சநேயர், சீதாதேவியையும் வேண்டி அருள் பெற்றனர். பிரசாதம் கேசரி, பானகம், புளியோதரை, நீர்மோர் அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை



# மேல்பாதி ஸ்ரீ விஜயராகவப் பெருமாள் கோவிலில் ஸ்ரீ ராம நவமி வைபவம்

**வந்தவாசி, மார்ச் 29:**
திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த மேல்பாதி ஸ்ரீவிஜயராகவப் பெருமாள் கோவிலில் ஸ்ரீ ராம நவமி உற்சவம் முன்னிட்டு மூல மூர்த்திகள் மற்றும் உற்சவ மூர்த்திகளுக்கு விசேஷ திருமஞ்சனம் நடந்தேறியது.
பிறகு புஷ்ப அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்தனர். உலக நன்மைக்காக சிறப்பு பிரார்த்தனை நடைபெற்றது. இந்த வைபவத்தில் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து திரளான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.
பங்கேற்ற அனைவருக்கும் தீர்த்த பிரசாதங்கள் வழங்கப்பட்டது.



பா. சீனிவாசன்,
வந்தவாசி.

# செய்யாறில் திருக்குறள் திருப்பணிகள் திட்டம் சார்பில் 25 ஆவது வார திருக்குறள் பயிற்சி வகுப்பு

**செய்யாறு மார்ச் .29:**
செய்யாறில் மாவட்ட தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் திருக்குறள் பயிற்சி வகுப்பு நேற்று நடைபெற்றது.
திருவண்ணாமலை மாவட்ட தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் திருக்குறள் திருப்பணிகள் திட்டம் சார்ந்து செய்யாறு அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் திருக்குறள் பயிற்சி வகுப்பு நேற்று நடைபெற்றது.
நிகழ்ச்சிக்கு திருக்குறள் முதன்மைப் பயிற்சியாளர் கவிஞர் எறும்பூர் கை. செல்வகுமார் தலைமை தாங்கி பயிற்சி அளித்தார்.
மாணவிகள் 19 பேர், மாணவர்கள் ஆறு பேர் , பெரியவர்கள் மூன்று பேர், பயிற்சியாளர் ஒருவர் என நேற்றைய பயிற்சி வகுப்பில் 29 பேர் கலந்து கொண்டனர்.



# தேர்தல் கொண்டாட்டம் 2026



## தேர்தல் களப்பணியில்...

### தேர்தல் பிரசாரத்தில் களமிறங்கும் உதயநிதி ஸ்டாலின்; பிரசார வாகனம் தயார்



தமிழக சட்டசபை தேர்தல் அடுத்த மாதம் 23ம் தேதி வெளியாக உள்ளது. தேர்தலில் பதிவாகும் வாக்குகள் மே 4ம் தேதி எண்ணப்பட்டு முடிவுகள் அன்றே அறிவிக்கப்பட உள்ளன.

தேர்தலில் திமுக கூட்டணியில் காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள் உள்பட பல்வேறு கட்சிகள் இடம்பெற்றுள்ளன. கூட்டணி கட்சிகளுக்கு 70 தொகுதிகளை ஒதுக்கிய திமுக மிதமுள்ள 164 தொகுதிகளில் போட்டியிட உள்ளது.

தேர்தல் நெருங்கி வரும் நிலையில் திமுக இளைஞரணி செயலாளரும், துணை முதல்-அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் விரைவில் பிரசாரத்தை தொடங்க உள்ளார்.

இந்நிலையில், உதயநிதி ஸ்டாலின் பிரசாரத்தில் ஈடுபடும் வாகனம் தயார் நிலையில் உள்ளது. உதயநிதி ஸ்டாலின் பிரசார வாகனத்தில் ஸ்டாலின் தொடரட்டும் தமிழ்நாடு வெல்லட்டும் என்ற வாசகம் இடம்பெற்றுள்ளது.

### அமமுக வேட்பாளர் பட்டியல் வெளியானது!



தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இடம்பெற்றுள்ள அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் போட்டியிடும் 11 தொகுதிகளின் வேட்பாளர்கள் பட்டியலை கட்சியின் பொதுச் செயலர் டிடிவி தினகரன் வெளியிட்டார்.

தமிழக சட்டப்பேரவையில் அதிமுக கூட்டணியில் பாஜக, அமமுக உள்ளிட்ட கட்சிகள் இணைந்து போட்டியிடும் நிலையில், அமமுக போட்டியிடும் 11 தொகுதிகளின் விவரங்களை அதிமுக பொதுச் செயலர் எடப்பாடி பழனிசாமி கடந்த வாரம் வெளியிட்ட நிலையில், அந்தத் தொகுதிகளில் போட்டியிடும் வேட்பாளர் விவரங்கள் இன்று வெளியாகியிருக்கிறது.

11 தொகுதிகளில், பூவிருந்தமல்லி (தனி) - ஏழுமலை, மன்னார்குடி - எஸ் காமராஜ், சைதாப்பேட்டை - செந்தமிழன், மடத்துக்குளம் முன்னாள் அமைச்சர் சண்முகவேலு, காரைக்குடி - தேர்போகி பாண்டி, திருப்பத்தூர் - ஞானசேகரன், திருச்சி மேற்கு - தொட்டியம் ராஜேசேகரன், ஒட்டப்பிடாரம் (தனி)- சுந்தர்ராஜன், பெரியகுளம் (தனி) - கதிர்காமு, நான்குநேரி - இசக்கிமுத்து, திருவையாறு - வேலுகார்த்திகேயன் ஆகியோர் போட்டியிடுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### நெல்லையில் எடப்பாடி பழனிசாமி பிரசாரம்


தமிழகத்தில் அ.தி.மு.க. தலைமையில் தேசிய ஜனநாயக கூட்டணி இடஒதுக்கீடுகள் முடிவு செய்யப்பட்டு அறிவிப்புகள் வெளியிடப்பட்டு உள்ளன. இதில் அ.தி. மு.க. 169 தொகுதிகளில் போட்டியிடுகிறது. இதற்காக 2 கட்டங் களாக 150 வேட்பாளர் பட்டியலை அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி அறிவித்து விட்டார். இதில் நெல்லை, தென்காசி, தூத்துக்குடி மாவட்டங்களில் அ.தி.மு.க. போட் டியிட உள்ள தொகுதிகளுக்கான வேட்பாளர்கள் பெயர்களையும் அறிவித்து உள்ளார்.

சென்னையில் தனது பிரசார பயணத்தை தொடங்கிய அவர், தொகுதி வாரி யாக சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகிறார். நாளை (ஞாயிற்றுக்கிழமை) எடப்பாடி பழனிசாமி கன்னியாகுமரி மாவட்டத்தில் பிரசாரம் செய்கிறார்.பின்னர் அங்கிருந்து புறப்பட்டு நெல்லை டவுன் வாகையடி முக்கு பகுதிக்கு வருகிறார்.

அங்கு திறந்த ஜீப்பில் நின்றவாறு நெல்லை தொகுதி வேட்பாளர் தச்சை என்.கணேசராஜா, பாளையங்கோட்டை தொகுதி வேட்பாளர் சையயது சுல் தான் சம்சுதீன் ஆகியோரை அறிமுகம் செய்து, அவர்களை ஆதரித்து பிரசாரம் செய்கிறார். இதையொட்டி நெல்லை மாவட்டத்தில் அ.தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சியி னர் உற்சாகம் அடைந்துள்ளனர். தேர்தல் பிரசார வேலைகளில் களம் இறங்கி மும்முறமாக ஈடுபட்டு வருகின்றனர்.

மறுநாள் 30-ந்தேதி (திங்கட்கிழமை) எடப்பாடி பழனிசாமி தென்காசி மற் றும் தூத்துக்குடி மாவட்டங்களில் பிரசாரம் மேற்கொள்ள திட்டமிட்டுள்ளார்.

## 2026 பொதுத் தேர்தல்கள் மற்றும் இடைத்தேர்தல்கள்: களத்தில் 1,955 வேட்பாளர்கள் - இந்திய தேர்தல் ஆணையம்




இந்திய தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது;-

1. அஸ்சாம், கேரளா, புதுச்சேரி, தமிழ்நாடு மற்றும் மேற்கு வங்காள சட்டப்பேரவைகளுக்கான பொதுத் தேர்தல் மற்றும் 6 மாநிலங்களில் நடைபெறவுள்ள இடைத்தேர்தல்களுக்கான கால அட்டவணையை இந்தியத் தேர்தல் ஆணையம் (ECI) மார்ச் 15, 2026 அன்று அறிவித்தது.

2. ஏப்ரல் 9, 2026 அன்று வாக்குப்பதிவு நடைபெறவுள்ள அஸ்சாம் மற்றும் கேரளா மாநிலங்கள் மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசம் மற்றும் 4 மாநிலங்களில் இடைத்தேர்தல்களுக்கு வேட்புமனு தாக்கல் செய்வதற்கான கடைசி நாள் மார்ச் 23, 2026 ஆகும். வேட்புமனுக்களைத் திரும்பப் பெறுவதற்கான கடைசி நாள் மார்ச் 26, 2026, மாலை 3:00 மணி வரை ஆகும்.

3. மொத்தம் 250 வேட்பாளர்கள் தங்கள் வேட்புமனுக்களைத் திரும்பப் பெற்றுள்ளனர், அதன்படி, போட்டியிடும் வேட்பாளர்களின் மொத்த எண்ணிக்கை விவரங்கள் பின்வருமாறு:

வ. எண் மாநிலம்/ யூனியன் பிரதேசத்தின் பெயர் சட்டப்பேரவைகளின்எண்ணிக்கை (NO. OF ACS) திரும்பப் பெற்ற பிறகு வேட்பாளர்களின் மொத்த எண்ணிக்கை

4. தேர்தல் நடத்தும் அலுவலர்கள் (ROS), தேர்தல் நடத்தும் விதிகள், 1961-ன் படி போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியலை அரசிதழில் (OFFICIAL GAZETTE) வெளியிட வேண்டும்.

5. தேர்தல் நடத்தும் அலுவலர்கள், ஒவ்வொரு தொகுதியிலும் வேட்புமனு தாக்கல், பரிசீலனை மற்றும் வேட்புமனுக்கள் திரும்பப் பெறுதல் தொடர்பான அனைத்து தேர்தல் ஆவணங்கள் மற்றும் நடவடிக்கைகளைத் தனது பாதுகாப்பில் முத்திரையிடப்பட்ட உறையில் வைத்து முத்திரையிட வேண்டும்.

6. மேலும், தேர்தல் ஆணையத்தின் முன்முயற்சியின்படி, வாக்காளர்களின் வசதிக்காக, மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் (EVM) வாக்குச் சீட்டுகளில் வேட்பாளர்களின் வண்ணப் புகைப்படங்கள் மற்றும் வரிசை எண், பெயர் மற்றும் சின்னம் உள்ளிட்ட விவரங்கள் பெரிய எழுத்துருவில் இடம்பெறும்

## இவிஎம் இயந்திரங்கள் தொகுதிவாரியாக அனுப்பும் பணி தொடக்கம்



தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் மாவட்ட அளவில் கணினி குலுக்கல் மூலம் பிரிக்கப் பட்ட வாக்குப்பதிவு இயந்திரங் கள், தொகுதிவாரியாக அனுப் பும் பணி நேற்று தொடங்கியது.

தமிழக சட் டப்பேரவைத் தேர்தலில் பயன்படுத்த வேண் டிய மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் (இவிஎம்) மற் றும் வாக்காளர், தான் செலுத் திய வாக்கினை சரிபார்க்கும் கருவிகளின் (விவிபாட்) முதற் கட்ட பரிசோதனைக்கு பிறகு, அந்தந்த மாவட்ட தேர்தல் அதி காரிகள் கட்டுப்பாட்டில் பாது காப்பாக வைக்கப்பட்டுள்ளன.

இந்த தேர்தலில் மொத்தம் தலா 90 ஆயிரம் கட்டுப்பாட்டு கருவிகள் மற்றும் வாக்குப்பதிவு இயந்திரங்கள், 97,500 விவிபாட் கருவிகள் பயன்படுத்தப்பட உள் ளன. இதில் பயன்பாடு போக, பழுதாகும்போது மாற்றுவதற் கான 20 சதவீத இருப்பு வைப்பு இயந்திரங் களும் அடங்கும். மாவட்ட அளவில் வைக்கப்பட் டுள்ள இந்த இயந்திரங்களை, அங்கீகரிக்கப்பட்ட கட்சி பிரதி நிதிகள் மற்றும் மாவட்ட தேர் தல் அதிகாரிகள் முன்னிலை யில் கணினி குலுக்கல் முறை யில் தொகுதிவாரியாக பிரிக்கும் பணி மார்ச் 23-ல் நடைபெற் றது. அதைத் தொடர்ந்து, இயந் திரங்களை தொகுதிவாரியாக, தேர் தல் நடத்தும் அலுவலர் அலுவலகம் செயல்படும் வைப் பறைக்குக் கொண்டு செல்லும் பணி, அனைத்து அங்கீகரிக்கப் பட்ட அரசியல் கட்சி பிரதிநி திகள் முன்னிலையில் நேற்று தொடங்கியது. அதன்படி சென் னையில் மாவட்ட தேர்தல் அதி காரி ஜெ.குமரகுருபரன் தலை மையில் நடைபெற்றது.

இதே போன்று அனைத்து மாவட் டங் களிலும், அந்தந்த மாவட்ட தேர்தல் அதிகாரிகள் தலைமையில் பணிகள் நேற்று தொடங்கின.

தமிழகம் முழுவதும் தேர்தல் பணியில் ஈடுபடும் அனைத்து வாக்குச்சாவடி அலுவலர்களுக் கும், அந்தந்த தேர்தல் நடத்தும் அதிகாரி அலுவலக வளாகத்தில் பயிற்சிகள் வழங்கப்பட உள்ளன.

## தமிழ்நாட்டில் இதுவரை ரூ.273 கோடி ரொக்கம், பொருள் பறிமுதல்



தமிழ்நாட்டில் தேர்தல் நடத்தை விதிகள் அமல்படுத்தப்பட்டதில் இருந்து இதுவரை ரூ.273 கோடி மதிப்பிலான பணம் மற்றும் பரிசு பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

தமிழகத்தின் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான தேதி அறிவிக்கப்பட்ட நிலையில் தேர்தல் நடத்தை விதிகள் அமலில் உள்ளன. இதன்படி, தனிநபர் ஒருவர் எவ்வித ஆவணங்களும் இன்றி ரூ. 50,000 வரை ரொக்கமாக எடுத்துச் செல்லலாம். அதற்கு மேலாக உரிய ஆவணங்கள் இன்றி எடுத்துச் செல்லப்படும் பணம் மற்றும் பிற பொருள்கள் தேர்தல் ஆணையத்தால் பறிமுதல் செய்யப்பட்டு வருகின்றன.

இதற்காக தேர்தல் செலவினக் கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்தது முதல் தமிழகத்தில் இதுவரை ரூ.273 கோடி மதிப்பிலான பணம் மற்றும் பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக தமிழகத் தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தகவல் தெரிவித்துள்ளார்.

அதில் ரொக்கமாக ரூ. 44.89 கோடி பணம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தில் 234 தொகுதிகளுக்கு வருகிற ஏப்ரல் 23 ஆம் தேதி ஒரேகட்டமாக தேர்தல் நடைபெறுகிறது. வாக்கு எண்ணிக்கை மே 4 ஆம் தேதி நடைபெற்று முடிவுகள் அறிவிக்கப்படுகின்றன.

## “பழனிசாமி பாஜகவை மட்டும் நம்பிக் கொண்டு இருக்கிறார்” - கிருஷ்ணசாமி



பழனிசாமி பாஜக-வை மட்டுமே நம்பிக் கொண்டு இருப்பதாக புதிய தமிழகம் கட்சி தலைவர் கிருஷ்ணசாமி தெரிவித்தார்.

இது தொடர்பாக நேற்று சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் அவர் பேசியதாவது: தமிழகத்தில் நல்ல ஆட்சி அமைய வேண்டும் என்ற ஒரே நோக்கத்தில், அதிமுக-வுடன் கூட்டணி அமைத்தோம். ஆனால், அவர்கள் எங்களை மதிக்கவில்லை; புறக்கணித்து உதாசீனப்படுத்துகின்றனர். பழனிசாமி பாஜக-வை மட்டுமே நம்பிக் கொண்டு இருக்கிறார்.

அமித் ஷா, தன்னை தூக்கிக் கொண்டு போய், செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் அமர வைத்துவிடுவார் என்று நினைக்கிறார். இதனால் அதிமுக, பாஜக அடங்கிய கூட்டணியில் இருந்து நாங்கள் வெளியேறி வெகுதூரம் வந்துவிட்டோம். இனிமேல் அவர்களுக்கும் எங்களுக்கும் ஒட்டுமில்லை உறவுமில்லை.

நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு கிடைத்த ஓட்டுகள் பிரதமராக மோடி வர வேண்டும் என்பதற்காக. பழனிசாமி முதல்வராக வரவேண்டும் என்பதற்காக இல்லை. தென் மாவட்டங்களில் அதிமுக மிகவும் பலவீனமாக உள்ளது. 50, 60 தொகுதிகளில் டெபாசிட் இழக்கும் நிலையில் இருக்கிறது. எனவே, நாங்கள் இந்தத் தேர்தலில் 60, 70 தொகுதிகளில் தனித்துப் போட்டியிட்டு, 10 அல்லது 12 தொகுதிகளில் வெற்றி பெறுவோம். இவ்வாறு அவர் கூறினார்.

## கட்சிக்கு விருப்பமான தொகுதிகள் கிடைத்துள்ளன: தொல்.திருமாவளவன்



விடுதலைச் சிறுத்தைகள் கட்சிக்கு விருப்பமான தொகுதிகள் கிடைத்துள்ளன என்று அதன் தலைவர் தொல்.திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

சென்னைதேனாம்பேட்டையில் உள்ள அண்ணா அறிவாலயத்தில் திமுக தொகுதிப் பங்கீட்டு குழுவோடு விடுதலைச்சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் வெள்ளிக்கிழமை பேச்சுவார்த்தைமேற்கொண்டார். திமுக கூட்டணியில் விசிகவிற்கு ஒதுக்கப்பட்ட 8 தொகுதிகளை அடையாளம் காண்பது தொடர்பாக இரண்டாம் கட்டமாக பேச்சுவார்த்தை நடைபெற்றது.

பேச்சுவார்த்தைக்குப் பிறகு செய்தியாளர்களைச் சந்தித்த தொல். திருமாவளவன் பேசியதாவது, திமுக பேச்சுவார்த்தை குழுவோடு இரண்டாம் கட்டமாக நடைபெற்ற பேச்சுவார்த்தையில் விசிகவின் 8 தொகுதிகள் அடையாளம் கண்டு உள்ளோம். திமுக - விசிக இடையே தொகுதிகள் அடையாளம் காணப்பட்டு ஒப்பந்தம் கையெழுத்து ஆகிவிட்டது.

எந்தெந்த தொகுதிகள் என முறைப்படி முதல்வர் அறிவிப்பார். எங்களுக்கு திருப்திகரமாக பேச்சுவார்த்தை இருந்தது. விருப்பமான தொகுதிகுகள் கிடைத்துள்ளன. அனைத்துக் கட்சிகளுக்கும் தொகுதி ஒதுக்கிய பிறகு முதல்வர் நாளை அறிவிப்பார்.

திமுக கூட்டணியில் கடைசி நேரத்தில் ஏதாவது பிரச்னை ஏற்படுமா என காத்து இருப்பவர்கள் ஏமாந்து தான் போவார்கள். எங்கள் கூட்டணியில் அதிக கட்சிகள் உள்ளதால் தனித்தனியாக ஒவ்வொரு கட்சியையும் அழைத்துப் பேசும்போது ஒரு கட்சி கேட்கும் தொகுதியை மற்றொரு கட்சியும் கேட்கக்கூடிய சூழல் இருப்பதால் தாமதம் இருக்கத்தான் செய்யும். எங்களுக்குள் எந்த இழுபறியும் இல்லை.

இன்று இரவு அல்லது நாளை காலை அனைத்து தொகுதிகளும் கூட்டணி கட்சிகளுக்கு ஒதுக்கப்பட்ட பின்னர் முதல்வர் அதிகாரப்பூர்வமாக அறிவிப்பார்.

புதுச்சேரியிலும் பானைச் சின்னம் ஒதுக்க வேண்டுமென தேர்தல் ஆணையத்திற்கு கடிதம் அனுப்பியுள்ளோம். ஆனால் இதுவரை எந்த பதிலும் இல்லை. எனவே, பானைச் சின்னத்தையும் ஒதுக்கவில்லை. சுயேட்சை சின்னத்திலேயே புதுச்சேரியில் போட்டியிட உள்ளார்கள்.

அதிமுக கூட்டணியில் உள்ள சின்ன, சின்ன கட்சிகளுக்கு நெருக்கடிகள் தருகிறார்கள். அங்கே தாமரையிலும் இரட்டை இலையிலும் நிற்க வேண்டும் என நெருக்கடியைத் தருகிறார்கள்.

தமிழ் மாநில காங்கிரஸுக்கு ஐந்து இடங்களை கொடுத்துவிட்டு தாமரையில் நிற்க வேண்டும் என அழுத்தம் கொடுக்கிறார்கள்.

அந்த மாதிரியான பிரச்னைகள் எங்கள் கூட்டணியில் இல்லை. ஆனால் திமுக கூட்டணியில் இழுபறி என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அப்படி இல்லை.

பெரம்பூரில் தமிழக வெற்றிக் கழக தேர்தல் பிரசாரத்துக்கு காவல் துறை அனுமதி மறுத்தது குறித்தான கேள்விக்கு, விஜய்க்கு அனுமதி வழங்குவது இப்போது தேர்தல் ஆணையத்தின் கட்டுப்பாட்டில் தான் இருக்கிறது. அதற்கும் திமுகவிற்கும் எந்த சம்பந்தம் இல்லை எனத் தெரிவித்தார்.

## 14 பேர் உயிரிழப்பு: ஆந்திர பேருந்து உரிமையாளர் கைது

**மார்க்காபுரம், மார்ச் 29:**

ஆந்திர மாநிலம், மார்க்காபுரம் அருகே ராயவரம் எனுமிடத்தில் வியாழக்கிழமை அதிகாலை 6.30 மணிக்கு ஜல்லி கற்கள் ஏற்றிச் சென்ற டிப்பர் லாரியின் டீசல் டேங்க் மீது தனியார் சொகுசு பேருந்து மோதியது. இதில் பேருந்து தீப்பற்றி எரிந்ததில் 14 பயணிகள் பரிதாபமாக உயிரிழந்தனர். இதுதொடர்பாக பேருந்து உரிமையாளர் ஹரிகிருஷ்ணாவை மார்க்காபுரம் போலீஸார் நேற்று கைது செய்தனர். பேருந்து சரிவர பிரேக் பிடிக்காமலும், ஸ்டீயரிங் நின்று போனதாலும் தான் இந்த விபத்து நடந்ததாக தெரியவந்துள்ளது. இவர்கள் பேருந்தை சரிவர பராமரிக்கவில்லை எனத் தெரிகிறது.

## அயோத்தியில் 'சூரிய திலகம்' நிகழ்வு: லட்சக்கணக்கானோர் தரிசனம்

ராமபிரானின் பிறப்பைக் குறிக்கும் ராம நவமி திருநாள், நாட்டின் பல பகுதிகளில் வியாழக்கிழமை கொண்டாடப்பட்டது. இந்நிலையில், ஸ்ரீராம ஜென்ம பூமியான அயோத்தி உள்ளிட்ட பிற இடங்களில் வெள்ளிக்கிழமை கொண்டாடப்பட்டது.

அயோத்தி கோயிலில் மூலவர் ஸ்ரீபாலராமரின் நெற்றியில் சூரிய ஒளிக்கதிர்களால் திலகமிடும் நிகழ்வு வெள்ளிக்கிழமை மதியம் நடைபெற்றது. பிரத்யேக ஒளியியல் கருவியின் மூலம் சுவாமியின் நெற்றியில் 9 நிமிஷங்களுக்கு பிரகாசமான 'சூரிய திலகம்' இடப்பட்டது. அப்போது, கருவறைக்குள் வைதிக முறைப்படி 14 அர்ச்சகர்கள் சிறப்பு பூஜை நிகழ்ச்சிகளை மேற்கொண்டனர்.

சூரிய திலகம் நிகழ்வுக்குப் பிறகு கோயில் நடை சிறிது நேரம் அடைக்கப்பட்டு, சுவாமிக்கு 56 வகையான பதார்த்தங்கள் படைக்கப்பட்டதாக கோயில் அறக்கட்டளை உறுப்பினர் அனில் மிஸ்ரா தெரிவித்தார்.

அயோத்தி கோயிலில் கடந்த 2024-ஆம் ஆண்டில் ஸ்ரீபாலராமர் சிலை பிராண பிரதிஷ்டைக்குப் பிறகு நடைபெற்ற மூன்றாவது சூரிய திலகம் நிகழ்வு இதுவாகும். 4 லென்ஸ்கள், 4 பிரதிபலிப்பு கண்ணாடிகள் மற்றும் 20 பஞ்சலோக குழாய்களுடன் பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட ஒளியியல் கருவியின் மூலம் 65 அடி உயரத்தில் இருந்து சுவாமியின் நெற்றியில் சூரிய ஒளி விழச் செய்யப்படுகிறது. இந்த நிகழ்வைக் காண்பதற்காக, அயோத்தியின் பல்வேறு இடங்களில் பெரிய திரைகள் நிறுவப்பட்டிருந்தன. ஸ்ரீராமநவமி மற்றும் சூரிய திலகம் நிகழ்வையொட்டி, அயோத்தியில் சுவாமி தரிசனம் செய்ய லட்சக்கணக்கானோர் அயோத்தியில் திரண்டனர். இதனால், கோயில் வளாகம் மற்றும் ராம பாதை, பக்தி பாதை, ஜென்மபூமி பாதை போன்ற வழித்தடங்களில் பக்தர்கள் கூட்டம் அலைமோதியது. காவல் துறை, துணை ராணுவப் படை எனப் பல அடுக்குப் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. உத்தர பிரதேசத்தில் வியாழன், வெள்ளி ஆகிய 2 நாள்கள் விடுமுறை அறிவிக்கப்பட்டது.

அயோத்தி சூரிய திலகம் நிகழ்வை காணொலி வாயிலாகக் கண்டு வழிபட்டார் பிரதமர் மோடி. இது தொடர்பாக அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'அயோத்தி ஸ்ரீராம ஜென்மபூமி கோயிலில் சூரிய திலகம் நிகழ்வை காணொலி வாயிலாகக் கண்டேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

# திருவான்மியூர் மருந்தீஸ்வரர் கோயிலில் பங்குனி திருவிழா தேரோட்டம்



**சென்னை, மார்ச் 29:**

பங்குனி திருவிழாவை முன்னிட்டு திருவான்மியூர் மருந்தீஸ்வரர் கோயிலில் நாளை தேரோட்டம் நடைபெறுகிறது. சென்னையில் பழமை வாய்ந்த கோயில்களில் ஒன்றாக திருவான்மியூர் திரிபுர சுந்தரி அம்பாள் உடனுறை மருந்தீஸ்வரர் கோயில் திகழ்கிறது.

இக்கோயிலில் ஆண்டுதோறும் பங்குனித் திருவிழா 11 நாட்கள் வெகு விமரிசையாக நடைபெறும். அந்த வகையில் இந்தாண்டு பங்குனி திருவிழா கடந்த 23-ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது.

தொடர்ந்து, சூரியபிரபை, சந்திரபிரபை, தியாகராஜர் வீதி உலா நடைபெற்றது. 25-ம் தேதி அதிகார நந்தி சேவை, பூத வாகனம், திருபவனி, நடைபெற்றது.

தொடர்ந்து, புருஷாமிருக வாகனம், நாக வாகனம் வீதி உலாவும், நேற்று காலை தொட்டி விழா, பஞ்சமூர்த்திகள் வீதி உலாவும் நடைபெற்றது. இன்று யானை வாகன பவனி நடக்கிறது. விழாவின் முக்கிய நிகழ்வான தேரோட்டம் நாளை (29-ம் தேதி) காலை 7 மணிக்கு நடைபெறுகிறது.

இரவு 1 மணிக்கு தியாகராஜர் வீதி உலா நடக்கிறது. 30-ம் தேதி பரிவேட்டை விழாவும், 31-ம் தேதி திருக்கல்யாண உற்சவமும் நடக்கின்றன.

11-ம் நாள் விழாவான ஏப்.2-ம் தேதி மாலை 6 மணிக்கு தெப்ப விழாவும், அதைத் தொடர்ந்து வெள்ளியங்கிரி விமானத்தில் வீதி உலாவும் நடைபெறுகிறது.

இதேபோல், மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோயிலில் பங்குனி பெருவிழாவை முன்னிட்டு, நாளை (29-ம் தேதி) தேரோட்டமும், 30-ம் தேதி அறுபத்து மூவர் விழாவும், ஏப்.1-ம் தேதி திருக்கல்யாண உற்சவமும் நடைபெறுகிறது.

# திருவாரூர் தியாகராஜர் கோவில் ஆழித்தேரோட்டம்



**திருவாரூர், மார்ச் 29:**

திருவாரூர் தியாகராஜர் கோவில் சைவ சமயத்தின் தலைமையிடமாக திகழ்கிறது. பஞ்ச பூதங்களில் பூமிக்குரியதும், பிறந்தாலும் பெயர் சொன்னாலும் முக்தி அளிக்கிற தலமாகவும், சர்வதோஷ பரிகார தலமாகவும் விளங்குகிறது. இந்த கோவிலில் ஆழித்தேர் பிரசித்தி பெற்றது. ஆசியாவிலேயே மிகப்பெரிய தேர் என்ற பெருமைமிக்கது. ஒவ்வொரு ஆண்டு பங் குனி உத்திர திருவிழாவில் ஆழித்தேரோட்டம் விழா நடைபெறுவது வழக்கம். ஆழி என்றால் கடல் போன்று பெரியது என்பதை குறிக்கிறது.

திருவாரூர் தேரழகு என்பது முதுமொழி. பங்குனி உத்திர திருவிழாவை அப்பர் சுவாமிகளே நடத்துவதாக ஐதீகம். அஜபா நடனத்துடன் கோவிலில் இருந்து தியாகராஜர் புறப்பட்டு தேரில் எழுந்தருளி 4 வீதிகளிலும் தேர் அசைந்து ஆடி திரும்பும் அழகை காண கண் கோடி வேண்டும் என்பர். ஆழித்தேர் வடம் பிடித்தால் கைலாயத்திலும், வைகுண்டத்திலும் இடம் பிடிக்கலாம் என்பது ஐதீகம்.

அலங்கரிக்கப்படாத தேரின் உயரம் 30 அடி, அகலம் 30 அடியாகும். மரத்தேரின் எடை 220 டன். திருவாரூர் ஆழித்தேர் இதர கோவில்களின் தேர்களில் இருந்து முற்றிலும் மாறுப்பட்டது. ஆழித்தேர் 24½ அடி நீளம், 1½ அடி உயரம் கொண்ட 2 இரும்பு அச்சுக்களில், 9 அடி விட்டமும், 1½ அடி அகலமும் உடைய 4 இரும்பு சக்கரங்கள் மேல் வர்ணிக்க இயலாத கலை பொக்கிஷமான சிறப்புகளுடன் தேர் அமைந்துள்ளது.

திருச்சி பெல் நிறுவனம் சார்பில் இரும்பு அச்சுகள், 4 இரும்பு சக்கரங்க ளுடன் எளிதில் நிறுத்தும் வகையில் ஹைட்ராலிக் பிரேக் வசதிகள் செய் யப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இரவு அஜபா நடனத்துடன் கோவிலில் இருந்து தியாகராஜர் புறப்பட்டு தேரில் எழுந்தருளுகிறார். ஆழித்தேரோட்டம் இன்று (ஞாயிற்றுக்கிழமை) காலை 9.05 மணிக்கு தேர் வடம் பிடிக்கப்படுகிறது. அதனுடன் அம்பாள், சண்டிகேஸ்வரர் தேர் வடம் பிடிக்கப்படும்.

முன்னதாக காலை 5.15 மணிக்கு விநாயகர், சுப்பிரமணியர் தேர் வடம் பிடிக்கப்பட்டு தேரோட்டம் தொடங்கிறது.

ஆழித்தேருடன் விநாயகர், சுப்பிரமணியர், கமலாம்பாள், சண்டிகேஸ்வரர் தேர்கள் அலங்கரிக்கும் பணி நிறைவு நிலையை அடைந்துள்ளது. பிரமாண்ட ஆழித்தேரை பக்தர்கள் கண்டு ரசித்து, செல்போன் மூலம் செல்பி புகைப்படம் எடுத்து மகிழ்ந்தனர்.

# ஆந்திரா, தெலங்கானாவில் ஸ்ரீராம நவமி கோலாகலம்

**அமராவதி, மார்ச் 29:**

ஸ்ரீராம நவமி விழாவை யொட்டி நேற்று திருமலையில் உள்ள ஏழுமலையான் கோயிலில் சீதா தேவி, லட்சுமணர், அனுமன் சமேத ஸ்ரீராமருக்கு சிறப்பு திருமஞ்சன நிகழ்ச்சிகள் நடந்தன.

கடப்பா மாவட்டத்தில் திருமலை திருப்பதி தேவஸ்தான பராமரிப்பில் உள்ள ஸ்ரீ ஒண்டிமிட்டா கோதண்டராமர் திருக்கோயிலில் நேற்று ராம நவமி பிரம்மோற்சவம் கொடியேற்றத்துடன் தொடங்கியது. உற்சவ மூர்த்திகள் சிறப்பு திருமஞ்சன சேவைக்கு பிறகு மேள தாளங்கள் முழங்க பிரம்



மோற்சவ கொடியேற்றம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. வரும் ஏப்ரல் 1-ம் தேதி இக்கோயிலில் ஸ்ரீராமர் திருக்கல்யாண நிகழ்ச்சி மிக பிரம்மாண்டமாக நடத்தப்பட உள்ளது. இதில் ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு கலந்து கொண்டு மாநில அரசு சார்பில் சுவாமிக்கு பட்டு வஸ்திரம், சீர் வரிசைகள் வழங்க உள்ளார்.

பத்ராசலம் கோயிலில்.. தெலங்கானாவில் உள்ள ஸ்ரீராமர் கோயில்கள் அனைத்திலும் ராம நவமி விழா நேற்று விமரிசையாக கொண்டாடப்பட்டது.

இதில் பத்ராசலம் கோதண்டராமர் திருக்கோயிலில் நேற்று சுவாமிக்கு திருக்கல்யாண உற்சவம் நடைபெற்றது. இதில் தெலங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டி தம்பதி சமேதராக கலந்துகொண்டு சுவாமிக்கு பட்டு வஸ்திரங்களை காணிக்கையாக வழங்கினார்.






## நலம் தரும் மருத்துவம்

## கோடையை சமாளிக்க...

நுங்குகளை சின்னத் துண்டுகளாக வெட்டி நன்கு காய்ச்சி ஆற வைத்த பாலில் போட்டு சர்க்கரை ஏலக்கா பொடி சேர்த்து சாப்பிட்டால் சூப்பராக இருக்கும்.

இரண்டு வெள்ளரிப்பிஞ்சுகளை நறுக்கி நான்கு கப் மோர், தேவையான அளவு உப்பு, கொத்தமல்லி இலையை மிக்ஸியில் போட்டு அரைத்துக் கொள்ள வேண்டும். ஒரு ஸ்பூன் ஓமத்தை தாளித்து டம்ளரில் விட்டு வெள்ளரிக்காய் ஸ்லைசை மேலே வைத்து பரிமாறினால் வெயில் காலத்திற்கு சூப்பாக இருக்கும்.

தர்பூசணி பழ துண்டுகளை பதநீரில் போட்டு ஒரு துண்டு ஐஸ்கட்டி சேர்த்து சாப்பிட உடல் சூடு தணியும்.

இரண்டு மூன்று வகை பழங்கள் இருந்தால் எல்லாவற்றையும் துண்டுகளாக்கி சர்க்கரை, சிறிது மில்க்மெய்டு போட்டு கலக்கி ஃப்ரிட்ஜில் வைத்து சாப்பிட்டால் சுவையாக இருக்கும்.

நாக்கு வறட்சியாக இருந்தால் பார்லி கஞ்சியை வைத்து அந்த கஞ்சியுடன் சிறிது தேன் கலந்து சாப்பிட்டு வர நாக்கின் வறட்சி நீங்கும்.

கோடைகாலத்தில் வீட்டின் உள்ள அழகுக்காக வைக்கப்படும் பிளவர் வால்ஸில் வெள்ளை நிற பூக்களும் பச்சை இலைகளும் இருப்பது போல் பார்த்துக் கொள்ளுங்கள், இது கண்ணுக்கு குளிர்ச்சியாகவும் வெயிலின் கொடுமை தெரியாமல் இருக்க செய்யும்.

வெயில் காலங்களில் உணவில் நிறைய மோர் மற்றும் தயிர் சேர்த்துக்கொண்டால் குளிர்ச்சியும் ஜீரணமும் எளிதில் ஆகும்.

உஷ்ணத்தால் ஏற்படும் வயிற்று வலிக்கு, ஒரு எலுமிச்சை பழத்தின் சாறை இளநீரில் கலந்து கொடுத்தால் வயிற்று வலி கப் என்று நின்று விடும்.

கோடைகாலத்தில் சூட்டை தணிப்பதற்கு அடிக்கடி அல்லது தினசரி சாலட் வகைகளை சாப்பிடுங்கள், கேரட், வெள்ளரி, வெண்டை, தக்காளி, பெரிய வெங்காயம், கருவேப்பிலை, கொத்தமல்லியுடன் மிளகு, உப்பு சேர்த்து சாலட் சாப்பிடுவது ஆரோக்கியமானது.

நான்கு பெரிய நெல்லிக்காயை குக்கரில் வேகவைத்து கொட்டை நீக்கி மசித்து கெட்டி தயிரில் கலந்து பெருங்காயம், கடுகு, பச்சை மிளகாய் போட்டு தாளித்து சாப்பிட்டால் உடலுக்கு குளிர்ச்சி ஏற்படும்.

குளிக்கும் நீரில் ஓர் எலுமிச்சம் பழத்தை பிழிந்து சிறிது உப்பையும் கலந்து குளித்து வந்தால் வியர்வை நாற்றம் இருந்த இடம் தெரியாமல் போய்விடும்.

நாட்டு மருந்து கடைகளில் கிடைக்கும் தூதுவளை பழங்களை வாங்கி அதில் குண்டு ஊசியால் துளைகள் போட்டு தேனில் ஊற விட வேண்டும். தினம் இரண்டு பழங்களை அதிலிருந்து சாப்பிட்டால் கோடையில் ஜில்லென்று எது குடித்தாலும் ஜலதோஷம் வராது

# வாக்காளர் அடையாள அட்டை இல்லையா..? நீங்களும் வாக்களிக்கலாம்..

தமிழக சட்டசபை தேர்தல் வரும் அடுத்த மாதம் (ஏப்ரல்) 23-ம் தேதி நடைபெறுகிறது. இதற்கான வாக்கு எண்ணிக்கை மே 4-ம் தேதியாகும். இந்த நிலையில் வாக்களிக்க அனுமதிக்கப்படும் ஆவணங்கள் என்னென்ன என்பது குறித்து தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் முக்கிய தகவலை வெளியிட்டுள்ளார்.

இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:- நடைபெற இருக்கின்ற, 2026-ம் ஆண்டிற்கான சட்டசபை பொதுத் தேர்தலில் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ள அனைத்து வாக்காளர்களும், அவர்கள் வாக்களிப்பதற்கு முன்னர், வாக்குச்சாவடியில் தங்கள் அடையாளத்தை மெய்ப்பிப்பதற்காக வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையை அளிக்க வேண்டும் என இந்திய தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையை அளிக்க இயலாத வாக்காளர்கள், அவர்களின் அடையாளத்தை மெய்ப்பிப்பதற்காக பின்வரும் மாற்று புகைப்பட அடையாள ஆவணங்களில் ஏதேனும் ஒன்றை காண்பிக்க வேண்டும் என இந்திய தேர்தல் ஆணையம் ஆணையிட்டுள்ளது:-

(I) ஆதார் அட்டை

(II) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் பணி அடையாள அட்டை

(III) புகைப்படத்துடன் கூடிய வங்கி/அஞ்சலக கணக்குப் புத்தகங்கள்

(IV) தொழிலாளர் நல அமைச்சகத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட மருத்துவ காப்பீட்டு அட்டை/ ஆயுஷ்மான் பாரத் மருத்துவ காப்பீட்டு அட்டை




(V) ஓட்டுநர் உரிமம்

(VI) வருமான வரி நிரந்தர கணக்கு எண் அட்டை (PAN CARD)

(VII) தேசிய மக்கள் தொகை பதிவேட்டின்கீழ் இந்திய தலைமைப் பதிவாளரால் வழங்கப்பட்ட திறனட்டை

(VIII) இந்திய கடவுச்சீட்டு

(IX) புகைப்படத்துடன் கூடிய ஓய்வூதிய ஆவணம்

(X) மத்திய/மாநில அரசுகள்/பொதுத் துறை நிறுவனங்கள்/ வரையறுக்கப்பட்ட பொது நிறுவனங்களின் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட புகைப்படத்துடன் கூடிய பணி அடையாள அட்டைகள்

(XI) பாராளுமன்ற/ சட்டமன்ற/சட்டமேலவை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டை

(XII) இந்திய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தால் வழங்கப்பட்ட இயலாமைக்கான தனித்துவமான அடையாள அட்டை.

2. வாக்காளர் பட்டியலில் வாக்காளரின் வரிசை எண்ணை அறிந்து கொள்வதற்காக புகைப்பட வாக்காளர் சீட்டிற்கு பதிலாக வாக்காளர் தகவல் சீட்டினை அச்சிட்டு வழங்க இந்திய தேர்தல் ஆணையம் முடிவு செய்துள்ளது. வாக்குச் சாவடியின் பெயர், வாக்குப்பதிவு நாள், நேரம் போன்றவை இடம் பெற்றிருக்கும். மாவட்ட தேர்தல் அலுவலரால் வாக்குப்பதிவு நாளுக்கு ஐந்து (5) நாட்களுக்கு முன்னர் அனைத்து வாக்காளர்களுக்கும் வாக்காளர் தகவல் சீட்டு விநியோகிக்கப்படும். வாக்குச்சாவடியில் வாக்காளர் தகவல் சீட்டு அடையாளத்தை மெய்ப்பிப்பதற்கான ஆவணமாக ஏற்றுக்கொள்ளப்படாது.

3. ஒரு வாக்காளர் வேறொரு சட்டமன்றத் தொகுதியின் வாக்காளர் பதிவு அதிகாரியால் வழங்கப்பட்ட அடையாள அட்டையை வைத்திருப்பாரேயானால் அந்த அடையாள அட்டையையும் இந்திய தேர்தல் ஆணையம் காட்டும் ஆவணமாகப் பயன்படுத்தலாம். ஆனால் அந்த வாக்காளருடைய பெயர் அந்த வாக்குச் சாவடிக்குரிய வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றிருக்க வேண்டும்.

வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை அல்லது இந்திய தேர்தல் ஆணையத்தால் வரையறுக்கப்பட்ட மேற்கூறிய எந்த ஒரு அடையாள ஆவணம் வைத்திருப்பதால் மட்டுமே ஒரு வாக்காளர் தனது வாக்கைச் செலுத்தி விட முடியாது. அவருடைய பெயர் வாக்குச் சாவடிக்கு அனுப்பப்பட்ட வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றிருந்தால் மட்டுமே அவர் வாக்குரிமையைச் செலுத்த தகுதியுடையவர் ஆவார் என்று தெளிவுபடுத்தப்படுகிறது.

4. 1950-ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் பிரிவு 20A-இன்கீழ் பதிவு பெற்றுள்ள வெளிநாடு வாழ் இந்தியர்கள், அவர்களின் கடவுச்சீட்டிலுள்ள விவரங்களை அடிப்படையாகக் கொண்டு, அவர்களின் அசல் கடவுச்சீட்டின் அடிப்படையில் மட்டுமே (வேறெந்த அடையாள ஆவணமும் அல்லாது) அவர்களின் அடையாளம் வாக்குச்சாவடியில் மெய்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் தெளிவுபடுத்தப்படுகிறது.

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# "நாற்பது வருட சண்டை"



"என் உசுரே போனாலுஞ் செரி... இந்த ஒரு அடி வரப்பை நான் விட்டுத் தர மாட்டேன் ராமசாமி...!" முருகேசன் குரல் கடுமையாய் ஒலித்தது.

"த பாரு முருகேசா... நீயும் விட வேண்டாம்... நானும் விட மாட்டேன்!.. என்ன ஆனாலும் ஆகட்டும்?" ராமசாமி கையில் இருந்த குச்சியை வைத்து மண்ணில் கோடிழுத்தார். கிராமத்தாருக்கு இந்தச் சண்டை பழகி விட்டது. ஒரு வருஷமா... ரெண்டு வருஷமா? கிட்டத்தட்ட நாற்பது வருஷமாவல்ல நடக்குது இந்தச் சண்டை? கேவலம்... ஒரு அடி நிலத்திற்காக. அந்த நேரம் ஒரு கார் வந்து நின்றது. கோட்டு சூட் அணிந்த ஒரு இளைஞன் அதிலிருந்து இறங்கினான். கையில் ஃபைல். "இங்க...முருகேசன்... அண்ட் ராமசாமி...ங்கறது?" இருவரும் கண்களைச் சுருக்கிப் பார்த்தனர். "ஏன்?.. நாங்கதான்... எதுக்குக் கேட்கறே?" அவன் அமைதியாக ஒரு ஃபைலைத் திறந்து காட்டினான். "இது இந்த ரெண்டு நெலத்தோட பத்திரம்... என் பேர்ல நான் வாங்கியிருக்கேன்" "யாரு... யாரு விற்றது?" ராமசாமி கத்தலாய்க் கேட்டார். "நீங்கதான் வித்திருக்கீங்க... உங்க கையெழுத்து கூட இருக்கு..." இருவரும் அதிர்ந்தார்கள். முருகேசன் கண்கள் பெரிதானது. ராமசாமி கை நடுங்க ஆரம்பிச்சது. அந்த நாள் நினைவுக்கு வந்தது. மகன் சொன்னான் "அப்பா, அரசு உதவி கிடைக்குது... இங்க SIGN பண்ணுங்க..." "ஐயா அது கடன் விண்ணப்பம் இல்லை... இந்த விற்பனைப் பத்திரம்" கூட்டம் சன்னமாய்ச் சிரித்துக் கொண்டே போனது. முருகேசன் மண்ணைப் பார்த்தார். நாற்பது வருடம் காப்பாற்றிய வரப்பு... ஒரு நிமிஷத்தில் போய்விட்டது. "நாளைக்கு ஜே.சி.பி. வரும் ஐயா... நிலத்தை சமன் பண்ண..." சொல்லி விட்டு இளைஞன் காரை நோக்கி நடந்தான். நீண்ட அமைதி. இருவரும் மண்ணில் இருந்த அந்த கோட்டை பார்த்தார்கள். முருகேசன் காலால் அழித்தார். ராமசாமியும் சேர்ந்து மிதித்தார்.



-முகில் தினகரன்
கோயம்புத்தூர்.

# இலக்கே முக்கியம்



அபூர்வ கல் ஒன்று மலை உச்சியில் இருப்பதாகவும், அதை மன்னனிடம் கொண்டுபோய்க் கொடுத்தால் பரிசளிப்பார் என்றும் நாட்டுக்குள் ஒரு பேச்சு. அதற்கு மலையடிவாரத்தில் உள்ள தேவதை வழிகாட்டினால்தான் முடியும் எனவும் சொல்லப்பட்டது. தேவதையின் கட்டளையைச் சரியாகப் பின்பற்றி மலை உச்சிக்குப் போனால் கல்லோடு திரும்பலாம். கட்டளையை மீறினால் தேவதையின் கோபத்திற்கு ஆளாகக்கூடும். முதலில் ஒரு வீரன் நம்பிக்கையோடு மலை ஏற ஆரம்பித்தான். அடிவாரத்திலேயே தேவதையின் குரல் ஒலித்தது: "நீ மலை உச்சியில் ஏறிக்கொண்டே இருக்க வேண்டும். எந்த இடத்திலும் பின்னால் திரும்பிப் பார்க்கக் கூடாது. அதுதான் நீ அந்தக் கல்லைக் கண்டு பிடிப்பதற்கான கட்டளை" இரண்டு அடிகள் எடுத்து வைத்த வீரன், "இந்த மலை எவ்வளவு தூரம்?" எனத் திரும்பிப் பார்த்துக் கேட்டான். தேவதை அவனை அப்படியே ஒரு குகைக்குள் அடைத்துவிட்டது.

இரண்டாவது வீரன் தைரியமாக நடந்தான். தேவதை அவனுக்கும் அதே கட்டளையை இட்டது. அவன் தேவதையின் குரலைக் கேட்டபடியே காடு, மேடு எனக் கடந்தான். கால் வலியைத் தாண்டி வேகமாக நடந்தான். ஓரிடத்தில் ஒரு பெண் சிரிக்கும் சத்தம் கேட்டது. 'இவ்வளவு அடர்வான காட்டுக்குள் எப்படி பெண்குரல்?' எனத் திரும்பிப் பார்த்தான் அந்த வீரன். இட்ட கட்டளையை மீறி விட்டதாக அந்த இடத்திலேயே அவனைக் கற்சிலையாக மாற்றியது தேவதை.

அடுத்து மூன்றாவது வீரன் புறப்பட்டான். தேவதையின் கட்டளை பலத்த குரலாக ஒலித்தது. அவன் நெஞ்சு நிமிர்த்திக் கிளம்பினான். வேகுவேகென நடந்தான். மலை உச்சியை எட்டுகையில் ஒரு குழந்தை அழுகிற சத்தம் கேட்டது. அவன் அதைப் பொருட்படுத்தாமல் இன்னும் ஏறினான். குழந்தை அழுதே செத்துவிடும் கணக்காய் வீறிட்டது. 'ஒரு குழந்தைகைக் காப்பாற்றுவது மன்னனை மகிழ்விப்பதைவிட முக்கியம்' என அவன் மனம் உரைக்க, சட்டென திரும்பிப் பார்த்தான். குழந்தை வடிவில் அவனைத் திசை திருப்பிய தேவதை பலமாகச் சிரித்தது. "உன் நல்ல நோக்கத்தைப் பாராட்டுகிறேன். ஆனாலும் நீ என் கட்டளையை மீறி விட்டாய். உன்னால் அந்தக் கல்லை நெருங்க முடியாது. உயிரோடு திரும்பிச் செல்ல உன்னை அனுமதிக்கிறேன்" என்றது. அடுத்தபடியாய் வீரர்கள் யாரும் மேலே ஏறத் துணியவில்லை. எதிர்பாராத திருப்பமாக ஒரு பெண்மணி, "நான் கொண்டு வருகிறேன் அந்த அபூர்வக் கல்லை" என்றபடி மலையேற முன்வந்தார். பலத்த காற்றும் இரைச்சலுமே அவரைப் பயமுறுத்தக் கூடும் எனப் பலரும் எச்சரித்தார்கள். ஆனாலும் அந்தப் பெண்மணி மலையேறத் தொடங்கினார். அவரால் அவ்வளவு தூரம் நடக்க முடியவில்லை. மூச்சு வாங்கியது. காடே ஓவெனக் கத்தியது. காற்று இரைச்சலாக அலறியது. தேவதையின் கட்டளை சத்தமாக ஒலித்தது. எதையும் சட்டை பண்ணாமல் அந்தப் பெண்மணி நடக்கத் தொடங்கினார். ஒருகட்டத்தில் அந்தக் காட்டு தேவதை ஓர் ஆண் குரலில், "நில்..." என்றது. அந்தப் பெண்மணி நிற்கவில்லை. "அடுத்த அடியை எடுத்து வைத்தால் நீ குப்புற விழுவாய்" என்றது தேவதை. விழுந்தாலும் பரவாயில்லை என்பதுபோல் அந்தப் பெண்மணி உச்சியை நோக்கி நடக்கத் தொடங்கினார். மறுபடியும் அலறல், இரைச்சல், சத்தம் எனக் காடு பயமுறுத்தியது. தேவதை ஒரு குழந்தையாக மாறி அழுது அலறியது. ஆனாலும் அந்தப் பெண் உச்சியை நோக்கி போய்க்கொண்டே இருந்தார்.

ஒருகட்டத்தில், "நீ போட்டியில் வென்று விட்டாய். நீ தேடிவந்த அபூர்வ கல் உன் காலுக்குப் பின்னால்தான் இருக்கிறது..." என்றது தேவதை. அப்போதும் அதை நம்பாமல் மலை உச்சிக்குப் போனார் அந்தப் பெண்மணி. மலை உச்சியில் ஒரு கல் தனித்த வகையில் பிரகாசமாகத் தெரிய, அதை எடுத்துக்கொண்டு திரும்பினார் அந்தப் பெண்மணி. தேவதை அசந்து போனது. "உடல்வாகும் மனவலிமையும் கொண்டவர்களே நான் வைத்த போட்டியில் தோற்ற நிலையில் நீ மட்டும் எப்படி வென்றாய்?" என வியந்துபோய்க் கேட்டது தேவதை. 'ஒரு நிமிடம்' என்பதுபோல் கையை உயர்த்திக் காட்டிய அந்தப் பெண்மணி, தன் காதுகளில் வைத்திருந்த பஞ்சை எடுத்து வெளியே போட்டார். "காட்டின் இரைச்சல் எனக்கு ஆகாது. அதனால், காதில் பஞ்சு வைத்துக் கொண்டேன். இப்போ சொல்லுங்க, என்ன சேதி?" எனக் கேட்டார் அந்தப் பெண். தேவதை மயக்கம் போட்டு விழுந்தது.

நாகை ஆசைத்தம்பி
கோவை

# விக்கிரமாதித்தன் கதைகள் 3

.A.S.GOVINDA RAJAN

## தலையை காணிக்கையாக்கிய வஜ்ரவீரனின் கதை



மணமுடித்த பெண்ணோடு வாழ்வதா அல்லது துர்காதேவிக்கு கொடுத்த வாக்குப்படி தன் தலையை காணிக்கையாக்கி சாவதா என்ற குழப்பத்தில் ஆழ்ந்தான் வஜ்ரவீரன். பிறகு ஒரு முடிவெடுத்தான். துர்காதேவியிடம் கொடுத்த வாக்கை நிறைவேற்றத் துணிந்தான். ஆனால் இதை நண்பனிடமும், மனைவி இடமும் இதைப் பற்றிச் சொல்லாமல், இருவரையும் தன்னுடன் கோவிலுக்கு வருமாறு அழைத்தான். மூவரும் கோவிலுக்குச் சென்றனர். பின் இருவரையும் கோவில் வாசலில் இருக்கச் செய்து, தான் மட்டும் கோவிலுக்குள் சென்று கதவை சாத்திக் கொண்டான்.

துர்காதேவியிடம் அன்னையே உன் மீது பேரன்பு கொண்டதால் உனக்கு அளித்த வாக்கு படி என் தலையை உனக்கு காணிக்கை ஆக்குகிறேன். இனி என் மனைவியை நீ தான் காக்க வேண்டும் என்று சொல்லி, தலையை வெட்டி அம்மனின் காலடியில் மாண்டான்.

வஜ்ரவீரனின் மனைவியும், நண்பனும், வெளியே காத்திருந்தனர். உள்ளே சென்ற நண்பன் நீண்ட நேரமாகியும் வெளியே வராததால் ருத்ரராஜன் கோவிலுக்குள் சென்று பார்த்தான். அவன் பேரதிர்ச்சியாய் அடைந்தான்.

நிலை குலைந்து போன ருத்ரராஜன் எப்படி அவன் மனைவியிடம் சொல்வேன் என்று நினைத்தவன் தானும் தன் தலையை வெட்டி மாண்டான். இருவரும் கோவிலுக்குள் சென்று வெகு நேரமாகியும் வெளியே வராததால் வஜ்ரவீரனின் மனைவியும் கோவிலுக்குள் சென்று பார்த்தாள் இருவரும் தலை துண்டிக்கப்பட்டு கிடந்த காட்சி பார்த்ததும் அழத்துவங்கினாள்.

என் கணவன் இல்லாத வாழ்க்கை எனக்கு எதற்கு என தனது தலையை துண்டிக்க முற்பட்டாள். அப்போது துர்க்காதேவி அவள் முன் தோன்றி, பெண்ணே! நில். ஒருவருக்காக ஒருவர் தியாகம் செய்யத் துணியும் உங்களை கண்டு பூரித்தேன்! பக்தர்களை வாழவைப்பதே என் வேலை நான் அவர்களுக்கு, உயிர் கொடுக்கிறேன். பெண்ணே! இருவரது தலையையும் அவர்கள் உடலோடு பொருத்து. அடுத்த வினாடி அவர்கள் உயிர் பெற்று எழுவார்கள் என்று துர்க்காதேவி கூறி மறைந்தாள்.

அப்பெண் இறந்தவர்களின் தலைகளை ஒன்றாகப் பொருத்தினாள். உடனே உயிர் பெற்று எழுந்தனர். ஆனால் அவள் பதற்றத்தில் தலைகளை மாற்றி வைத்துவிட்டாள். இதனால் குழப்பமானால் யாரை ஏற்றுக் கொள்வது என்பது புரியாமல் தவித்தாள். இதற்கான பதில் விக்கிரமாதித்தன் கூறினான். கணவனின் தலை எந்த உடலில் இருக்கிறதோ அந்த உடலைத் தான் அந்த பெண் தன் கணவனாக ஏற்றுக்கொள்ள வேண்டும். தலை தான் ஒருவரது அடையாளத்திற்கும், எண்ணத்திற்கும் பிரதானமானது. இதைக் கேட்ட வேதாளம் சரியாகச் சொன்னாய் விக்ரமாதித்தா! ஆனால் நீ வாய் திறந்து பேசியபடியால் நான் செல்கிறேன் என்று கூறி மீண்டும் விக்ரமாதித்தன் பிடியிலிருந்து பறந்து சென்றது.

# 16 சொற்களில் கல்யாண ராமாயணம்

((பிறந்தார்,வளர்ந்தார்
,கற்றார், பெற்றார்.
மணந்தார். சிறந்தார்.
துறந்தார். நெகிழ்ந்தார்.
இழந்தார் அலைந்தார்.
அழித்தார்.செழித்தார்.
துறந்தார்.துவண்டார்.
ஆண்டார்.மீண்டார்.!)
~~~~~~

1 பிறந்தார்.
~~~~~
கௌசல்யா தேவிக்கு
தசரதரின் ஏக்கத்தைப்
போக்க..
யாகத்தில் தோன்றிய
மாபூதம் வழியே
திருமாலின் அவதாரமாகப்
பிறந்தாரே.!

2.வளர்ந்தார்.
~~~~~~
தசரதன் மைந்தனாய்..
தருமத்தின் புதல்வனாய்..
கௌசல்யை.. சுமித்திரை..
கைகேயி அன்பிலே..
காருண்யன் இராமர்
வளர்ந்தாரே..!

3.கற்றார்.
~~~~~~
சூரிய வம்சத்தின் குல
குரு.. வசிட்டரிடம்..
வேதங்கள் ஞானங்கள்
கலைகள் போர்
முறைகள்.. யாவையும்
இராமர் கற்றாரே.!

4.பெற்றார்.
~~~~~~
வசிட்டரிடம் கற்ற துனுர்
வேதம் கொண்டு
.. விசுவாமித்திரர்
யாகத்தைக் காத்து.. பல..
அபூர்வ அஸ்திரங்களைப்
பெற்றாரே..!

5.மணந்தார்.
~~~~~~
மிதிலை என்கிற
ஜனகபுரியில்.. சிவனார்
வில்லை உடைத்து..
ஜனகர் சுனயனாவின்
ஏக்கத்தைத் தகர்த்து..
கண்ணோடு கண் நோக்கி
ஜானகியைக் கவர்ந்து..
மண்ணின் மகளான
சீதையை இராமர்
மணந்தாரே.!


6.சிறந்தார்.
~~~~~~
அயோத்யா.. கோசலை
மக்கள் மனதில் உயரிய
குணத்தால்.. பண்பு
நலத்தால் இடம் பிடித்தே
அன்பினில் இராமர்
சிறந்தாரே.!

7.துறந்தார்.
~~~~~~
சிற்றன்னை
கைகேயி
சொற்க் கேட்டு..
தந்தை தசரதரின்
ஆணையாலே..
மரவுரி தரித்து
மனையாள் சீதை..
இலக்குவனோடு
தன்னுடைய
அரசினைத் தம்பி
பரதனுக்குத் தந்து..
வனவாழ்வை ஏற்று..
இராஜியத்தைத்
துறந்தாரே.!

8.நெகிழ்ந்தார்.
~~~~~~
அயோத்தி மக்களின்
அன்பினிலே..
கங்கைக் கரை
வேடன் குகனின்
பாசத்திலே..
ஞானகுரு
பரத்வாஜர் தூய
அன்பினிலே..
பரதரின்
தியாகத்திலே..
தன்னலமற்ற
தம்பியின்
பாசத்திலே..
விசுவாசத்திலே..அத்திரி..
அனுசூயை.. சபரித்தாய்..
ஜடாயு.. வன விலங்குகள்
பறவைகள் தந்த
அன்பிலே.. சுக்கிரீவர்
சேவையிலே..யாவுக்கும்
மேலாய் ஆஞ்சநேயரின்
சேவைக்கு கைமாறு ஏது
செய்வேன்..? என்று ஏங்கி
அணைத்துக் கொண்டு..
அண்ணல் இராமன்
நெகிழ்ந்தாரே!

9.இழந்தார்.
~~~~~~
மாய மானைப் பின்
தொடர்ந்தே.. மனைவி
சீதையை..
கானகத்தில்
ஞான தேவன் மானுடனாக
வந்த இராமபிரான்
இழந்தாரே.!

10.அலைந்தார்.
~~~~~~
இட்ட அடி நோக.. எடுத்த
அடி கொப்பளிக்க.. பட்ட
அடி நினைத்தே.. பாசமிகு
சீதையை பிரிந்தே..
கானத்தே இராமர்
அலைந்தாரே.!



11.
அழித்தார்.
~~~~~~
தங்கையவள்
சூர்ப்பனகை.
நிலைகண்டே..
தாளாத ஆசையிலே..
நெறி பிழன்றே..
அயலான் மனைவியை
நினைத்ததாலே..
ஆதியிலே பெற்ற
சிறப்பெல்லாம் இழந்த..
இலங்கேஸ்வரனை..
இராவணனை களத்திலே
சந்தித்து.. அராஜகம்
ஆளுகின்ற இராவணன்
இராஜியத்தை
அழித்தாரே.!

12.செழித்தார்.
~~~~~~
சீதையை
மீட்டெடுத்து..
அகமும் முகமும்
மலர.. ஆவியை
மீண்டும் பெற்று..
அரசனாய்
மகுடம் சூடி..
வாழ்விலே
இராமன்
செழித்தாரே.!

13.துறந்தார்.
~~~~~~
அரசாண்ட
போதிலே..
அன்னை
சீதையினை..
அறியாது
புரியாது
மக்கள்
பேசிய
வார்த்தைக்காக.. மீண்டும்
ஒருமுறை குழப்பம்
நீங்க.. தூயவள் சீதையை
கானகம் அனுப்பித்
துறந்தாரே.!

14.துவண்டார்.
~~~~~~
சந்தேகக் கோடு.. அது
சந்ததோசக் கேடு..
அவதாரம் ஆயினும்அது
மிகு வலித் தரவே..
சீதையைப் பிரிந்து
மனதில் இராமர்
துவண்டாரே.!

15.ஆண்டார்.
~~~~~~
ஆயிரம் கவலைகள்
மனதிலிருந்தும்..
அவரது முகமோ
அருள் மலர.. மக்கள்
பணிக்கு மகேசனாக..
இராம ராஜியத்தின்
தலைவனாக.. செல்வச்
செழிப்புடன் நாடு
செழிக்க.. அன்புடன்
மக்களை ஆண்டாரே.!

16.மீண்டார்.
~~~~~~
பதினோராயிரம்
ஆண்டுகள் ஆண்டு..
மக்களின் மனதை
அன்பிலே ஆண்டு..
ஒவ்வொரு மாந்தனும்..
இராமனுமாக..
சீதையுமாக மாற்றி..
நல்லாட்சியினை
வழங்கியாண்டு..
ஒருநாள்..
தன்னுடனேதூயோர்
யாவரையும்
அழைத்துக்கொண்டு..
தன் இருப்பிடமான
வைகுண்டத்திற்கு ஸ்ரீ
ராமன் மீண்டாரே.!
சுபம்.
ஜெய் ஸ்ரீராம்.!

# தினம் ஒரு தலைவர்கள்

# சர் சேத்தூர் சங்கரன் நாயர் வரலாறு

சர் சேத்தூர் சங்கரன் நாயர் CIE (11 ஜூலை 1857 - 24 ஏப்ரல் 1934) ஒரு இந்திய வழக்கறிஞரும் அரசியல்வாதியும் ஆவார், அவர் 1906 முதல் 1910 வரை சென்னையின் தலைமை வழக்கறிஞராகவும் , 1910 முதல் 1915 வரை சென்னை உயர்நீதிமன்றத்தில் உயர் நீதிபதியாகவும், 1915 முதல் 1919 வரை வைஸ்ராயின் நிர்வாகக் குழுவின் உறுப்பினராக இந்தியா முழுவதும் கல்வி அமைச்சராகவும் பணியாற்றினார்.
1897 இந்திய தேசிய காங்கிரஸின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் , மேலும் மைலாப்பூர் குழுவை எதிர்த்து எழும்பூர் பிரிவை வழிநடத்தினார்

வி.சி.கோபால்ரத்னத்தின் கூற்றுப்படி , அவர் சி.ஆர். பட்டாபிராம ஐயர் , எம்.ஓ.பார்த்தசாரதி ஐயங்கார் , வி.கிருஷ்ணசாமி ஐயர் , பி.ஆர்.சுந்தரம் ஐயர் மற்றும் சர் வி.சி.தேசிகாச்சாரியார் ஆகியோருடன் சேர்ந்து மெட்ராஸ் பார் தலைவராகவும் , சர் வி.பாஷ்யம் ஐயங்கார் மற்றும் சர் எஸ்.சுப்பிரமணிய ஐயர் ஆகியோருக்குப் பின்னால் இருந்தவராகவும் இருந்தார். அவர் காந்தி மற்றும் அராஜகம் (1922) எழுதினார்.

ஆரம்பகால வாழ்க்கை மற்றும் கல்வி
சேத்தூர் சங்கரன் நாயர் 1857 ஆம் ஆண்டு ஜூலை 11 ஆம் தேதி பாலக்காடு மாவட்டம் மங்காராவில் மம்மயில் குடும்பத்தைச் சேர்ந்த பார்வதி அம்மா சேத்தூர் மற்றும் மம்மயில் ராமுண்ணி பணிக்கர் ஆகியோருக்கு மகனாக சேத்தூர் என்ற குடும்பத்தில் பிறந்தார். சங்கரன் நாயர் தனது குடும்பப் பெயர் சேட்டூர் , தாய்வழி வாரிசு மூலம் பெற்றார்.

அவரது தந்தை பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கீழ் தாசில்தாராகப் பணியாற்றினார் . அவரது ஆரம்பக் கல்வி வீட்டிலேயே பாரம்பரிய பாணியில் தொடங்கி, கோழிக்கோட்டில் உள்ள மாகாணப் பள்ளியில் கலைத் தேர்வில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெறும் வரை மலபாரில் உள்ள பள்ளிகளில் தொடர்ந்தது . பின்னர் அவர் சென்னை பிரசிடென்சி கல்லூரியில் சேர்ந்தார். 1877 ஆம் ஆண்டில் அவர் தனது கலைப் பட்டம் பெற்றார், இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு சென்னை சட்டக் கல்லூரியில் சட்டப் பட்டம் பெற்றார்.

தொழில்
நாயர் 1880 ஆம் ஆண்டு சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞராகத் தொடங்கினார். 1884 ஆம் ஆண்டு, சென்னை அரசு அவரை மலபார் மாவட்ட விசாரணைக் குழுவின் உறுப்பினராக நியமித்தது . 1908 வரை, அவர் அரசாங்கத்தின் தலைமை வழக்கறிஞராகவும் , அவ்வப்போது தற்காலிக நீதிபதியாகவும் இருந்தார். 1908 ஆம் ஆண்டு, அவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் நிரந்தர நீதிபதியாக ஆனார் மற்றும் 1915 வரை அந்தப் பதவியில் இருந்தார். கலெக்டர் ஆஷே கொலை வழக்கை விசாரித்த அமர்வில் , அப்போது சென்னை தலைமை நீதிபதியாக இருந்த சி.ஏ. வைட்டுடன் ஒரு சிறப்பு வழக்காக அவர் ஒரு பகுதியாக இருந்தார்.
அவரது மிகவும் பிரபலமான தீர்ப்பில், அவர் இந்து மதத்திற்கு மாறுவதை ஆதரித்தார், மேலும் அத்தகைய மதம் மாறியவர்கள் புறக்கணிக்கப்பட்டவர்கள் அல்ல என்று தீர்ப்பளித்தார். அவர் சென்னை மதிப்பாய்வு மற்றும் சென்னை சட்ட இதழை நிறுவி திருத்தினார்.

இதற்கிடையில், 1902 ஆம் ஆண்டில், வைஸ்ராய் லார்ட் கர்சன் அவரை ராலே பல்கலைக்கழக ஆணையத்தின் செயலாளராக நியமித்தார். அவரது சேவைகளை அங்கீகரிக்கும் விதமாக, 1904 ஆம் ஆண்டில் மன்னர்-பேரரசரால் இந்தியப் பேரரசின் துணைவராக நியமிக்கப்பட்டார் , மேலும் 1912 இல் அவருக்கு நைட் பட்டம் வழங்கப்பட்டது. 1915 ஆம் ஆண்டில் கல்வித் துறையின் பொறுப்புடன் வைஸ்ராய் கவுன்சிலில் உறுப்பினரானார் . உறுப்பினராக, அவர் 1919 ஆம் ஆண்டில் இந்திய அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் குறித்த அறிக்கைகளில் இரண்டு கருத்து வேறுபாடுகளை எழுதினார், இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியின் பல்வேறு குறைபாடுகளை சுட்டிக்காட்டி சீர்திருத்தங்களை பரிந்துரைத்தார். பிரிட்டிஷ் அரசாங்கம் அவரது பெரும்பாலான பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டது.

"நாட்டை ஆள வேண்டுமென்றால், ஜாலியன் வாலாபாக்கில் அப்பாவி மக்கள் படுகொலை செய்யப்பட வேண்டும், எந்த ஒரு சிவில் அதிகாரியும் எந்த நேரத்திலும் இராணுவத்தை வரவழைத்து, இருவரும் சேர்ந்து ஜாலியன் வாலாபாக்கில் நடந்தது போல் மக்களைக் கொன்று குவிக்க வேண்டும் என்றால், இந்த நாடு வாழத் தகுதியற்றது" - சி. சங்கரன் நாயர்
இந்தப் புத்தகம் பஞ்சாபின் லெப்டினன்ட் கவர்னரான சர் மைக்கேல் ஓ'ட்வயரை படுகொலையில் பங்கு வகித்ததற்காகக் கண்டனம் செய்தது, இது 1924 இல் நாயருக்கு எதிராக அவதூறு வழக்குத் தொடர வழிவகுத்தது. இராணுவச் சட்டம் விதிக்கப்படுவதற்கு முன்பு சிவில் அரசாங்கம் செய்த அட்டூழியங்களுக்கு ஓ'ட்வயர் மீது பயங்கரவாதக் குற்றம் சாட்டினார், அவரைப் பொறுப்பேற்கச் செய்தார்.

விசாரணையில் சாட்சியங்கள் பற்றிய செய்திகள் தி டைம்ஸ் இதழில் தினமும் வெளியிடப்பட்டன.
தோல்வியடைந்த போதிலும், அட்டூழியங்களை பொதுமக்களின் கவனத்திற்குக் கொண்டுவரும் நோக்கத்தை இந்த வழக்கு அடைந்ததாக நாயரின் குடும்பத்தினர் கூறுகின்றனர். தி கேஸ் தட் ஷூக் தி எம்பயர் என்ற புத்தகத்தை தனது மனைவி புஷ்பாவுடன் இணைந்து எழுதிய நாயரின் கொள்ளுப் பேரன் ரகு பலாட், இந்த வழக்கு "சுதந்திர இயக்கத்திற்கு ஒரு கொந்தளிப்பை" ஏற்படுத்த உதவியது என்று கூறுகிறார்.



சங்கரன் நாயர், அக்கால நாயர் பிரபுத்துவத்தின் தாய்வழி மரபுகளின்படி, இளம் வயதிலேயே பாலட் குன்ஹிமலு அம்மா அல்லது பார்வதி அம்மாவை மணந்தார். 1926 ஆம் ஆண்டு இன்றைய உத்தரகண்டில் உள்ள புனித பத்ரிநாத் கோவிலுக்கு யாத்திரை மேற்கொண்டபோது, அவர் அவருக்கு முன்னதாகவே இறந்தார் . இந்த தம்பதியருக்கு ஆறு குழந்தைகள் இருந்தனர்.

அவர்களின் மூத்த மகள் பார்வதி அம்மா (பின்னர் லேடி மாதவன் நாயர்) தனது உறவினரான சர் சி. மாதவன் நாயரை மணந்தார் , அவர் ஒரு சட்ட வல்லுநரும் பிரிவி கவுன்சிலின் நீதிபதியுமானவர். அவர்கள் சென்னையில் லின்வுட் என்று அழைக்கப்படும் ஒரு பெரிய தோட்டத்தில் வசித்து வந்தனர். இந்த சொத்துக்குள், இப்போது லேடி மாதவன் நாயர் காலனி/மகாலிங்கபுரம் என்று அழைக்கப்படும் பகுதியில், ஐயப்பன்-குருவாயூரப்பன் கோயிலுக்கு அருகில் அமைந்துள்ளது, இந்த நிலம் லேடி மாதவன் நாயரால் நன்கொடையாக வழங்கப்பட்டது. லின்வுட் அவென்யூ - வீட்டின் பெயர்களையும், சர் மற்றும் லேடி நாயரின் குழந்தைகளின் பெயர்களையும் கொண்ட பல சாலைகள் இன்னும் உள்ளன - பாலட் நாராயணி அம்மா சாலை, பாலட் சங்கரன் நாயர் சாலை, பாலட் மாதவன் நாயர் சாலை.
இளைய மகள் சரஸ்வதி அம்மா, அல்லது அனுஜி, புகழ்பெற்ற ராஜதந்திரி கே.பி. எஸ். மேனனை மணந்தார் . கே.பி.எஸ். மேனன் என்றும் அழைக்கப்படும் அவர்களின் மகன் மற்றும் பேரன் சிவசங்கர் மேனன் ஆகியோரும் வெளியுறவு செயலாளராக பணியாற்றிய இராஜதந்திரிகளாக இருந்தனர் . சிவசங்கர் மேனன் இந்தியாவின் 4வது தேசிய பாதுகாப்பு ஆலோசகராகவும் பணியாற்றினார் .
அவர்களின் ஒரே மகன் ஆர்.எம். பலட்டும் ஒரு குறிப்பிடத்தக்க அரசியல்வாதியாக இருந்தார்.
ஒரு மகள் எம்.ஏ. கேண்டெத்துக்கு திருமணம் செய்து வைக்கப்பட்டார்.
அவர்களின் மகன், லெப்டினன்ட் ஜெனரல் குன்ஹிராமன் பாலட் கேண்டெத், 1971 ஆம் ஆண்டு இந்திய-பாகிஸ்தான் போரின் போது மேற்கு இராணுவத் தளபதியாகவும் , கோவாவின் விடுதலை வீரராகவும் இருந்தார் . கேண்டெத்தின் மருமகனும், சர் சங்கரன் நாயரின் கொள்ளுப் பேரனுமான அனில் மேனன் , ஒரு நாசா விண்வெளி வீரர். மற்றொரு மகள் எம். கோவிந்தன் நாயருக்கு திருமணம் செய்து வைக்கப்பட்டார்.
மற்றொரு மகள் டி.கே. மேனனை மணந்தார். சங்கரன் நாயரின் பேரன் மருமகன் வி.எம்.எம். நாயர் , 2021 இல் இறந்தபோது இந்தியாவில் எஞ்சியிருந்த மூத்த ஐ.சி. எஸ் அதிகாரி ஆவார். அவரது பேரன் மருமகன் (மருமகள் அம்முகுட்டி அம்மாவின் மகன்) கே.கே. செத்தூர் , ஒரு ஐ.சி.எஸ் அதிகாரி, அவர் ஜப்பானுக்கான இந்தியாவின் முதல் தூதராகவும் பணியாற்றினார். அரசியல்வாதி மற்றும் சோசலிஸ்ட் ஜெயா ஜெட்லியின் தந்தை இவர், அவரது கணவர் அசோக் ஜெட்லி ஜம்மு-காஷ்மீரின் தலைமைச் செயலாளராக இருந்தார். ஜெயாவின் மகள் அதிதி முன்னாள் கிரிக்கெட் வீரர் அஜய் ஜடேஜாவை மணந்தார் . சங்கரன் நாயரின் மற்றொரு பேரன் மகன் பி.பி. நாராயணன் (சேத்தூர் நாராயணன் நாயரின் மகன்), மலேசியாவில் ஒரு புகழ்பெற்ற உலக தொழிற்சங்கவாதி மற்றும் தலைவர் (மொரைஸ் 1984, அறிமுகப் பக்கங்கள்).
~~~~~~



பாலிவுட் திரையுலகில் முன்னணி நடிகையாக வலம் வருபவர் கியாரா அத்வானி. இந்திய அளவில் பிரபலமான நட்சத்திரங்களில் ஒருவராக இருக்கும் இவர், அடுத்ததாக யாஷ் உடன் இணைந்து டாக்சிக் திரைப்படத்தில் நடித்துள்ளார். இப்படம் ஜூன் மாதம் வெளிவரவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.
ரசிகர்களின் மனம் கவர்ந்த நாயகியான கியாரா அத்வானி தனது லேட்டஸ்ட் கிளாமர் போட்டோஷூட் புகைப்படங்களை இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

# சாதி மதம் அற்றவன் சான்றிதழ்.. பார்த்திபன் திடீர் முடிவுக்கு காரணம் என்ன?



தெலுங்கில் பவன் கல்யாண் நடித்த உஸ்தான் பகத் சிங் திரைப்படம் கடந்த 19 ஆம் தேதி வெளியாகி திரையரங்குகளில் ஓடிக்கொண்டிருக்கிறது.
இந்த படத்தில் நல்லா நாகப்பா என்ற கதாபாத்திரத்தில் வில்லனாக பார்த்திபன் நடித்துள்ளார்.
படம் ரிலீசுக்கு முன் ஐதராபத்தில் பட நிகழ்ச்சியில் பார்த்திபன் கலந்துகொண்டு பேசியபோது, தான், ஒரு நாயுடு பையன் சென்னையில் பிறந்து வளர்ந்ததால் எனக்கு தெலுங்கு அவ்வளவாக வராது'என்று கூறினார். தனது சாதி குறித்து பார்த்திபன் பேசியது கடும் விமர்சனத்துக்கு உள்ளானது.
இதன்பின் பார்த்திபன் இப்படி பேசியதற்கு பகிரங்க மன்னிப்பு கேட்டார்.
சாதியை தலைமேல் வைத்துக் கொண்டாடுபவர்களை எனக்கே பிடிக்காது 'இவன்' உட்பட பல படங்களில் இடங்களில் நானே அதை வன்மையாக கண்டித்துள்ளேன். அப்படியிருக்க நானே அதைச் செய்வேனா? தவறு நடந்து விட்டது என்பதை முழுமையாக உணர்ந்து வருந்தி கிடக்கிறேன்.
இவ்வளவு பேர் வருத்தத்திற்கு நான் ஆளாகி இருப்பது எனக்கே பிடிக்கவில்லை. என் திறமையை மட்டுமே நம்புவேனேத் தவிர, தவறியும் ஜாதியை சொல்லி வயிறு வளர்க்க எனக்கு விரும்புவனல்ல. இனி ஒரு முறை கூட தவறியும் இது நடக்காதுஎன்று கூறியிருந்தார்.
இந்நிலையில், சாதி, மதமற்றவன் என்ற சான்றிதழை பெற முயன்று வருவதாக பார்த்திபன் தெரிவித்துள்ளார்.
இதுதொடர்பாக அவர் வெளியிட்ட யூடியூப் வீடியோவில்,
"சாதியில்லை மதமில்லை என்று மனதளவில் உறுதியாய் இருப்பவன் நான். இருந்தாலும் இடையில் அதற்கொரு சோதனை ஏற்பட்டதால் No caste, no religion என்ற அரசின் சான்றிதழை பெறுவதற்கு பெரு முயற்சி எடுத்து வருகிறேன். விரைவில் எனக்கொரு சான்றிதழ் கிடைக்கும்" என்று கூறியுள்ளார்.

# இஸ்லாமியர் தோற்றத்தில் கஸ்தூரி ராஜா



மீரா கதிவன் இயக்கத்தில் உருவாகி வரும் படம் ஹபிபி. படத்தில் மாறுபட்ட தோற்றத்தில் நடித்துள்ளார் கஸ்தூரிராஜா. படம் குறித்து இயக்குநர் மீரா கதிரவன் பகிர்ந்து கொண்ட போது கூறியதாவது:-
ஹபீபி படத்தில் கஸ்தூரி ராஜா இணைந்தது எங்களுக்கு மிகப்பெரிய பலமாக அமைந்தது. அவரது அனுபவமும் கதை பற்றிய புரிதலும் எங்கள் பயணத்திற்கு தெளிவும் நம்பிக்கையும் அளித்தது. மத வேறுபாடுகளைத் தாண்டி சமூகத்தில் மூத்தவர்களுக்கு நாம் அளிக்கும் மரியாதையை அவரது கதாபாத்திரம் இந்தப் படத்தில் பிரதிபலிக்கும்.
ஒற்றுமை, கண்ணியம் மற்றும் உணர்வுப்பூர்வமான தருணங்கள் கொண்டதாகவும் அவரது இருப்பு இருக்கும். திரைத்துறையிலும் வயதிலும் அவர் மூத்தவராக இருந்தாலும் அதை வெளிப்படுத்தாமல் எங்கள் அனைவருடனும் மிக எளிமையாக பழகினார்.
இவ்வாறு அவர் கூறினார்.

# சாத்தான் தீ டார்க் விமர்சனம்




சாத்தான் தீ டார்க் விமர்சனம்(2 / 5)
பல வருடங்களுக்கு பிறகு ஒரு கிராமத்தில் மர்மமான மரணங்கள் தொடர, அதற்கான காரணத்தை கண்டுபிடிக்க முயலும் காவல்துறை அதிகாரி, பல அதிர்ச்சிகரமான உண்மைகளை சந்திக்கிறார். இதே நேரத்தில், நாயகி ஐராவின் அம்மா விசித்திரமாக நடந்து கொள்வதும், நாயகனுக்கும் அமானுஷ்ய அனுபவங்கள் ஏற்படுவதும் கதையை திகில் பாதையில் நகர்த்துகிறது. இவை அனைத்திற்கும் பின்னால் இருக்கும் மர்மம் என்ன? என்பதே படத்தின் மீதிக்கதை.

**நடிகர்கள்**

நாயகனாக நடித்துள்ள எஃப்.ஜெ, தனது கதாபாத்திரத்திற்கு தேவையான அளவில் நடித்து இருக்கிறார். நாயகியாக ஐரா, பயமும் பதட்டமும் கலந்த காட்சிகளில் நன்றாக நடித்திருக்கிறார். படத்தின் மிகப்பெரிய பலம் மோன பத்ரே. ஆவி பிடித்த பெண்ணாக அவரது நடிப்பு சில காட்சிகளில் உண்மையிலேயே பயத்தை ஏற்படுத்துகிறது. கிளைமாக்ஸ் பகுதியில் வரும் சாந்தினி தமிழரசன், குறைந்த காட்சிகளில் இருந்தாலும் கதைக்கு முக்கியத்துவம் சேர்க்கிறார்.

**இயக்கம்**

சாத்தான் வழிபாடு, நரபலி, அமானுஷ்ய சம்பவங்கள் ஆகியவற்றை மையமாக வைத்து படத்தை இயக்கியிருக்கிறார் இயக்குனர் மணிகண்டன் ராமலிங்கம். ஆரம்பம் முதல் பல விஷயங்கள் தெளிவில்லாமல் நகர, பார்வையாளர்களுக்கு குழப்பம் ஏற்படுகிறது. கிளைமாக்ஸ் பகுதியில் சில பதில்கள் கிடைத்தாலும், முழு விளக்கம் இல்லாமல் இரண்டாம் பாகத்துக்கான முன்னோட்டமாக முடிவடைகிறது. பயமுறுத்தும் காட்சிகள் மற்றும் கருத்தில் கவனம் செலுத்தியிருந்தாலும், அதை தெளிவாக சொல்ல தவறியிருக்கிறார்.

**ஒளிப்பதிவு**

பாலா ஜி ராமசாமி ஒளிப்பதிவு, ஒரு வீடு மற்றும் குறைந்த இடங்களை வைத்து அச்சத்தை உருவாக்க முயற்சித்திருக்கிறது.

**இசை**

அஸ்வின் கிருஷ்ணாவின் பின்னணி இசை திகில் உணர்வை அதிகரிக்கிறது. ஆனால் சில இடங்களில் அதிக சத்தம் குறையாக தெரிகிறது.

# நாளை லெஜண்ட் சரவணனின் லீடர் இசை வெளியீட்டு விழா




லெஜண்ட் சரவணன் நடிப்பில் உருவாகியுள்ள திரைப்படம் 'லீடர்'. 'தி லெஜண்ட்' (2022) படத்திற்குப் பிறகு அவர் நடிக்கும் இரண்டாவது படம் இதுவாகும். எதிர்நீச்சல்', 'கொடி', 'கருடன்' போன்ற படங்களை இயக்கிய ஆர். எஸ். துரை செந்தில் குமார் இந்தப் படத்தை இயக்கியுள்ளார்.
லெஜண்ட் சரவணனுடன் பாயல் ராஜ்புத், ஆண்ட்ரியா ஜெரிமையா, ஷாம், லால், சந்தோஷ் பிரதாப் மற்றும் 'பாகுபலி' பிரபாகர் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.இப்படத்திற்கு ஜிப்ரான் இசையமைத்துள்ளார்.
இந்த திரைப்படம் முதலில் ஏப்ரல் 9-ம் தேதி வெளியாவதாக அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது ஏப்ரல் 3, 2026 அன்று வெளியாகும் படக்குழு தெரிவித்துள்ளது.
இந்நிலையில் இந்த திரைப்படத்தின் இசை வெளியீட்டு விழா நாளை சென்னையில் உள்ள தனியார் ஸ்டார் ஹோட்டலில் பிரம்மாண்டமாக நடைபெற உள்ளது. இந்த விழாவில் படத்தின் பாடல்கள் மற்றும் டீசர் வெளியிடப்பட உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



பல படங்களில் குணச்சித்திர ரோல்களில் நடித்திருப்பவர் சாக்ஷி அகர்வால். அவர் பிக் பாஸ் ஷோவில் போட்டியாளராக கலந்துகொண்டு பெரிய அளவில் பிரபலம் ஆனார் என்பது குறிப்பிடத்தக்கது.
கடந்த வருடம் அவரது காதலர் நவனீத் என்பவரை சாக்ஷி திருமணம் செய்து கொண்டார்.
தற்போது சாக்ஷி அகர்வால் தாராள கிளாமர் உடையில் போஸ் கொடுத்து இருக்கும் லேட்டஸ்ட் போட்டோஷூட் புகைப்படங்களை வெளியிட்டுள்ளார்.

# சிரஞ்சீவி வீட்டில் நடந்த சிறப்பு யாகம்



தெலுங்கு திரை உலகில் சூப்பர் ஸ்டாராக இருப்பவர் சிரஞ்சீவி. இவரது மகன் ராம்சரண் முன்னணி கதாநாயகர்களில் ஒருவராக தெலுங்கு திரை உலகில் இருந்து வருகிறார்.
தற்போது பிரமாண்ட பொருட்செலவில் தயாராகி வரும் 'பெத்தி' படத்தில் ராம்சரண் முதன்மை கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். சில தினங்களுக்கு முன்பு சண்டைக் காட்சியில் ராம்சரணுக்கு திடீர் காயம் ஏற்பட்டு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.
இந்நிலையில் ராம்சரண் தனது பிறந்தநாளை நேற்று கொண்டாடினார். அவரது பிறந்தநாளை குடும்பத்தினரும் ரசிகர்களும் திருவிழாவாக கொண்டாடினார். ராம்சரண் பிறந்தநாளையொட்டி சிரஞ்சீவி வீட்டில் சிறப்பு யாகம் நடந்தது. யாகத்தின் முன் ராம்சரண் அமர்ந்து இருக்கும் புகைப்படங்கள் மற்றும் அவரது சிறுவயது படங்களை சிரஞ்சீவி பகிர்ந்து அவருக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

# சத்தமே இல்லாமல் சம்பவம் செய்த சூரி



நகைச்சுவையில் இருந்து கதாநாயகன் அவதாரம் எடுத்துள்ள சூரி அழுத்தமான கதைகளை தேர்வு செய்து நடித்து வருகிறார். 'மாமன்' படத்தை தொடர்ந்து தற்போது மதிமாறன் புகழேந்தி இயக்கத்தில் 'மண்டாடி' என்ற படத்தில் நடித்து வருகிறார்.

இதற்கிடையில் 'இன்று நேற்று நாளை', 'அயலான்' படங்களை இயக்கிய ஆர்.ரவிக்குமார் இயக்கத்தில் புதிய படத்தில் நடிக்கவுள்ளார். இந்த படத்தின் 'பர்ஸ்ட் லுக்' சமீபத்தில் வெளியான நிலையில் இப்படத்திற்காக சூரி வாங்க உள்ள சம்பளம் குறித்த தகவல் தான் வெளியாகியுள்ளது.

அதாவது சூரி இந்த புதிய படத்துக்காக ரூ.25 கோடி சம்பளம் பேசப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது. இது முந்தைய படத்தை விடவும் அதிகமாம். சூரி சத்தமே இல்லாமல் சம்பவம் செய்துவிட்டார் என்று திரையுலகினர் பேசுகிறார்கள்.



நடிகை ராய் லட்சுமி மிக கவர்ச்சியாக படங்களில் நடித்து பாப்புலர் ஆனவர். தமிழ், தெலுங்கு மட்டுமின்றி மலையாளத்திலும் அவர் சில படங்கள் மற்றும் வெப் சீரிஸில் நடித்து இருக்கிறார். ராய் லட்சுமி இன்ஸ்டாக்ராமில் அடிக்கடி வெளியிடும் கவர்ச்சி புகைப்படங்கள் இணையத்தில் வைரல் ஆகின்றன. தற்போது அவர் இந்தோனேசியாவின் பாலி-க்கு ட்ரிப் சென்று இருக்கிறார். அங்கு நீச்சல் குளத்தில் பிகினியில் இருக்கும் லேட்டஸ்ட் புகைப்படங்களை அவர் வெளியிட்டுள்ளார்.

# நீ ஃபாரெவர் திரை விமர்சனம்




நீ ஃபாரெவர்- விமர்சனம்(2 / 5)

**கதை**

காதல் திருமணத்தை வெறுக்கும் நாயகன் சுதர்ஷன் கோவிந்த், காதல் பற்றிய செயலி உருவாக்கும் நோக்கில் போலியாக காதலிக்க முடிவு செய்கிறார். மறுபக்கம், குடும்ப வாழ்க்கையை நம்பாத நாயகி அர்ச்சனா ரவி, தனது கதை எழுதுவதற்காக போலி காதலில் ஈடுபடுகிறார். இவ்விருவரும் சந்தித்து தொடங்கும் இந்த போலியான காதல், அவர்களது வாழ்க்கையையே எப்படி மாற்றியது என்பதை படத்தின் மீதிக்கதை.

**இயக்கம்**

காதலை நம்பாத இரு மனிதர்கள், போலியான காதல் மூலம் உண்மையான உணர்வுகளை கண்டுபிடிக்கும் கதையை மையமாக வைத்து படத்தை இயக்கியிருக்கிறார் இயக்குனர் அசோக்குமார் கலைவாணி. காதலை நம்பாத இருவரின் மன மாற்றத்தை எளிமையாக சொல்ல முயற்சித்திருக்கிறார்.

ஆனால் திரைக்கதையில் புதுமை குறைவாக இருப்பது படத்தின் பலவீனமாகிறது. இருந்தாலும், போலியான காதல் உண்மையாக மாறும் தருணங்கள் படத்தை ஓரளவு ரசிக்க வைக்கிறது. பெரிய திருப்பங்கள் இல்லாமல், மென்மையான காதல் உணர்வுகளோடு நகர்த்தி இருக்கிறார்.

**நடிகர்கள்**

நாயகனாக நடித்திருக்கும் சுதர்ஷன் கோவிந்த், அப்பாவித்தனமான கதாபாத்திரத்தில் இயல்பாக நடித்து கவனம் ஈர்க்கிறார். காதலுக்கு முன், பின் என அவரது நடிப்பில் காணப்படும் மாற்றம் நன்றாக வேலை செய்திருக்கிறது. நடனம், உடல் மொழி என பல பகுதிகளில் திறமை காட்டியிருக்கிறார். நாயகியாக நடித்திருக்கும் அர்ச்சனா ரவி, கதைக்கு தேவையான அளவில் நடித்திருக்கிறார். முக்கியமான கதாபாத்திரம் என்றாலும், பெரிய தாக்கம் ஏற்படுத்தாதது சிறிய குறையாகவே தெரிகிறது. துணை கதாபாத்திரங்களில் வரும் நடிகர்கள் திரைக்கதைக்கு தேவையான அளவில் ஆதரவு அளித்திருக்கிறார்கள்.

**ஒளிப்பதிவு**

ஒளிப்பதிவு காதல் உணர்வுகளை அழகாக வெளிப்படுத்துகிறது.

**இசை**

பாடல்கள் பெரிய அளவில் மனதில் நிற்காவிட்டாலும், காட்சிகளுக்கு ஏற்ப பயணிக்கிறது.

**படத்தொகுப்பு**

படத்தொகுப்பு படத்தை சீராக நகர்த்த உதவுகிறது.

# 32 வருட பகையை தீர்த்துக்கொண்டார் கஸ்தூரி



1994-ம் ஆண்டு மணிவண்ணன் இயக்கத்தில் சத்யராஜ். ரஞ்சிதா, கஸ்தூரி, சுஜாதா உள்ளிட்டோர் நடிப்பில் வெளியான படம் 'அமைதிப்படை'. அரசியல், நையாண்டி கலந்து உருவாக்கப்பட்ட இந்த படம் ரசிகர்களிடையே பெரும் வரவேற்பை பெற்றது.

32 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த படம் ஏப்ரல் 10-ந்தேதி மீண்டும் ரிலீசுக்கு வருகிறது. இதையொட்டி சென்னையில் நடந்த படவிழாவில் சத்யராஜ், கஸ்தூரி கலந்து கொண்டனர்.

இதில் ஒரு நிகழ்வு சுவாரஸ்யமாக அமைந்தது. 'அமைதிப் படை படத்தில் சத்யராஜ் அல்வா கொடுத்து கஸ்தூரியை "கரெக்ட்" செய்வார். அதற்கு பதிலடி தரும் விதமாக நேற்றைய நிகழ்வில் சத்யராஜுக்கு அல்வா கொடுத்து கஸ்தூரி பழைய பகையை தீர்த்துக் கொண்டார்.

இந்த வீடியோ காட்சிகள் சமூக வலைதளங்களில் வைரலானது.

# கார்த்திக் சுப்புராஜின் 'நீளிரா' டிரெய்லர் வெளியானது!



நவீன் சந்திரா நடிப்பில், சோமீதரன் இயக்கத்தில் உருவாகி உள்ளப் படம் நீளிரா. இதனை கார்த்திக் சுப்புராஜின் ஸ்டோன் பெஞ்ச் நிறுவனம் தயாரித்துள்ளது.

இப்படத்தில் சனந்த், ரூபா கொடுவாயூர், கபிலா வேணு, 'கயல்' வின்சென்ட், விது, ரோஹித் கோகாட்டே, நவயுகா ஆகியோர் நடித்துள்ளனர். படத்திற்கு சிவா பத்மயன் இசையமைத்துள்ளார்.

படம் ஏப்.3 அன்று வெளியாக உள்ளது. இந்நிலையில் இன்று டிரெய்லர் வெளியாகி கவனம் ஈர்த்துவருகிறது.

டிரெய்லரின்படி, இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டுப் போர்ச் சூழலில், ஒரு திருமணம் நடைபெறுவதற்காகக் காத்திருக்கும் மணமக்கள் மற்றும் இரு வீட்டார் எதிர்கொள்ளும் சவால்களை மையமாகக் கொண்டு இத்திரைப்படம் உருவாக்கப்பட்டுள்ளது.

# ராஜ் எனக்கு தலையணை போன்றவர்- 2-வது கணவர் குறித்து சமந்தா

நாகசைதன்யாவுடனான விவாகரத்துக்கு பின் சமந்தா 2-வதாக பிரபல டைரக்டர் ராஜ்நிடி மோடுவை காதலித்து திருமணம் செய்து கொண்டார். திருமண வாழ்க்கை குறித்து அவர் அளித்த பேட்டியில், முதல் திருமணம் தோல்வி அடைந்ததால் உங்கள் வாழ்க்கை முடிந்து விட்டது என்று அர்த்தமல்ல.

இரண்டாவது வாய்ப்பு எப்போதும் உண்டு. அந்த வாய்ப்பை நீங்கள் எப்படி பயன்படுத்துகிறீர்கள் என்பதை பொறுத்துதான் வாழ்க்கை அமைகிறது. நான் இப்போது முழு திருப்தியுடன் மகிழ்ச்சியுடன் இருக்கிறேன். அதற்கு காரணம் என் கணவர் ராஜ் நிடிமோடுதான்.

நாங்கள் மிகவும் பிரியமான தம்பதியினர். சினிமா, விளையாடுவது, உடற்பயிற்சி செய்வது என எல்லாவற்றையும் ரசித்து செய்கிறோம். ராஜ் எனக்கு தலையணை போன்றவர். அவர் இல்லாமல் என்னால் ஒருநாள் கூட வாழ முடியாது என்றார்.





மலையாளத்தில் அறிமுகமாகி, பின் மலையாளம், தெலுங்கு, கன்னடம் என பல்வேறு மொழிகளில் கலக்கிக்கொண்டிருக்கிறார் நடிகை சம்யுக்தா. தென்னிந்திய அளவில் வலம் வந்த இவர், தற்போது மஹாராணி என்கிற படத்தின் மூலம் பாலிவுட் சினிமாவில் காலடி எடுத்து வைத்துள்ளார். இப்படத்தின் மீது நல்ல எதிர்பார்ப்பு உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இன்ஸ்டாகிராமில் ஆக்டிவாக இருக்கும் நடிகை சம்யுக்தா தனது லேட்டஸ்ட் போட்டோஷூட் புகைப்படங்களை அதில் பதிவு செய்வார். அந்த வகையில் தற்போது ட்ரான்ஸ்பரென்ட் சேலையில் எடுத்துக்கொண்ட போட்டோஷூட் புகைப்படங்களை இன்ஸ்டாவில் பதிவிட்டுள்ளார்.






### இயற்கை

காற்றே அடிக்காததால்
அசையாமல் புழுங்கிய
கரையோர வாகை மரத்தின்
இலைகளின் நிழலை
சலசலத்த
குளத்தின்
நீரலைகள்
உற்சாகமாக
ஆடவைத்தன.



**கே. பி. ஜனார்த்தனன்**



### அவசரம் !

காலை நேரம்... அதிவேகமாக
வாக்கிங் செல்கிறவர்கள்...

சைக்கிளிங் செய்பவர்கள்...
ஜாக்கிங் செய்பவர்கள்...

டென்னிஸ், கிரிக்கெட்,
விளையாடுபவர்கள்.

என எல்லோரும் தங்களது
கொழுப்பை கரைக்க
உடற்பயிற்சியை முடித்து
அவசரமாய்
செல்கிற
இடம்....

'அண்ணே,
ரெண்டு
போண்டா
சக்கர தூக்கலா ஒரு டீ !"



**எம்.பி.தினேஷ்.** கோவை



1.சரக்கு அடிக்கிற பையனும்
லவ் பண்ற பொண்ணும்
லிமிட்டை தாண்டினால்
வாந்தி எடுத்து
தான்ஆகணும்

2. ஏப்ரல் மாதத்தில்
இரண்டு முட்டாள்கள் தினம்

முதலாம் தேதி ஏமாந்தாலும்
23ஆம் தேதி ஏமாந்து
விடாதீர்கள்

3.புருஷன் என்பவர்
மனைவிக்கு புத்தகம் மாதிரி
அழகாய் அடிக்கடி படிப்பாள்
கோபம் வந்தால் கிழி கிழி
என்று கிழித்து விடுவாள்

4. உலகத்திலேயே போட்டி
பொறாமை இல்லாத வேலை
மாடு மேய்ப்பது

5. செருப்பை எடுத்துக்
காட்டினால் கோபப்படாமல்
டென்ஷன் ஆகாமல்
வேற
செருப்பை
காட்டுங்க
என்று
சொல்லக்கூடிய
ஒரே இடம்
செருப்பு கடை



**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி

### "இலவசமென்னும் இழிவு"

வாக்கென்று வாங்க வருவார்
வாசலில் வைக்கும்
பொருட்கள் வாசம் கெட்ட
வாக்குறுதிகள்
சாத்தியமில்லா சத்தியங்கள்!

ஒரு நோட்டு... ஒரு
பாட்டில்... ஒரு பிரியாணி...
தந்தே ஐந்தாண்டை
விலைக்கு வாங்கும்
ஆற்றல்மிகு அஃறினைகள்!

கைநிறையக்கொடுப்பாரின்று,
கழுத்தையே இறுக்குவார்
நாளை! கட்டிலிலுறங்கும்
மக்களைக் கட்டாந்தரைக்குக்
கடத்துவார்!

இலவசம் என்னும் வார்த்தை
இழிவின் புதிய பெயர்
வாக்கை அபகரிக்கும்
வஞ்சகத் தூண்டில்!

பிச்சையாய்ப் போட்ட
பொருளை பெருமையாய்
ஏற்றுக் கொண்டு பிறந்த
நாட்டை விற்றிட பின்வரும்
சந்ததி நாதியற்றுப் போய்
விடும்!

நாங்களினிப்பொறுப்பதில்லை
நரம்பெல்லாம் நெருப்பாகும்
வேண்டாமெனச் சொல்வது
வெறும் சொல்லில்லை...
சத்தியம்!

கல்வி தா! வேலை தா!
கண்ணியம் காக்கும்
ஆட்சி தா! கழிவொத்த
இலவசத்தை
காலடியில் மிதித்திடவா!

ஒட்டு எங்கள் ஆயுதம்
ஒவ்வொரு சீட்டும்
வெடிகுண்டு
ஒட்டுப்பெட்டி
முன்
நிற்கையில்
ஒங்கிடுமே
நீதியின்
தீர்ப்பு!



**முகில் தினகரன்**
கோயமுத்தூர்

### உண்மையே என்றும் உயர்வு!

நேரிசை வெண்பா!

உள்ளதை உள்ளவாறே
பொய்யின்றிப்பேசுதல்
கள்ளத்தனமின்றி
கண்ணியமாய்க்..
கொள்கையில் ஒண்மையான
சிந்தைகளை ஓர்ந்தேதான்
காட்டிடும் உண்மையே
என்றும் உயர்வு!

உண்மை கசக்குமே
ஓர்ந்தேதான் பார்த்திடின்
அன்பாய் இனிக்குமே!
ஆய்ந்திடின்... வண்ணமாய்
மண்ணின் நலன்பெற்று
மாண்புடன் பேசிடும்
உண்மையே
என்றும் உயர்வு!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.

### நாடகமும் திரையரங்கமும்!

நேரிசை வெண்பா!

திரையரங்கம் மற்றும்
நல் தேர்ந்த மேடை

அருமையான நாடகம்
ஆய்ந்தே.. பெருமையுடன்

காண்பதே என்றறிவோம்
காட்சி ஒளிர்ந்திடும்

மாண்பதே காணலாம் வா!

உலகமே நாடக
ஒண்மையாம் மேடை

கலைகளின் உச்சமே
காணும்... பலகலை

சார்ந்த மலையன்ன
சாற்றும் விலைமதிப்பே
ஓர்ந்தே
வியந்திடுவோம்
ஓர்!



**முனைவர்**
**இராம.**
**வேதநாயகம்**
திருவண்ணாமலை.

### திரும்பிப் பார்

நடந்து முடிந்ததை
யோசித்துப் பார் காலம் பதில்
சொல்லும் ... வெற்றி என்று
நினைத்து செய்ய வெற்றியும்
கிட்டியதே.. நடந்து வந்த
பாதையில் தடயங்கள் தெரிய
திரும்பி பார்த்த வைத்தது
சில நல்லவை சில தீயவை
என்று மனம் எண்ணியே
திரும்பிப் பார்க்க நல்லவை
சிரித்தன தீயவை மறைந்தன
இதுதான் வாழ்க்கை பாடம்
என உணரத் தோன்றியது
இன்பமும் துன்பமும் மாறி
மாறி வருவதுதானே
வாழ்க்கை என்று திரும்பிப்
பார்க்கத் தோன்றியது..
நல்லதை
நினைத்து
திரும்பி
பார்ப்போம்.
தீயதை
நினைத்து
மறந்து
வாழ்வோம் ..



**உஷாமுத்துராமன்**



### வாழ வழியை தேடு

பாதம் வெறுமானது..நீ
நடந்த பிறகு தடம்
புனிதமானது...

சிந்தனை பொதுவானது..
உன் செயல் சிறப்பானது...

உடல் உறுதியானது ...உன்
உழைப்பே இறுதியானது...

இரு கைகளும் சமமானது
வலதுகை கொஞ்சம்
மதிப்புமிக்கது....

அனைத்து தொழிலும்
அவசியமானது விவசாயம்
மிக மதிக்க தக்கது...

வாக்கு வலிமையானது...
அதை விவசாயிக்கு
போட்டால்
வாழ்வு
செழிமையானது...



**பொன். கருணா**
நவி மும்பை



சலிக்கவே இல்லை
இருட்டில் கொடுத்த
முரட்டு முத்தம்!

அந்த ஏக்க கண்களின்
பார்வையில்
வீழ்ந்து தான் போறேன்டி!

திரும்பாதே ஒரு போதும்
திருந்தாத நெஞ்சம்!

உன் கன்ன ஓரத்தில்
மிச்சம் வைத்த
மச்சம் மீது தானடி
எக்கச் சக்க ஏக்கம்!

வீக்கமாகுமென
அந்த
ஏக்க
கண்களை–
நான்
நோக்கவே
இல்லை!



**லி.நௌஷாத் கான்**

### காதல் ஜோதி

காதல் என்ற உண்மையை
சொன்னதற்கா பிரிவு என்ற
இந்த கொடுமையான
தண்டனை

கண் மூடினால் மட்டும்
இருட்டு அல்ல என்காதல்
மூடினாலும் எனக்கு
இருட்டுதான்

இரவு என் வாழ்வில் இதுவரை
உறக்கத்தை மட்டும்
பார்த்திருக்கிறது இன்றுதான்
என் உணர்வுகளை
பார்க்கிறது காதல் உணர்
புகள்

காதலால் பற்றிக்கொண்ட
தீ காதலால் மட்டும் தான்
அணையும்...

பஞ்சாய்
காத்திருக்கிறேன்
காதல்
ஜோதியுடன்
வருவாயா?



**எஸ். சந்திரசேகரன்**
**அமுதா** செஞ்சி கோட்டை



### அக்னி சிறகுகள்:

அடுப்படியில் வெந்து
கொண்டிருக்கும் அக்னி
சிறகுகளே.....

பார்லரிலேயே தன்
வாழ்நாளில் பாதியை
கழித்துக் கொண்டிருக்கும்
பாவைகளே.....

ஆண்களுக்கு நிகராக
மது அருந்துவதே சம
உரிமை என்று நினைத்துக்
கொண்டிருக்கும் அறிவு
ஜீவிகளே....

அடுத்த நாள் என்ன
சமைக்கலாம் என்று
அனுதினமும் சிந்தித்துக்
கொண்டிருக்கும் சிந்தனை
சிற்பிகளே......

பெண் உரிமை என்பதை
எப்போது நீ சரியாக புரிந்து
கொள்கிறாயோ அன்றுதான்
பாரதியும் பெரியாரும்
பெருமூச்சு விடுவர்....

அன்பில் அன்னை
தெரசாவாய்....

ஆராய்ச்சியில் கல்பனா
சாவ்லாவாய்.....

ஒலிம்பிக்கில் P.T.
உஷாவாய்.....

பாரதியின் கனவை
நினைவாக்க முன்னேறிக்
கொண்டிருக்கும்
புதுமைப்பெண்களே....

கொடியாக இருங்கள்....
பற்றி படரும் கொடியாக
இல்லை....

செங்கோட்டையின்
உச்சியில் பறக்கும்
வெற்றிக்கொடியாக.....

**கவி சிற்பி. தங்க. பிரியதர்ஷினி**
கறம்பக்குடி

## நூல் அறிமுகம்

நூலின் பெயர் : பால் குளமும், பூவரச மரமும்
ஆசிரியர் : இராமதாசு
பக்கம் : 192 விலை : 200
வெளியீடு : விஜயா பதிப்பகம், கோவை
தொடர்புக்கு : 9047087053




பால் குளமும் பூவரச மரமும் என்ற இந்த நாவல் தமிழ் இலக்கிய உலகில் ஒரு புதிய முயற்சி என்றே சொல்லலாம், இந்த தலைப்பைப் பார்த்தால் ஏதோ இது ஆன்மீக நாவல் போன்றோ அல்லது காதல் நாவல் போன்றோ தோன்றலாம், அனால் இந்நாவலின் நோக்கம் அதுவல்ல, இந்த நாவல் புகழ்பெற்ற தஞ்சாவூர் தட்டு செய்முறையை விளக்குகிறது, நீங்கள் யோசிக்கலாம் , தஞ்சாவூர் தட்டு செய்முறைக்கு ஒரு பக்கம் போதாதா,,,? இதற்கு எதற்கு 192 பக்கமென்று, இங்குதான் இந்நூலின் ஆசிரியரை நாம் பாராட்டியே ஆக வேண்டும், வெறுமனே தட்டு செய்முறை என்றால் யாரும் வாசிக்க மாட்டார்கள், தான் நேசித்த, தனது வாழ்வாதரத்திற்கு உதவியாக இருந்த ஒரு கலைநயம் எல்லோருக்கும் போய் சேர வேண்டுமென்ற நோக்கில் இந்நூலில் அந்த பகுதியில் நடந்த ஒரு நிகழ்வையும் கதையாக்கி இரண்டையும் கலந்து வாசிப்பை சலிப்படையாமல் நேசிக்க வைத்துள்ளார்.

இந்த நாவலில் பல சிறப்புகள் இருக்கிறது, அதில் ஒன்று தஞ்சாவூரில் வட்டார வழக்கு மொழி சொற்களை பயன்படுத்தியும், அந்தக் காலக்கட்டத்தில் அங்கு விற்பனையான ஏ.ஆர்.ஆர் சீவல், ரோஸ் நிறத்திலான வாசனை சுண்ணாம்பு இவற்றை வாசிக்கும்போது நான் எனது இளமை பருவத்திற்கே சென்று விட்டு திரும்பினேன், அந்தக்காலக் கட்டத்தில் நான் பள்ளிக்கூடம் படிக்கும்போது ஏதாவது விசேச வீடுகளென்றால் பந்தல் போட்டு பந்தலின் நுழைவு வாயிலில் ஒரு டேபிள் போட்டு டேபிளின் மேல் ஒரு தாம்பாளத்தில் வெற்றிலை ,சீவல் , வாசனை சுண்ணாம்பு, அசோகா பாக்கு இவற்றை வைத்திருப்பார்கள், பசங்க நாங்க கேட்டால் மாடு முட்டும் வெற்றிலை சின்ன பசங்க போடக்கூடாது என்பார்கள்,

இதனால் அவர்கள் அசந்த நேரம் நைசா திருடிக்கிட்டு வந்து போட்டுக்கொள்வோம், இதை எழுதும்போதே அந்த ரோஸ் கலர் சுண்ணாம்பு வாசமும்,அசோகா பாக்கு வாசமும் மணம் வீசுது , கால ஓட்டத்தில் அசோகா பாக்கு காணாமல் போய்விட்டது அதுப்போல தங்சாவூர் தட்டு செய்பவர்களின் எண்ணிக்கையும் குறைந்து விட்டதாக ஆசிரியர் வேதனைப் படுகிறார்,

மேலும் பத்தர்வீடு, செட்டியார் வீடு போன்றவைகளை வாசிக்கும்போது நான் தஞ்சாவூருக்கே போய்வந்தேன், அந்தப் பகுதிகளில் பெரும்பாலும் ஒருவர் வீட்டை தொழிலை வைத்தே அடையாளப்படுத்தும் முறை இன்றும் உள்ளது, அதை நாவலில் சரியாக பயன்படுத்திய ஆசிரியரை வெகுவாக பாராட்டலாம்,

தஞ்சாவூர் தட்டின் தொழில் நுட்பத்தையும் ரத்தினம் என்ற கேரக்டரின் மனித நேயத்தையும் கலந்து ஒரு அற்புதமான நாவலை உருவாக்கிய இராமதாசு அவர்கள் மென்மேலும் பல நூல்களை இச்சமூக மாற்றத்திற்காக தர வேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.

**நாகை ஆசைத்தம்பி**
**கோவை**

### ஆசை ...

ஆசை என்னும் கடலில்
அலை மோதும் ஓடங்கள்
நாம்! புதையலை தேடும் நாம்
புதை குழியை
சந்திக்க தயாரா?

புன்னகை என்னும்
புதையல் நம்மிடமே
உள்ளது ஆசை
என்னும் புதைகுழியும்
நம்மிடமே உள்ளது!
தேடும் நம் பார்வையில்
புதையலும் கிடைக்கலாம்
புதைகுழியும் கிடைக்கலாம்
கிடைத்ததை கொண்டு
கிரீடம் செய்வோம்
வெற்றியின் வானில்
அதனை சூட்டுவோம்!



**மீனாட்சி பாண்டியன்**
திருவண்ணாமலை



### காலம் காட்டும் கடிகாரம்

முக்கடலில் செம்மாந்து
முப்பாலே நிற்குது.

எழுந்து வரும் அலைமீது
ஐயன் எழுத்தாணி எழுதுது.

வான்புகழ் வள்ளுவனின்
தேன்த்தமிழ்ச் சிகரமாய்

ஆகாயவிண்மீனும்
அண்ணாந்து பார்க்குது.

எக்காலம் கடந்து செல்லும்
முப்பாட்டான் சொல்லது

எழுதிவைத்த எழுத்தெல்லாம்
விளக்காக ஒளிருது.

கடல் வந்து கால் பணிந்து
காணிக்கை செலுத்தியே

உலகளந்த இரண்டடியின்
காலடியை வணங்குது.

உப்பரிக்கும் கடலிங்கே
கொப்பளித்துக் குலுங்குது.

உயிர் அமுதக் குறள் படித்துத்
தேனாகத் திரியுது.

ஆழிசூழ் அலை வந்தும்
அசையாதக் கற்சிலையாய்

ஊழி வந்து இழுத்த போதும்
உடையாதத் தத்துவமாய்


முக்காலமும் காட்டி நிற்கும்
காலத்தின் கடிகாரம்.

எதனுள்ளும் ஊடுறுவும்
பழந்தமிழன் அதிகாரம்.

கலங்கரைவிளக்கமாகக்
கடல்மீது நிற்கின்றான்.

உலகத்தின் பொதுமறையாய்
திருக்குறளைத் தந்திட்டான்.

**நறுமுகை.**



### அம்மாவின் வீடு

கொல்லைப்புற விளக்கை
மறக்காமல் அணைத்து விடு
சுசிலாவை தினமும் கோலம்
போட சொல்
மோட்டாரை ரொம்ப நேரம்
போட்டு தொட்டியில் நீரை
வழிய விடாதே
கேஸ் அடுப்பு சிலிண்டரை
உடனுக்குடன் மூடிவிடு

சில நாள் வெளியூர்
சென்றாலும்
மானசிகமாக வீட்டையும்
உடன் அழைத்துச் சென்று
தொலைபேசியில் அழைத்து
ஒவ்வொன்றாய் சொல்லும்
அம்மா ஐந்து நாட்களாய்
நினைவின்றி மருத்துவ
மனையில்
எல்லாவற்றையும்
மறக்காமல்
செய்கிறேன்
அவள்
சொல்லாமலே



**நாகை பாலா**



### ரங்கராட்டினம்

நீ வந்து பேசிச்
சிரித்துக் குறும்புகள் செய்து
அணைத்து நாம் விளையாடி
மகிழும் போதெல்லாம்
குறும்புக் கதைகள் படித்து
ரசித்ததைப் போல்
அட்ராசிட்டி அலப்பரை
செய்கிறது என் மனசு!
இன்றென்ன முருங்கைக்காய்
சாப்பிட்டாயா என்ன?
என்று உன் கண்கள்
கேட்கும் கேள்வியில்
என் கா த ல் கண்காட்சியில்
ரங்கராட்டினம் சுற்றி விட்டு
இறங்கினாற் போல்
மயக்கமுறுகிறது!
எப்பொழுதாவது ஒரு முறை
தான் வருகிறாய்!
ஆனால் எப்பொழுதுமே
உன்னை நினைத்துக்
கொள்ளும் படியான
கவிதைகளையல்லவா
எனக்குள் எழுதி விட்டுப்
போகிறாய்! உனக்காகவே
இன்னொரு
பிறவியெடுக்கத்
தவமிருக்கும்
ஆசை
வருகிறது
எனக்கு !(ள்!)



**முத்து**
**ஆனந்த்** வேலூர்




## போராட்டமே வாழ்க்கை

இலையுதிர்க் காலமென்து
இலைக்குதானே தவிர
வேர்களுக்கு அல்ல,,,

வறுமை என்பது தேடலுக்கான
மந்திரம்தானே தவிர
வீழ்வதற்கான தந்திரமல்ல,,,

போராட்டம்தான் வாழ்க்கை
புரிந்துக்கொண்டால் நிம்மதி.

**நாகை ஆசைத்தம்பி**
கோவை



## முத்துக்களோ கண்கள்

உன்னைப் பற்றிப் பேசுவதும்
எழுதுவதும் மகிழ்வதும்
பாடுவதும் மட்டுமல்ல
உன்னைப் பற்றி
நினைப்பதும் கூட
எனக்குக் கா த ல் தான்!
விதவிதமாக என்னை
நோக்கும் உன் விழிகள்
இருக்கிறதே அது என்
கனவில் வந்தாலும் கூட
*முத்துக்களோ கண்கள்
என்று பிரமிக்கிறேன்
நான்!
உன் கண்களை ரசிக்கின்ற
பொழுதுகளிலெல்லாம்
சின்னக் கவுண்டர்
விஜய்காந்த் கோர்த்துத் தந்த
முத்து மணி மாலை போல்
உனக்கும் நான் வழங்க
ஆசை! ஆனால் அது
வரையே என் ஆவல்!
அதில் வரும் பம்பரக்
காட்சி போல் நான்
ஒரே ஒரு வினாடி கூட
ஆசைப்பட்டதில்லை!
நீ என்னை நல்லவன் என்று
கூடச் சொல்ல வேண்டாம்
அதை விட அழகான
உன் மு த் த ங் க ள்
போதும்!

## தித்திப்பதோ கன்னம்

எனக்குப்பிடித்த இனிப்பு
வகைகள் எதுவெதுவென்று
நீ என் காதைச் செல்லமாகக்
கடித்தபடியே கேட்கிறாய்!
உன் ரகசிய ஆசை
என்னவென்று என்
பதிலுக்குத் தெரியாதா
என்ன?! என் செல்லச்
சீமாட்டி உன்னைச்
சீண்டி ரசிப்பதும்(கூட)
என் அழகான ஆசைகளில்
ஒன்றென்று என்
அன்பிற்குத் தெரியாதா
என்ன? கருப்பட்டி, கரும்பில்
தொடங்கித்தொடர்ந்து
தொடர்கிறேன்!
நீயும்(கூடக்)கடைசி வரை
*தித்திப்பது உன் கன்னம்
என்று நான் சொல்லும் வரை
விடவில்லை விடவில்லை
விடவேயில்லை!
அப்பொழுது தான் நான்
அந்த(ரங்க) உண்மையைக்
கண்டுபிடித்தேன்!
ஆம் அன்பே! எல்லா
ஊர்களின் குறும்பையும்
நீ குத்தகை அல்லவா
எடுத்திருக்கிறாய்!

## சந்தித்த வேளையில்


நீ கவனித்திருக்கிறாயோ
இல்லையோ என் இனிய
வசந்தமே *நாம் சந்தித்த
வேளைகளில் இது தான்
வேலையென்று நம்
இருவரிடையே வந்து
ஒட்டிக் கொள்ளும் பார்
இந்தக் காதல்!
அந்த அன்பிற்கும்
அதன் பணிக்கும் நீயும்
நானும் என்ன
வேண்டுமானாலும்
செய்யலாம்!
அந்தக் கடமையைச்
செயலாற்றவே நான்
முழுமையான அன்பை
உன்னிடத்தில்
விதைத்தேன்!
உன் அழகிய குரலில்
அடிக்கடி குறள் சொல்கிறாய்!
அதன் பிறகே நான்
உன்னைச் *சந்திக்கும்
வேலைகளும் அதற்கெனவே
காத்திருக்கும் காதலின்
வேலைகளும் இனிதே
இனிதாக நிறைவேறுகிறது!
இனியெல்லாம் வரமே!
சுகமே! வாழ்வே! வசந்தமே!
என்று விதவிதமாகச் சொல்லி
காதலுக்கான கோடிட்ட
இடங்களை நீயும் நானும்
நிரப்பிக் கொள்ளலாம்!

## சிந்திக்கவேயில்லை!

நீ என்னவெல்லாமோ
சொன்னாலும் நான்
*சிந்திக்கவேயில்லை
காதல் ஒன்று மட்டுமே
அப்பொழுதெல்லாம் என்
கண் முன்னே நிற்கும்....
அல்ல....அல்ல.... கண்
முன்னே தாண்டவமாடும்!
நீ திட்டம் போட்டு
என்னைத்திருட வந்தாலும்
சரி ஒரு பட்டாம் பூச்சி
போலத் திடீரென வந்தாலும்
சரி கொஞ்சமும் சிந்திக்காமல்
உனக்கு வசந்தமாய்
ஒரு வணக்கம் சொல்லி
வரவேற்கிறது என் கா த ல்!
உன் அங்கத்தில்
ஓர் இடத்தில் கூடத்
தங்கம் இடம் பெறா
விட்டாலும் என்
இல்லம் தேடி வந்த
பொன்மகள் அல்லவா நீ!?
எப்படித்தான் தெரியுமோ
என்று தெரியவில்லை!
நீ வரும் போது தான்
அந்தத் தென்றல் கூடத்
தெருப் பக்கம் வருகை
தருகிறது!

## தந்து விட்டேன் என்னை....

உன்னை உயிருக்கு
உயிராகக்கா த லி க் கி றேன்
என்பதை நீ சொல்லில்
மட்டுமல்ல அடிக்கடி
செயலிலும் (கூட)
உணர்த்துகிறாய்!
எனக்கு அதைப்
பற்றியெல்லாம்
சொல்லவும் தெரியாது
செய்யவும் தெரியாது!
எனக்குத்தெரிந்த வரையில்
உண்மையிலும்
உண்மையாகக்காதலெனும்
காதலாகத் *தந்து விட்டேன்
என்னை!
நீ வருவதால் என்
கனவுகள் வரம் வாங்கி
வந்திருக்கிறதென்றால்
உன் காதலோ எனக்கு
வாழ்க்கையையே
பரிசளித்திருக்கிறது!
வீழும் காதல் வரலாறென்றால்
வாழும் காதல் வரமல்லவா!
என்னைத்தந்து விட்ட
பிறகேஎனக்குத்தெரிந்தது
நீ இரவிலும் கூட
கபடி விளையாடும்
வீராங்கனை என்று!



**முத்து ஆனந்த்**
வேலூர்

## அகவிலைப்படி

அகவிலைப்படி என்றாலே உடனே நினைவுக்கு வருவது அரசு மற்றும் பொதுத்துறை ஊழியர்கள், ஓய்வூதியர்கள் தான். ஒவ்வொரு ஆறு மாதங்கள் சென்றதும் அகவிலைப்படி உயர்வுக்கான அரசாணை வெளியாகிவிட்டதா என்பது தான் ஊழியர்களிடையே இடம், பொருள், ஏவல் இன்றி பேச்சுப் பொருளாக இருக்கும். அகவிலைப்படி உயர்வு அறிவித்து பத்து நாட்கள் ஆகிவிட்டது இன்னும் ஒன்றிய அரசே உத்தரவு பிறப்பிக்கவில்லை... தமிழ் நாடு அரசு எப்போது அரசாணை வெளியிடும் என்று சலிப்பு ஊழியர்களிடையே பவனி வரும். இந்நிலை ஊழியர்கள் மறைந்து மண்ணுக்குள் (அ) எரியூட்டப்படும் வரை தொடரும்... மயானத்தில் சிறிது நேரம் மரணித்தவர் பற்றி இரங்கல் பேச்சுத் தொடரும். பிறகு, மயானத்திலேயே ஒருவர் விசாரிப்பார். அகவிலைப்படி உத்தரவு வழங்கப்பட்டு விட்டதா? நிலுவைத் தொகை எப்போது கிடைக்கும் என்ற உரையாடல் தொடரும். எங்கே இருக்கிறோம், எதற்காகக்கூடியுள்ளோம் என்பதை முற்றிலும் உணராமல் இதுபற்றித்தான் பேச்சுத் தொடரும்...பாவம்.. அரசு ஊழியர்கள். அவரவர் கவலை, எதிர்பார்ப்பு அவரவருக்கு.... அகவிலைப்படி உயர்ந்தால் வாழ்வு மலரும். அழுத்தம் குறைந்து மனம் மகிழும். விலை ஏற்றம் வந்தால் தாங்கும் சக்தி மேம்படும். ஊழியர்கள் வாழ்வில் அது ஒரு நம்பிக்கை. வீட்டுச் செலவிற்கு உதவும் தோழன். வாழ்க்கைப் பாதையில் துணை நிற்கும் நண்பன். சிறு சம்பளத்துக்கும் உற்சாகம் தரும். சிரம நேரத்தில் ஆதரவு புரியும். அகவிலைப்படி என்பது வெறும் பணமல்ல... அது உழைப்பாளியின் வாழ்வின் உறுதியான பலம். இந்நிலை எப்போதும்மாறாது.



**உ.மு.ந.ராசன் கலாமணி**
கோயம்புத்தூர்.



## சுற்றமாம்.. சுற்றம்.!

உற்றார் உறவார்..
அக்காள் தங்கை.. அண்ணன் தம்பி..
இன்னும் எத்தனை உறவுகளோ..?
யாருக்கு எத்தனை முகங்களோ..!

முகத்துக்கு முன்னே.. முதுகுக்குப் பின்னே..
நகத்துக்கு சதையாய் நடிப்பவர் முன்னே..
அகத்துக்குள் இருப்பது என்னே.. என்னே..?
அறியேன் நான் ஒரு மண்ணே..! மண்ணே..!

தராசுத் தட்டிலே.. காசு ஒருப் பக்கம்.. பாசம்
மற்றொரு தட்டினில் வைத்தால்.. காசுக்குப்
பக்கம் தட்டுகள் தாழும்.. பாசத்தைச் சுற்றம்
பாதையில் வீசும்..!

போருக்குப் போகயில் மாமன் மச்சான்..
நீருக்கும் பாலுக்கும் வேற்றுமை வச்சான்!
யாருக்கு யார்யிங்கு உறவென வச்சான்?
ஏறுக்கு மாறாய்..பெயர் எவன் வச்சான்?

சொந்தமா.. பந்தமா.. சுற்றமா . வாழ்விலே
நொந்தவர் பக்கமே யாரிங்கு வந்தான்.?
விந்தையாய் இருக்குதே.. வீதிக்கு வீதி..
அநாதை இல்லமா? ஆண்டன்குற்றமா?

அப்பனை ஆத்தாளை பிச்சைக்கு விரட்டி..
ஆயிரம் கோவிலில் அபிசேகம் செய்தான்.!
அண்ணனும் தம்பியும் சொத்துக்கு சண்டை..
அதன்பெயர் சுற்றமா? ஆராய்ந்து பார்ப்பாய்!



காசுக்குச் சொந்தம்.. கடமைக்கு
உறவு.. தூசுக்கு நிகராம் !
துயரத்தில் உதவும் யாவரும்
உறவாம்.. தூக்கியே எரிந்தால்
தூரத்து உறவாம்.! சுற்றமாம்
சுற்றம்..!
சொன்னவன் யாரடா.!

**வே.கல்யாண்குமார்.**




## மங்காத தமிழ் என்று பொங்கலே பொங்கு !

உலகம் தோன்றியபோதே தோன்றிய
உலகின் முதல்மொழி நம் தமிழ்மொழி !

உலகின் முதல் மனிதன் பேசிய
ஒப்பற்ற உயர்ந்த மொழி தமிழ்மொழி !

பன்மொழி அறிஞர்கள் பலரும் வியந்து
பாராட்டி மகிழ்ந்திடும் மொழி தமிழ்மொழி !

மண் தோன்றும் முன்பே இந்த
மண்ணில் தோன்றிய தமிழ்மொழி !

திருக்குறள் என்ற இணையற்ற நூலை
தரணிக்கு வழங்கிய மொழி தமிழ்மொழி !

காவியங்கள் காப்பியங்கள் நிறைந்த மொழி
கவிஞர்களை முக்காலமும் வழங்கும் மொழி !

தமிழ்த்தாயின் கால்களில் ஒளிர்வது
தன்னிகரில்லா சிலப்பதிகாரமெனும் சிலம்பு !

ஆய்வாளர்கள் அனைவரும் அறிவித்த மெய்
அனைத்து மொழிகளின் தாய் தமிழ் மொழி !

காந்தியடிகளைக் கவர்ந்த மொழி தமிழ்
கடல் கடந்த புலம் பெயர்ந்தோர் பேசும் மொழி !

தமிழ்மொழி ஒலிக்காத நாடே இல்லை
தமிழ்மொழி ஒலிக்காத நாடு நாடே இல்லை !

பல்லாயிரம் ஆண்டுகள் கடந்தும் இன்னும்
பைந்தமிழ் இளமையாக புதுமையாக உள்ளது !

எந்த மொழியும் நம் தமிழ்மொழிக்கு
ஈடு இணை இல்லை என்பது உண்மை !

உலகத்தமிழர்கள் யாவரும் ஒன்றிணைவோம்
ஒப்பற்ற தமிழுக்கு மகுடம்
சூட்டுவோம் !



சங்கத்தமிழ் இன்றும் என்றும்
நன்றே வாழும்
மங்காத தமிழ் என்று பொங்கலே
பொங்கு !

**கவிஞர் இரா .இரவி !**



## என்றும்வாழ்வார் நமது தமிழண்ணல்!

பெரிய கருப்பன் என்ற இயற்பெயர் துறந்து
பெரிய தமிழண்ணலாக உயர்ந்து காட்டியவர் !

தமிழண்ணல் என்பது புனைப்பெயர் மட்டுமல்ல
தமிழின் அண்ணல் காரணப் பெயரானது !

தமிழுக்கு யார் தீங்கு செய்தாலும் உடன்
தயங்காமல் தட்டிக்கேட்ட நெஞ்சுரம் மிக்கார் !

தமிழ்வழிக்கல்விக்காக உண்ணாவிரதம் இருந்தவர்
தமிழை உயிர்மூச்சாகக் கொண்டு வாழ்ந்தவர் !

நெற்குப்பை எனும் சிற்றூரில் பிறந்து
நெல்மணியாய் தமிழ்மணியாய் சிறந்தவர் !

நாகசாமி என்பவரின் பொய்யுரைக்கு உடன்
நாகமெனச் சீறி உண்மைகளை உரைத்தவர் !

நெற்றிக்கண் திறப்பினும் குற்றமே என்று
நெஞ்சுரத்துடன் வாதிட்டடு வாழ்ந்த நக்கீரர் !

தூங்கிய தமிழரைத் தட்டி எழுப்பியவர்
தூங்கும்போதும் தமிழை மட்டுமே நினைத்தவர்!

சதாசிவநகரில் வாழ்ந்து முத்திரைப் பதித்தவர்
சதா தமிழையே என்றும் போற்றியவர் !
என் போன்ற எளியவர்கள் கேட்டபோதும்
இன்முகத்துடன் அணிந்துரை தந்து மகிழ்ந்தவர்!
இறுதி மூச்சு உள்ளவரை இனிய தமிழுக்காக
எழுதியும் பேசியும் வந்த தமிழ் அரிமா !

எத்தனையோ விருதுகள் பெற்றபோதும்
எதையும் தலையில் ஏற்றிக் கொள்ளாதவர் !

தொல்காப்பியதைத் தூக்கிப் பிடித்தவர்
திருக்குறளுக்கு எளிய உரை எழுதியவர் !

சங்க இலக்கியத்தை சாமானியருக்கும்
சிந்திக்கும் வண்ணம் விளக்கி வந்தவர் !

பள்ளி ஆசிரியராகப் பணி தொடங்கி
பல்கலைக்கழக துறைத் தலைவரானவர் !

தீந்தமிழ் தியராசர் கல்லூரியில் பணியாற்றி
தீந் தமிழ் வளர்த்துப் பெருமைப் பெற்றவர் !
மணிவண்ணன் என்ற மணியான மகனைப் பெற்றவர்
மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்து சிறந்தவர் !

தமிழ்த் தேனீ இரா .மோகன் உள்ளிட்ட பலரை
தன் சீடர்களாக உருவாக்கி மகிழ்ந்தவர் !

வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்தவர்
வாழ்நாளை தமிழுக்கு முழுமையாகத் தந்தவர் !

என்றும் மறைவு இல்லை தமிழண்ணலுக்கு
என்றும் வாழ்வார் நமது தமிழண்ணல் !

**கவிஞர் இரா .இரவி !**

## தனித்தமிழ் பொங்கல் !

தனித்தமிழ் இயக்கம் நூற்றாண்டு கண்ட காலமிது
தனித்தமிழ் காக்க தமிழர்கள் அணி வகுப்போம் !
தமிங்கிலம் பேசிடும் அவலத்தை நிறுத்துவோம்
தனித்தமிழ் பேசாவிடினும் தமிழாவது பேசுவோம் !

வடசொல் கலப்பின்றி பேசிப் பழகுவோம்
வந்திட்ட ஆங்கிலக் கலப்பின்றி பேசுவோம் !
ஊடகங்களின் தமிழ்க்கொலைக்கு முடிவு கட்டுவோம்
உணர்வோடு நல்ல தமிழில் பேசி மகிழ்ந்திடுவோம் !

நடந்தவைகள் நடந்தவைகளாக இருக்கட்டும் இனி
நடப்பவைகளை தமிழுக்கு நன்மையாகட்டும் !
தமிழர்களின் அடையாளம் முதல்மொழி தமிழ்
தமிழர்களே நல்ல தமிழ் பேசுவோம் எழுதுவோம் !

அன்னைத் தமிழை அரியணை ஏற்றி மகிழ்வோம்
அகிலம் முழுவதும் ஒலிக்கும் மொழி நம் தமிழ் !
ஆலயங்களில் இனி தமிழ் மட்டுமே ஒலிக்க வேண்டும்
அந்நியமொழி இனி ஆலயத்தில் ஒலிக்க வேண்டாம் !

உயர்நீதி மன்றத்திலும் இனி தமிழ் ஒலிக்க வேண்டும்
உயரதனிச் செம்மொழி தமிழ் சிறப்புற வேண்டும் !
உயர்கல்விகளும் இனி தமிழில் வர வேண்டும்
உரிய உயர்ந்த இடம் தமிழுக்கு வழங்கிட வேண்டும் !

தாய் மொழியிலேயே அனைத்துக் கல்வியும்
தரமாக வழங்கியதால் சிறந்தது சப்பான் நாடு !
தமிழர் திருநாளாம் தை திங்கள் நன்னாளில்
தமிழர்கள் யாவரும் தமிழை வளர்க்க உறுதி ஏற்போம் !

**கவிஞர் இரா .இரவி !**

## ஹைக்கூ !

மனிதனாகச் சாதிக்க
விலக்கு மது !

கேளிக்கை அல்ல
கேடிகளுக்கானது மது !

மகிழ்ச்சி என்று தொடங்கி
துன்பத்தில் முடியும் மது !

வன்முறை வளர்க்கும்
நட்பை அழிக்கும் மது !

வாரம் ஒரு நாள் தொடக்கம்
தினமும் என்றாகும்மது !

ஓசியில் தொடங்கி
திருட்டில் முடியும் மது !

வெறும் வாசகமல்ல
முற்றிலும் உண்மை
குடி குடி கெடுக்கும் !

போராடித் தோற்றன
மரங்கள் புயல் !

வளமான மனிதாபிமானம்
ஏழை வீட்டில் !

உணரவில்லை தன் பலம்
பிச்சையெடுக்கும் யானை !

மரம் விட்டு உதிர்ந்த
கவலையால் இலை
சருகானது !

பார்வையாளர் கூடிட
பொய் பேசுகின்றன
தொலைக்காட்சிகள் !

நடிப்பில் வென்றனர்
நடிகர் திலகத்தை
அரசியல்வாதிகள் !

வந்தார் நேர்மையான
அரசியல்வாதி
கண்டது கனவு !

பேசினார் பொதுநலம்
அருகில் தேர்தல் !

**கவிஞர் இரா .இரவி !**



## கனவு காவியம்...

எல்லாம் முடியும் என்பவனே...
என்னினிய இளைஞனே!
கனவு காண்பது உன்
இதயத்தின் இலட்சிய
வளமை... மூளையின்
இயக்க உரிமை...
வளர்ச்சிப் பயிர் விளையும்
நிலத்தின் வடிவம்...
ஒளியின்றி தவிக்கும்
ஒட்டடை உள்ளத்துக்கு
வழி காட்டி உதவும்
வளமார்ந்த பெரும் கற்பனைக்
கடலின்
கலங்கரை விளக்கம்...
வியப்பில் மிதந்து
விண்மீன் பிடிக்கும்
கனவுக் காரனே
பரிணாம விரிவில்
கடல் மீன் பிடிக்கும்
காரியக் காரனாய்
வளர்ந்தான்...
விஞ்ஞான வீரியத்தில்
வேகமாய் விளைந்தான்...
என்னினிய இளைஞனே...
கனவினை கொச்சைப்படுத்தி
களங்கப் படுத்தும்
மெலிந்த மனமுடையோர்
மேதினியில் நிரம்பவே உண்டு
உண்டு...
உள்ளத்தின் ஒளிச்சுரங்கம்
உணராதவரின் வாய்
வார்த்தைகளில் வசைப்
பூச்சுக்களே வர்ண
ஜாலமிடும்... வாய்மையோ
வெளிவர வழியின்றி
தவியாய் தவிக்கும்...
கனவின்
கருப்பொருள் மூலம்
விஞ்ஞானத்துக்கே
இன்னும்
விளங்காதது...
ஆகாய விமானத்தின்
இயக்க ஆதாரம்
கறுப்புப் பெட்டியில்
கன ஜோராய்
காப்பி ஆவதைப் போல்
மூளைச் சுருக்க
இடுக்குகளில் மூலங்கள்
ஒளிந்திருக்கும்...
கனவின் பெருமைக்குள்
கவனமாய் இருக்க வேண்டிய
கருத்து எச்சரிக்கையும்
ஒன்றொண்டு காண்...
உயிரோட்டம் மிக்க
நிஜ வாழ்க்கையின்
நெருப்பு எதார்த்தத்தை
எதிர் கொள்ளப் பயந்து
தப்பிக்கப் பார்க்கும்
தடம் மாறும் மனம்...
கனவுகளின்
கள் இன்பப் போதை
மயக்கத்தில் இழைந்து
சிக்கிச் சீரழிந்து போகும்
சிரம அபாயம்...
தேனில் தோய்ந்து தன்னிலை
இழந்து தொலைந்து போகும்
ஈக்களின் தேக்கம்...
கனவுகள் புரண்டால்
நனவாகும் சாத்தியம்,
நேர்த்தி கூடிய
நிகழ் கால செதுக்கலில்...
அணைக்காமல் கூட இங்கே
கர்ப்பம் கைகூடும்... ஆனால்
உழைக்காமல் ஒருபோதும்
உன்னத உயர்வு கிட்டாது...
களங்கமில்லா கனவுக்குக்
கூட கண்ணியம் கூடி
கருத்தாய் இயங்குவது
இங்கே கட்டாயம் என்பதை
தூக்கத்திலும் உணர்...
துயரமில்லா தங்கவாழ்வு
உனக்கு தமிழைப் போல்
தரணி புகழும் வண்ணம்
தாராளமாய்
தழைத்தோங்கும்!



**நெல்லை குரலோன்**
பொட்டல் புதூர்







**WANTED**

Needed female staff to look after children, patients.

Contact

9150989424




**WANTED**

Retd, VRS, Home Makers, NRIs, Business Person

Contact

8248951872













தனியார் வாகன உதிரிபாகங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் பணிபுரிய ஆட்கள் தேவை.

**Quality Line Inspector**
Fresher/Exp Male Only
Qualification - ITI/Diploma/B.E

**Final Quality Inspector**
Fresher / Exp - Male/Female
Qualification: 10th/ 12th/ ITI

**VMC Machine operator**
Fresher/ EXP Male only
Qualif: 10th/12th/ITI/Diploma

Mr Prakesh : 8939 940 090
Mr.Neelavanan : 9884 001 253
SALARY BASED ON EXPERIENCE






## ஸ்ரீ கிருஷ்ணர் உபாசகர் பரிகார புகழ்

ஆன்மீக செம்மல் த.பிரகாஷ்
CONTACT US 9597887308, 6380453463
EXPERT IN VEDIC ASTROLOGY
- PREDICTION & SOLUTIONS
- MONEY
- LOVE
- HEALTH
- FAMILY
- BUSINESS
- CAREER
- MARRIAGE

## ARG CONSTRUCTIONS

We Build Your DREAM HOME
Recently We Have Completed Over 50+ Big Projects
SERVICES WE OFFER
- Residential Construction
- Commercial Construction
- Customer Satisfaction

Contact Us 9710348377

## VINAYGA ENTERPRISES

WANTED
COMPUTER OPERATOR (FEMALE)
ONIDA AUTHORISED SERVICE CENTRE
CONTACT: 9962116238
ADDRESS: BHEEMANNA PETTAI, BHEEMANNA 1ST STREET, ALWARPET CHENNAI

## PREMIUM LAND SALE NEAR PARANDUR AIRPORT

YOU ARE LUCKY!
Grab Your Future Investment Today!
Location: Just 6 KM Near Parandur New Airport
Price Details
- ₹700 to ₹2200 per Sq.Ft
- Affordable & High Return Investment

Why Invest Here?
- Fast Developing Area
- Near Upcoming Airport
- Excellent Appreciation Value
- Suitable for Residential & Investment
- Easy Road Access

PLOTS AVAILABLE NOW!
Contact: CT. Guruji
Phone: 90031 32847
LIMITED PLOTS - BOOK NOW!

FINDING THE PERFECT HOUSE YOU CAN CALL HOME
## PREMA ENTERPRISES

DO YOU WANT TO BUY OR SELL PROPERTY OR LAND?
+91 9884417843

## Get Free Jobs Alert on Your WhatsApp

Register Yourself on our 8122664699
WhatsApp Your Name, Age & Address on Above Number
Josh Jobs Team Give u Daily Update of Govt. as Well as Private Jobs

## ST COURIER

The People's Choice
ISO 9001:2008 Certifed
DOMESTRIC- INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St., Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601

Launch Your Own Secure Crypto MLM Software Today!
@4999/- onwards
CALL: 98537 19337, 74369 14247
www.mlmperfect.com

## WANTED

M/F லோடுமேன்,பிக்கர், ஹெல்பர், வர/மாத சம்பளம்: 450-700. உணவு இடம் free day/N8 shift
7540003588

ADVERTISE WITH US
CONTACT US 9438610756

## WANTED
## JAY SECURITY FORCE

பணி வாய்ப்புகள்
- பணிகள்: A.S.D செக்யூரிட்டி கார்டுகள் ஹவுஸ் கீப்பிங்
- இடங்கள்:
  - பெருங்குடி, துரைப் பாக்கம்
  - காரப்பாக்கம், சோழிங்கநல்லூர்
  - விருகம்பாக்கம்

பெண்கள் தேவை
சம்பளம்:- 12500 முதல் 20000 வரை
9791061354 - 8072969599
Head office
NO :1, அம்பாள் அவின்யூ, வி.பி.ஜி அவின்யூ, விரிவாக்கம், மேட்டுக்குப்பம்- சென்னை-97

## செக்யூரிட்டி கார்டுகள் தேவை

கோடம்பாக்கம் சேத்துப்பட்டு புரசைவாக்கம் கோட்டூர்புரம் பகுதிகளில் வேலை செய்ய செக்யூரிட்டி கார்டுகள் தேவை
அணுகவும்: 9840861539

## S.R Call Drivers Travels

24 Hours
Man Power & All Vehicle Available
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49,E.H.Road,Cornation Nagar,K.Pet,Ch-21.

## Just499 JOB WEBSITE SOFTWARE

We Provide Complete Job Portal Software Solution
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

## Euro Kids

Pre-School
Right Start, Flying Start!
Tondiarpet
9940661625
Introducing HEUREKA
THE VISIBLE THINKING CURRICULUM
based on Harvard's Project Zero
Admissions Open for AY 25-26
EuroTots | PlayGroup | Nursery | EuroJunior | EuroSenior
23+ Years of Experience
1,600+ Pre-schools
TUV Nord Safety Certified
No. 19/20, Kummalamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081
a part of LIGHTHOUSE LEARNING GROUP

## just499® MLM SOFTWARE

All Types of MLM Software Solutions Available
Binary | Unilevel | Matrix | Board | Generation | ROI / Investment
ONLY Rs. 499
Website: just499.com
Phone/WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com




**WANTED**

MARKETING HEAD
REAL ESTATE
Fixed Salary Rs.25000/-
& Above + INCENTIVE
(Monthly up to - 1.5 Lakhs)
Age: 25 to 40 Experienced Only
Office @ Anna Nagar
**9790021367**

**WANTED**

COLLECTION EXECUTIVES
TELECALLERS
FOR MNC BANK.
Sal.23,000/-
161, Bells Road, Chennai - 05.
Ct.: 98410 38488 / 93848 17349







































# பல்சுவை களஞ்சியம்



# மீம்ஸ்







# சிக்கனம் எக்கணமும் தேவை





சிக்கனம் என்பது நமக்கு எப்போதும் தேவை நான் சிறு வயதிலிருந்தே சிக்கனமாக இருப்பேன் அதற்கு காரணம் என்னுடைய பெற்றோர்.

பெண்கள் இவ்வுலகின் ஒவ்வொரு அசைவுக்கும் காரணமாக இருப்பவர்கள். ஒரு இல்லம் சந்தோஷ ஊஞ்சலில் ஆனந்தமாக ஆடுவதும் கவலை கடலில் மூழ்குவதும் அந்த இல்லத்தரசியின் கையில்தான் உள்ளது. ஆண்கள் சம்பாதித்து கொண்டு வந்து மனைவியிடம் கொடுப்பதோடு விட்டு விடுகிறார்கள். அந்த பணத்தை பட்ஜெட் போட்டு செலவு செய்தது போக மீதமுள்ள பணத்தை சேமிப்பது பெண்தான். அந்த காலத்தில் பெண்கள் சமையலைறையில் அரிசி பானை மற்றும் அஞ்சறைப்பெட்டியில் பணத்தை சேமித்து வைப்பர். அதுதான் அவர்களின் சேமிப்பு வங்கியாக இருந்தது. இந்த வங்கியில் அவர்கள் வைக்கும் பணத்திற்கு வட்டி கிடைக்காது, ஆனால் நம் பணம் நிச்சயமாக நமக்கு தேவையான நேரத்தில் கிடைக்கும்.
பெண்கள் பணத்தை சேமிப்பதில் மட்டுமல்லாமல் வீட்டில் பயன்படுத்தப்படும் அனைத்து பொருள்களிலும் தங்களின் சேமிப்பு திறமையை பயன் படுத்தி லாபம் அடைவதில் பெண்களுக்கு நிகர் பெண்கள்தான்.
இப்படி பாட்டியின் சேமிப்பு பழக்கம் அம்மாவிடமும் அம்மாவிடமிருந்து எனக்கும், என்னிடமிருந்து என் மக்களுக்கு என்று வழி வழியாக தொடர்கிறது.
தொடங்கும் முதல் ஆசிரியை நல்ல முறையில் சேமிப்பை கையாண்டு அதையே அவரின் வாரிசுக்கு கற்றுக் கொடுத்தால் அதுவே சிறந்த ஒன்று. முதல் கோணல் ஆனால் பிறகு முற்றிலும் கோணல்தான.
இப்படி பணத்தை சேமிப்பது நாம் சம்பாதிக்கும் பணத்திற்கு சமமான சிக்கனம்.

சேமிப்பு என்றால் பணம் மட்டுமல்ல நாம் உபயோகிக்கும் காஸ் மேலும் மளிகை பொருள்கள் என்று எல்லாவற்றிக்கும் சிக்கனமாக செலவழித்து சேமிக்க வேண்டும்
விற்கு எரித்த காலத்தில் பாட்டி விறகை சேமிக்க சிக்கனத்தை கடை பிடித்தார். அம்மா மண்ணெண்ணையை சிக்கனமாக செலவழித்து சேமித்தரர். நான் பிறந்ததிலிருந்து காஸ் அடுப்புதான் அந்த காஸை சிக்கனமாக செலவழித்து சேமிப்பதில் நம் பணமும் சேமிக்கப்படும்.
அடுத்து நான் உபயோகிக்கும் இரண்டு சக்கர வாகனத்தையும் நான் சிக்கனமாக ஒட்டி பெட்ரோலை சேமித்து இருக்கிறேன்

சமையலறையில் மட்டுமல்லாமல் நான் ஓட்டும் இரண்டு சக்கர வாகனத்திலும் என் சிக்கனத்தில் பெரும் பங்கு உண்டு. மிதமான வேகத்தில் ஒரே சீராக வண்டியை ஒட்டுவதால் நல்ல மைலேஜ் கிடைக்கும்.
நாம் ஒருவரே வண்டியை ஓட்டினால் வெகு நாட்கள் நன்றாக இருக்கும்.
இப்படி என் வாழ்க்கையில் வெற்றி மேல் வெற்றி கிடைப்பதை கடைபிடிக்கும் சிக்கனத்தினால்தான்.
சேமிப்பு என்பதே ஒரு உன்னத குணம் அதில் பண சேமிப்போ, காஸ் சேமிப்போ, பெட்ரோல் சேமிப்போ எந்த சேமிப்பாக இருந்தாலும் அக்காலம் முதல் இக்காலம் வரை அதன் ஆசிரியையாக இருப்பது பெண்கள்தான். இது மறுக்க முடியாத மறைக்க முடியாத உண்மை. இந்த உண்மை புரிந்தவர்கள் காண்பது சொர்கம். புரிந்து கொள்ளாதவர்கள் அனுபவிப்பது திரிசங்கு சொர்கம்.
நான் வண்டி ஓட்டும் போது கடைபிடிக்கும் ஐந்து விதிமுறைகள்

1. தொலைதூரம் பார்ப்பது
2. பெரிய அளவில் பார்ப்பது
3. கண்களை நான்கு புறமும் பார்க்க செய்வது.
4. இடைவெளி விட்டு வாகனத்தை ஓட்டுவது
5. சாலைவிதிளை கண்டிப்பாக கடை பிடிப்பது.

இதுரை விபத்தை சந்திக்காமலே வண்டியை ஓட்டி இருக்கிறேன்.
பெண்கள் நினைத்தால் எதையும் செய்யக் கூடிய திறமையுடையவர்கள்.
நம் திறமையை உணர்ந்து விழிப்புடன் எந்த செயலையும் தொடங்கினால் வெற்றி நமக்குதான். பெண்ணாக பிறந்ததை பெருமையாக எண்ணுவது போல நாம் சிக்கனத்தை கடைபிடிப்பது மிகவும் அவசியமாகிறது.நான் சிக்கனத்தை எப்படி கடைபிடிக்கிறேன் என்பதை இதுவரை நான் உங்களுக்கு விளக்கியிருக்கிறேன் .
பண சிக்கனம் நமக்கு ஒரு சேமிப்பை ஏற்படுத்தும். இதனால் நாம் சிக்கனமாக இருப்பது நமக்கு பல விதத்தில் பயன் தரும் . நாம் மகிழ்ச்சியாக இருக்கலாம்.




## விடுகதை

| | |
|---|---|
| அச்சு இல்லாத சக்கரம், அழகு காட்டும் சக்கரம். அது என்ன? | வளையல் |
| வானத்தில் பறக்கும் பறவை இது, ஊரையே சுமக்கும் பறவை இது அது என்ன? | விமானம் |
| ஒட்டியவன் ஒருத்தன், பிரித்தவன் இன்னொருவன். அது என்ன? | கடிதம் |
| உருவத்தில் சிறியவன். உழைப்பில் பெரியவன். அவன் யார்? | எறும்பு |
| நான் சூரியனைக் கடந்து சென்றால் கூட எனக்கு நிழல் ஏற்படாது. நான் யார்? | தென்றல் |

# வாக்கு மறதி..





கடுங் குளிர் நிறைந்த ஒரு இரவில் ஒரு மன்னன் தன் அரண்மனைக்கு வந்தான்.. அரண்மனைவாசலில் மெல்லிய ஆடையுடன் வயது முதிர்ந்த காவலாளியைப் பார்த்தான்.. குளிர் கடுமையாக இருக்கிறதே.. அதை நீ உணரவில்லையா..? என்று கேட்டான்..
ஆம்.. உணர்கிறேன் மன்னா.. ஆனால், குளிரை தடுக்கும் ஆடை என்னிடம் இல்லையே..! என்றான் காவலாளி..

அதற்கு மன்னன், கவலைப்படாதே, நான் அரண்மனை சென்று குளிரை தாங்கும் கம்பளி ஆடையை உனக்கு அனுப்புகிறேன்.. என்று கூறி அரண்மனைக்குள் சென்றான்..

மன்னரின் வார்த்தையை கேட்டு அந்த காவலாளி அகமகிழ்ந்தான்..

அரண்மனைக்கு சென்ற மன்னன் தான் வாக்களித்தை மறந்தே போனான்..

மனிதனின் எத்தனையோ பலவீனங்களில் பாழாய்ப்போன மறதியும் மிக மோசமான ஒன்று.. காலையில் பார்த்தால் அந்த காவலாளி இறந்து கிடந்தான்.. அவனருகே ஒரு கடிதம் இருந்தது.. அந்த கடிதத்தில் இவ்வாறு எழுதப் பட்டிருந்தது.. மன்னா..!! இவ்வளவு நாட்களாக கடும் குளிரை தாங்கி கொண்டிருந்தேன்.. ஆனால், குளிரை தாங்கும் ஆடை கிடைக்கும் என்ற என் எதிர்பார்ப்பு இதுவரை இருந்த என்னுடைய மன உறுதியை குலைத்து என்னை கொன்று கொண்டிருக்கிறது.. வாக்குறுதிய கொடுத்தால் அதனை எப்பாடுபட்டேனும் உறுதியாக காப்பாற்றிட வேண்டும்.. அது வெறும் வெற்று வார்த்தைகளில்லை..

காற்றில் கரையும் வார்த்தை என்றாலும் மற்றவருகளுக்கோ அது 'உயிராகக்கூட' இருக்கலாம்..

*ஆம்..! நீங்கள் கொடுக்கும் வாக்குறுதி, மற்றவரிடம் நீங்கள் எண்ணி பார்க்காத அளவு நம்பிக்கையை ஏற்படுத்தலாம்.. எனவே, அந்த வாக்குறுதிக்கு முன் சற்று யோசியுங்கள்..
வணக்கம்
வாழ்க வளமுடன்.



# ஜோக்ஸ்

"டிவி யிலே மழை வரும்னு சொன்னாங்களே நீங்க கேட்டீங்களா...."
"நான் கேட்கல... அவங்களா சொன்னாங்க...."

"குழந்தையை மண்எண்ணெய் ஊத்தி குளிக்க வைக்கிறாங்களே... ஏன் ?"
"துருதுருன்னு இருக்கானாம்..."

"நான் கொடுத்த மருந்திலே ஏதாவது சேஞ்ச் இருந்துச்சா?"
"மருந்தை தலைகீழா கொட்டி பார்த்துட்டேன்..ஒரு பைசா கூட இல்ல... டாக்டர் "

" திருடன் வரும் போது ஏன் கத்தி கூச்சல் போடல......?"
"எங்க வீட்டிலே கத்தி எல்லாம் கூச்சல் போடாது நாங்க தான் கூச்சல் போடனும் ஏட்டய்யா...."



"டாக்டர் என் புருஷன் எப்ப கண் திறந்து பேசுவார்?"
"பேசுவார் ஆனா கண் திறந்து பேச மாட்டார். வாய் திறந்து தான் பேசுவார் .... "

"ஆபரேசனுக்கு பின்னாடி கண் நல்லா தெரியும்னு டாக்டர் சொன்னார்... "
"நல்லா தெரியுதா ?"
"பின்னாடி எங்க தெரியுது இப்பவும் முன்னாடி தான் தெரியுது.."

"தலையிலே முடி கொட்டுறதுக்கு என்ன காரணம்..?"
"வேற என்ன ... தலையிலே முடி இருக்குறது தான் ... "

" தொப்பை குறைய தினமும் வெறும் வயிற்றில் நடக்கனும்.. "
" யார் வயிற்றில் டாக்டர்..?"

-



# ஜோதிடம் அறிவோம்



## ஏமாற்றத்திற்கு ஆளாகும் ராசிக்காரர்கள்..

உண்மையில்லாத விஷயங்களை நம்புவதற்கு அதிக வாய்ப்புள்ள ராசிகள் மீனம், துலாம், கடகம் மற்றும் தனுசு ராசிக்காரர்கள் ஆவர்.

### 1. மீன ராசி



கட்டத்தில் கடைசி ராசியாகும். இந்த ராசியில் பிறந்தவர்கள் பெரும்பாலும் கனிவானவர்கள், கற்பனைத் திறன் கொண்டவர்கள், மற்றவர்களைப் புரிந்து கொள்வதில் வல்லவர்கள். ஆனால் சில நேரங்களில் அவர்களின் கருணை மற்றவர்களை மிக எளிதாக நம்ப வைக்கும். யாரோ ஒருவர் பொய் சொல்கிறார்கள் அல்லது ஏமாற்ற முயற்சிக்கிறார்கள் என்பதற்கான அறிகுறிகளை அவர்கள் புறக்கணிக்கலாம். ஏனென்றால் அவர்கள் மக்களைப் பற்றிச் சிறந்ததை நம்ப விரும்புகிறார்கள். மேலும், மீன ராசிக்காரர்கள் தங்கள் கனவு உலகங்களுக்குள் தப்பிக்க விரும்புவார்கள், இது உண்மை இல்லாத விஷயங்களை நம்புவதற்கு அதிக வாய்ப்புள்ளது.

### 2. துலாம் ராசி



இந்த ராசியினர் எப்போதும் விஷயங்கள் நியாயமாகவும் அமைதியாகவும் இருக்க வேண்டும் என்று விரும்புகிறவர்கள். அவர்கள் ஒரு சூழ்நிலையின் இரு பக்கங்களையும் பார்ப்பதில் திறமையானவர்கள், ஆனால் இது நேர்மையற்றவர்கள் மீது அவர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தக்கூடும். துலா ராசிக்காரர்கள் வாதிடுவதை விரும்புவதில்லை, அதனால் ஏதாவது தவறாகத் தோன்றும்போது அவர்கள் புறக்கணிக்கக்கூடும், ஏனெனில் அவர்கள் சண்டையைத் தொடங்க விரும்ப மாட்டார்கள். இது அவற்றைப் பயன்படுத்திக்கொள்ள விரும்பும் மக்களுக்கு எளிதான இலக்குகளாக மாற்றும்.

### 3. கடக ராசி



பொதுவாக தங்கள் அன்புக்குரியவர்களை மிகவும் அக்கறையுடன் பாதுகாப்புடனும் நடத்துகிறார்கள். மற்றவர்களைக் கவனித்துக் கொள்வதில் சிறந்தவர்கள், ஆனால் சில நேரங்களில் அவர்கள் அதிகமாக அக்கறை காட்டுகிறார்கள். யாராவது பொய் சொல்லும்போது அல்லது தங்கள் குடும்பத்தை மகிழ்ச்சியாக வைத்திருக்க விரும்புவதால் அவர்களைப் பயன்படுத்தும்போது அவர்கள் புறக்கணிக்கக்கூடும். கடக ராசிக்காரர்கள், மற்றவர்களிடத்தில் அன்பு செலுத்தும்போது, இவர்களின் உணர்வுகளைப் பற்றிக் கவலைப்படாதவர்களால் இவர்கள் எளிதாக ஏமாற்றிவிடக்கூடும்.

### 4. தனுசு ராசி



ஆராய்ந்து மகிழ்வதை விரும்புகிறவர்கள். எப்போதும் அடுத்த பெரிய சாகசத்தைத் தேடுபவர்கள், இது உண்மையாக இருக்க முடியாத அளவுக்கு நன்றாகத் தோன்றும் விஷயங்களை நம்பவும் அவர்களைத் தூண்டும். தனுசு ராசிக்காரர்கள் நம்பிக்கையானவர்கள். மக்களைச் சிறந்தவர்களாக நினைப்பார்கள். அதனால் அவர்களை யாராவது ஏமாற்ற முயற்சிக்கும்போது அது அவர்களுக்கே தெரியாமல் போகலாம். இந்த ராசியினர் உலகத்தை ஒரு மகிழ்ச்சியான இடமாகக் காண விரும்புகிறார்கள், இது அவர்களை மோசடிகள் மற்றும் பொய்களுக்கு எளிய இலக்காக மாற்ற வழிவகுக்கும்.

மேற்சொன்ன இந்த ராசிக்காரர்கள் உண்மையில்லாத விஷயங்களை நம்புவதற்கு அதிக வாய்ப்பிருந்தாலும், அனைத்து ராசியினரும் மற்ற ராசிக்காரர்களிடம் கவனமாக இருப்பது முக்கியம். எந்த ராசிக்காரர்களும், தனிப்பட்ட முறையில் கவனம் செலுத்தவில்லை என்றால் ஏமாற்றப்படலாம்.

புத்திசாலியாக இருப்பதன் மூலமும், அவர்களின் உள்ளுணர்வைக் கேட்பதன் மூலம், எப்போது வேண்டாம் என்று சொல்ல வேண்டும் என்பதை அறிந்துகொள்வதன் மூலமும், எல்லோரும் நேர்மையாக இல்லாத இந்த உலகில் எவரும் முட்டாளாக்கப்படுவதில் இருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளலாம்.

புதன் மற்றும் சுக்கிரன் சூரியனுக்கு அருகில் வருவதால், அவை எப்போதும் அஸ்தங்கம் அடைகின்றன. சூரியனுக்கு மிக அருகில் வரும் கிரகம் புதன் என்பதால், பொதுவாகவே இது சுமார் 70 சதவீத பிறப்பு ஜாதகத்திலும் அஸ்தங்கம் அடைந்தே காணப்படும். புதன் நேர்கதியில் 14 பாகை வித்தியாசத்திலும், வக்ர கதியில் 12 பாகை வித்தியாசத்திலும் சூரியனுக்கு முன்பின் ராசிகளில் அஸ்தங்கம் அடைவார்.

மேலும் ஒருவரின் ஜாதகத்தில், புதன் அஸ்தங்கம் அடைந்தவர்களும், அவர்தம் அறிவுத் திறன் தவறான / வெற்று கர்வத்தால் தடுமாற்றம் ஏற்படும். அதிக தன்னம்பிக்கையால் காரியங்கள் செயல் இழந்து விடும். எளிதாக இவர் ஏமாறவே செய்வார் / பிறரால் ஏமாற்றப்படுவார்.

அஷ்டவர்கம் எனும் ஜோதிட கணிதம் மூலம் இதனைச் சொல்லவேண்டுமானால், லக்கினத்தை விட 4 ஆம் இடம் அதிக பரல் பெற்றிருப்பின் அவர் அறிவு சொல்படி நடப்பவர் எதனையும் தாம் அறிந்த புரிந்த அறிவு சார்ந்து முடிவெடுப்பதால், இவரின் முடிவுகள் நியாயம் இல்லாமல் போகும். அது ஏமாற்றத்தைத் தருவதாக இருக்கவே செய்யும். அதே சமயம் நான்காம் இடத்தை விட லக்கனத்தில் அதிக பரல் பெற்றிருக்கும் ஒரு நபர் ஆத்மா சொல்படி நடப்பார், அதனால் அவர் எடுக்கும் முடிவுகளில் நியாயம் இருக்கவே செய்யும், யாரிடமும் ஏமாற்றம் அவ்வளவு எளிதாக அடையமாட்டார்.

"ஜோதிடம் ஒரு முன் எச்சரிக்கையே தவிர , முடிவு அல்ல என்பதனை உணரவும்.. அதே போல் ஜோதிடர் வழிகாட்டியே தவிர, கடவுள் அல்ல.. பரிகாரம், என்பது ஜாதகர் மனமாற்றமும், கடவுளிடம் முழு சரணாகதியுமே ஆகும்."



## நோய்கள் நீக்கும் சிவன்!

தக்கன் என்னும் கொடியவன் தனது 27 மகள்களை அழகிய சோமன் எனப்படும் சந்திரனுக்குத் திருமணம் செய்துவைத்தார். அப்போது தக்கன் தனது மகள்களை சந்திரனிடம் ஒப்படைத்து, "27 மகள்களிடமும் சமமாக அன்பைச் செலுத்தி வாழவேண்டும்" என்று நிபந்தனை விதித்தார். ஆனால் சோமனோ, மிகுந்த அழகியான ரோகிணியிடம் மட்டும் அதிகப்படியான காதல் கொண்டு வாழ்ந்து வந்தார். இதனால் ஏனைய 26 பேரும் தக்கனிடம் முறையிட்டனர்.

இதைக் கேட்ட தக்கன் பெரும் சீற்றம் கொண்டு, சோமனுக்கு நாளும் ஒரு கலை குறைந்துவர சாபம் அளித்தார். அதுவே தேய்பிறையானது. சாபம் பலித்தது. எச்சமாக ஒரே ஒரு கலை மிஞ்சியிருந்த வேளையில், திருவாரூர் வந்து புற்றிடம் கொண்ட பெருமானை வழிபட்டார். தேவதீர்த்தத்தில் நீராடி, ஐந்தெழுத்து மந்திரத்தை நாளெல்லாம் நெஞ்சுருக ஓதியவாறு மடப்புரத்தில் சிவலிங்கம் ஸ்தாபித்து முறையாக வழிபட்டார். சிவனும் விடை மீது அமர்ந்து காட்சி அளித்து அருளினார்.

சோமனும் தனக்கு நேர்ந்த சாபத்தை மனங்கசிந்து கண்ணீர் சிந்திக் கூறிப் பணிந்து நின்றார். வேண்டியோருக்கு வேண்டியதை அளிக்கும் சிவனும், ""தக்கன் சாபத்தால் நீ தேய்ந்தாலும் பின்னர் நாளொரு கலையாக வளர்வாய்!" என்று அருளினார். அதுவே வளர்பிறையானது. சோமனின் குறையைத் தீர்த்து அருள்புரிந்ததால், இத்தல இறைவன் சோமநாதப் பெருமான் என்று அழைக்கப் பெறுகிறார்.

வரம் பெற்ற சோமன், ""பக்தர்கள் வந்து வழிபட்டு குறைகளைக் களையும் வகையில் நீங்கள் அருள்புரிய வேண்டும்" என்றார்.

சோமன் ஸ்தாபித்த சிவலிங்கமே "சோமநாதர்' .

சைவ சமயத்தின் தலைமைப் பீடமாகவும், விராட புருஷஸ்தலமாகவும், பிறந்தாலே முக்தி தருவதும், உலகத்தில் முதலில் தோன்றிய மூர்த்திதலமாகவும், நால்வரால் பாடல் பெற்றதாகவும் விளங்குவது தியாகேசர் உறையும் திருவாரூர் ஆகும்.





அருணகிரிநாதரால் திருப்புகழ் பாட பெற்ற தலமாகவும் மடப்புரம் தலம் உள்ளது. மேற்கு நோக்கி அமையப் பெற்ற அற்புத சிவன் கோயில்.

ஞானத்தையும் யோகங்களையும் அளிக்க வல்ல அன்னையாக ஸ்ரீஞானசித்தி யோகாம்பிகை அருள்கிறார்.

"சோமநாதரை வேண்டுவோரின் துன்பங்கள் நீங்கும். மருந்துகள் முதலியவற்றால் தீராத நோய்களில் விடுபட்டு நலம் பெறுவர். கல்வி, செல்வம், புகழ், சித்தி, முக்தி உள்ளிட்ட பேறுகளை எளிதில் எய்துவர்' என்பது ஐதீகம். திங்கள்கிழமை வழிபட்டால் பக்தர்கள் கூடுதல் பலன்களைப் பெறலாம்.

இங்குள்ள சந்திர புஷ்கரணி தீர்த்தத்தில் நீராடுவோருக்கு தோல் நோய் உள்பட அனைத்து விதமான நோய்களும் விலகுகின்றன என்பதை பக்தர்கள் உணர்கின்றனர்.

## மகாளய பட்சம் என்றால் என்ன என்று தெரியுமா?



மகாளய அமாவாசை நாளில் மகாவிஷ்ணுவின் ஆசீர்வாதம் பித்ருக்களை தேடி வரும். அந்த ஆசீர்வாதத்தை பித்ருக்களும் நம்மிடம் நேரடியாக எடுத்து வரக்கூடும்.

எனவே மகாளயபட்ச நாட்களில் பித்ருக்களை வழிபாடு செய்து, விஷ்ணுவின் அருளை பெறத் தவறாதீர்கள்.

மாதம் தோறும் அமாவாசை வந்தாலும் தை அமாவாசை, ஆடி அமாவாசை, மகாளய அமாவாசை ஆகிய மூன்று அமாவாசைகளும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. இந்த மூன்றிலும் அதிக புண்ணியத்தை தருவது மகாளய அமாவாசை ஆகும்.

அதாவது 15 நாட்கள் பித்ருக்களை வழிபட வேண்டியதை மகாளய அமாவாசை குறிக்கிறது. பவுர்ணமி தினத்துக்கு மறுநாள் பிரதமை திதியில் இருந்து மகாளய அமாவாசை வரை உள்ள 15 நாட்களும் பித்ருக்கள் பூலோகத்தில் இருக்கும் காலமாக கணக்கிடப்பட்டுள்ளது. அதன்படி இந்த ஆண்டு கடந்த 8- ந்தேதி மகாளயம் தொடங்கியது. வருகிற 21-ந்தேதி வரையிலான 14 நாட்கள் பித்ருக்கள் நம்மை நெருங்கி இருக்கும் மகாளயபட்ச தினங்களாகும்.

திதி என்னவென்று தெரியாதவர்கள், மகாளய அமாவாசை தினத்தன்று தர்ப்பணத்தை மிகவும் சிரத்தையாக செய்தல் வேண்டும். தர்ப்பணத்தை மிக, மிக ஆடம்பரமாக செய்ய வேண்டும் என்பதில்லை. எளிமையாக செய்தாலே போதும், பித்ருக்கள் மனம் மகிழ்ந்து நம்மை ஆசீர்வதிப்பார்கள்.

இந்த 15 நாட்களில் வரும் ஒவ்வொரு திதியும், ஒவ்வொரு வகை பித்ருக்களுக்கு உகந்த தினமாக கருதப்படுகிறது. அந்த திதி சிறப்பு நாட்களை பெரியவர்களிடம் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

## வெவ்வேறு நட்சத்திரங்களில் நின்ற "சனி" தரும் பலன்கள் என்னென்ன?

வேத ஜோதிடத்தின் பணி நிர்வாகி ஆன "சனி கிரகம்", ஒழுக்கம், பொறுப்பு, பொறுமை மற்றும் கர்ம பாடங்களைக் குறிக்கிறது. 27 நட்சத்திரங்களில் சந்திர மாளிகைகள் ஒன்றில் அதன் இடத்தைப் பொறுத்து, சனி வெவ்வேறு வழிகளில் வெளிப்படுகிறது, ஒரு நபரின் வாழ்க்கை பாதை, போராட்டங்கள் மற்றும் வளர்ச்சியை வடிவமைக்கிறது. ஒவ்வொரு நட்சத்திரத்தையும் சனி எவ்வாறு பாதிக்கிறது என்பதை தெரிந்துகொள்வோம்.

**அஸ்வினியில் சனி (மேஷம் 0° - 13°20') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

அஸ்வினியில் சனி இந்த நட்சத்திரத்தின் தூண்டுதல் தன்மையை மெதுவாக்குகிறது, இது புதிய முயற்சிகளைத் தொடங்குவதில் ஜாதகரை முறையாக்குகிறது. அவர்கள் தலைமை மற்றும் குணப்படுத்தும் திறன்களில் தாமதங்களை அனுபவிக்கலாம், ஆனால் காலப்போக்கில் வலுவான உறுதியை வளர்த்துக் கொள்ளலாம்.

**பரணியில் சனி (மேஷம் 13°20' - 26°40') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

பரணி சுக்கிரனால் ஆளப்படுகிறது மற்றும் மாற்றத்தைக் குறிக்கிறது. சனி இங்கே பொருள் சார்ந்த விஷயங்களில் போராட்டங்களைக் கொண்டு வருகிறது, பொறுமை தேவைப்படுகிறது. ஜாதகர்கள் பொறுப்புகளைக் கையாள்வதில் ஒழுக்கத்தைக் கற்றுக் கொள்கிறார்கள் மற்றும் உறவுகள் மற்றும் நெறிமுறைகள் தொடர்பான கர்ம பாடங்களை எதிர்கொள்ள நேரிடும்.

**கிருத்திகையில் சனி (மேஷம் 26°40' - ரிஷபம் 10°00') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

கிருத்திகையில், சனி புத்தியைக் கூர்மையாக்கி, வலுவான பணி நெறிமுறையை வளர்க்கிறது. இருப்பினும், இது ஒரு கடினமான மனநிலையையும் உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதில் சிரமத்தையும் உருவாக்கக்கூடும். இந்த ஜாதகர்கள் மாயைகளை துண்டிப்பதில் திறமையானவர்கள், ஆனால் இரக்கத்துடன் செயல்பட வேண்டும்.

**ரோஹிணியில் சனி (ரிஷபம் 10°00' - 23°20') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

ரோகிணி படைப்பாற்றல் மற்றும் பொருள் மிகுதியுடன் தொடர்புடையது. சனி இங்கு அமைந்திருப்பது செழிப்பை தாமதப்படுத்தலாம், ஆனால் நிலையான, நீண்டகால வளர்ச்சியை உறுதி செய்கிறது. ஜாதகர்கள் நிதி மற்றும் உறவுகளில் நிலைத்தன்மையை அடைவதில் பொறுமையைக் கற்றுக்கொள்கிறார்கள்.

**மிருகசீரிஷத்தில் சனி (ரிஷபம் 23°20' - மிதுனம் 6°40') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

மிருகசீரிஷம் அறிவு மற்றும் ஆய்வுக்கான தேடலைக் கொண்டுவருகிறது. சனி திடீர் செயல்களைக் கட்டுப்படுத்துகிறது, இதனால் ஜாதகர்கள் அறிவுசார் நோக்கங்களில் ஒழுக்கமானவர்களாக மாறுகிறார்கள். பயணம் மற்றும் ஆர்வம் ஆரம்பத்தில் தடைபடலாம், ஆனால் விடாமுயற்சியுடன் வெகுமதி அளிக்கப்படுகிறது.



**திருவாதிரையில் சனி (மிதுனம் 6°40' - 20°00') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

ஆர்த்ரா புயல்களையும் மாற்றத்தையும் குறிக்கிறது. இங்கு சனி உணர்ச்சி எழுச்சிகளைக் கொண்டுவருகிறது, பற்றின்மை மற்றும் மீள்தன்மையைக் கற்பிக்கிறது. ஜாதகர் போராட்டங்களுக்குப் பிறகு வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்ப கற்றுக்கொள்கிறார் மற்றும் நெருக்கடிகளைக் கையாள்வதில் திறமையானவராகிறார்.

**புனர்பூசத்தில் சனி (மிதுனம் 20°00' - கடகம் 3°20') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

புனர்வசுவில், சனி இந்த நட்சத்திரத்தின் இயல்பான நம்பிக்கையை மெதுவாக்குகிறது, இதனால் ஜாதகர்கள் மீண்டும் மீண்டும் வெற்றி பெற கடினமாக உழைக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். முயற்சி மற்றும் விடாமுயற்சி நீடித்த சாதனைகளுக்கு வழிவகுக்கும் என்பதை அவர்கள் கற்றுக்கொள்கிறார்கள்.

**பூசத்தில் சனி (கடகம் 3°20' - 16°40') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

மிகவும் மங்களகரமான நட்சத்திரமான புஷ்ய, சனியின் ஒழுக்கமான இயல்புடன் நன்கு ஒத்துப்போகிறது. ஜாதகர் கட்டமைக்கப்பட்ட முயற்சிகள் மூலம் வெற்றியை அடைகிறார், சமூகத்தில் வழிகாட்டும் சக்தியாக மாறுகிறார்.

**ஆயில்யத்தில் சனி (கடகம் 16°40' - 30°00') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

அஷ்லேஷம் கையாளுதல் மற்றும் ரகசியத்துடன் தொடர்புடையது. சனியின் இருப்பு ஒரு எச்சரிக்கையான அணுகுமுறையை உருவாக்குகிறது, இது ஜாதகரை வஞ்சகத்திலிருந்து எச்சரிக்கையாக ஆக்குகிறது. அவர்கள் வலுவான மீள் தன்மையை வளர்த்துக் கொள்கிறார்கள், ஆனால் அதிகப்படியான சந்தேகத்தைத் தவிர்க்க வேண்டும்.

**மகத்தில் சனி (சிம்மம் 0° - 13°20') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

மகம் வம்சாவளி மற்றும் அதிகாரத்தைக் கையாள்கிறது. சனி அங்கீகாரத்தை தாமதப்படுத்துகிறது, ஆனால் காலப்போக்கில் மரியாதையை உறுதி செய்கிறது. தலைமைப் பாத்திரங்களை ஏற்றுக்கொள்வதற்கு முன்பு ஜாதகர் பணிவைக் கற்றுக்கொள்கிறார்.

**பூரத்தில் சனி (சிம்மம் 13°20' - 26°40') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

இங்கே, சனி இன்பங்களை மெதுவாக்குகிறது, ஜாதகரை இன்பம் மற்றும் உறவுகளில் ஒழுக்கத்தைக் கற்றுக்கொள்ள வைக்கிறது. அவர்கள் அன்பில் நல்லிணக்கத்தைக் கண்டறிவதில் தாமதங்களை எதிர்கொள்கிறார்கள், ஆனால் இறுதியில் ஆழமான, அர்த்தமுள்ள பிணைப்புகளை அடைகிறார்கள்.

**உத்தரத்தில் சனி (சிம்மம் 26°40' - கன்னி 10°00') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

இந்த நட்சத்திரத்தில் சனி கூட்டாண்மையில் பொறுப்பை வளர்க்கிறார். ஜாதகக்காரர் நீண்டகால உறுதிப்பாடுகள் மற்றும் கட்டமைக்கப்பட்ட வேலை சூழல்களில் சிறந்து விளங்குகிறார்.

**ஹஸ்தத்தில் சனி (கன்னி 10°00' - 23°20') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

ஹஸ்தாவின் படைப்பாற்றல் மற்றும் திறமை சனியின் ஒழுக்கத்தால் செம்மைப்படுத்தப்படுகிறது. ஜாதகக்காரர் கைவினைத்திறன், வணிகம் மற்றும் துல்லியமான வேலைகளில் திறமையானவராக மாறுகிறார்.

**சித்திரையில் சனி (கன்னி 23°20' - துலாம் 6°40') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

இங்கு சனி கடுமையான பயிற்சி மூலம் கலைத் திறன்களைச் செம்மைப்படுத்துகிறார். ஜாதகக்காரர்கள் உறவுகளில் போராட்டங்களை எதிர்கொள்ளலாம், ஆனால் பொறுமை மற்றும் முதிர்ச்சியை வளர்த்துக் கொள்ளலாம்.

**சுவாதியில் சனி (துலாம் 6°40' - 20°00') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

சுவாதி சுதந்திரத்தை நாடுகிறார். சனியின் செல்வாக்கு ஒழுக்கமான தன்னம்பிக்கையைக் கொண்டுவருகிறது, இருப்பினும் நிலைத்தன்மையை கண்டறிவதில் ஆரம்ப போராட்டங்கள் எழலாம்.

**விசாகத்தில் சனி (துலாம் 20°00' - விருச்சிகம் 3°20') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

விசாகத்தில் சனி உறுதியையும் லட்சியத்தையும் வளர்க்கிறது. ஜாதகர்கள் வெற்றிக்காகக் கடுமையாக உழைக்கிறார்கள் மற்றும் துன்பங்களை எதிர்கொள்ளும்போது விடாமுயற்சியை கற்றுக்கொள்கிறார்கள்.

**சனியின் நட்சத்திரமான அனுஷத்தில், சனி (விருச்சிகம் 3°20' - 16°40') [நான்கு பாதங்களும் அடக்கம் ]**

இந்த இடம் ஒழுக்கமான நெட்வொர்க்கிங் மற்றும் ராஜதந்திரத்தை ஆதரிக்கிறது. ஜாதகர்கள் உறவுகளில் பொறுமையையும் கட்டமைக்கப்பட்ட சமூக தொடர்புகளையும் கற்றுக்கொள்கிறார்கள்.

**கேட்டையில் சனி (விருச்சிகம் 16°40' - 30°00') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

ஜ்யேஷ்டாவின் அதிகாரபூர்வமான தன்மை சனியால் மென்மையாக்கப்படுகிறது, இது ஜாதகர்கள்களை ஒரு பொறுப்பான தலைவராக ஆக்குகிறது. அவர்கள் தனிமையுடன் போராடலாம், ஆனால் காலப்போக்கில் மரியாதை பெறலாம்.

**மூலத்தில் சனி (தனுசு 0° - 13°20') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

மூலம் அழிவு மற்றும் உண்மையைத் தேடுவதைக் குறிக்கிறது. சனி ஆழ்ந்த உள் வேலையைக் கட்டாயப்படுத்துகிறது, ஜாதகர்களை ஞானத்திற்கான மாற்றும் அனுபவங்களுக்கு உட்படுத்துகிறது.

**பூராடத்தில், சனி (தனுசு 13°20' - 26°40') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

இந்த நட்சத்திரத்தின் லட்சியவாதம் சனியின் யதார்த்தத்தால் அடித்தளமாக உள்ளது. குருட்டு நம்பிக்கையை விட முயற்சியின் முக்கியத்துவத்தை ஜாதகர் கற்றுக்கொள்கிறார்.

**உத்திராடத்தில், சனி (தனுசு 26°40' - மகரம் 10°00') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

இது ஒரு சக்திவாய்ந்த இடமாகும், ஏனெனில் சனி உத்தர ஆஷாடத்தின் வெற்றி இயல்புடன் நன்றாக இணைகிறது. ஜாதகர் விடாமுயற்சி மூலம் நீண்டகால வெற்றியை அடைகிறார்.

**திருவோணத்தில், சனி (மகரம் 10°00' - 23°20') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

சனி கற்றல் மற்றும் தகவல் தொடர்புகளில் ஒழுக்கத்தை மேம்படுத்துகிறது. ஜாதகர் அறிவு மற்றும் ஞானத்தைப் பெறுவதில் பொறுமையை வளர்த்துக் கொள்கிறார்.

**அவிட்டதில், சனி (மகரம் 23°20' - கும்பம் 6°40') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

தனிஷ்டத்தில் சனி கட்டமைக்கப்பட்ட படைப்பாற்றல் மற்றும் தலைமைத்துவத்தை ஆதரிக்கிறது. ஜாதகர் புகழில் தாமதங்களை எதிர்கொள்கிறார்., ஆனால் முயற்சியால் அங்கீகாரத்தை அடைகிறார்.

**சதயத்தில், சனி (கும்பம் 6°40' - 20°00') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

சதாபிஷகரின் கலகத்தனமான ஆற்றல் சனியால் கட்டுப்படுத்தப்படுகிறது, இதனால் ஜாதகரை சமூக சீர்திருத்தத்திற்காக விடாமுயற்சியுடன் செயல்பட வைக்கிறது.

**பூரட்டாதியில், சனி (கும்பம் 20°00' - மீனம் 3°20') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

இந்த நட்சத்திரத்தில் சனி ஆன்மீக ஒழுக்கத்தை வளர்க்கிறது. ஜாதகக்காரர் கஷ்டங்களைத் தாங்குகிறார், ஆனால் ஞானத்தையும் உள் வலிமையையும் பெறுகிறார்.

**உத்திரட்டாதியில், சனி (மீனம் 3°20' - 16°40') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

இந்த இடம் ஆன்மீக வளர்ச்சியில் பொறுமையை ஆதரிக்கிறது. ஜாதகக்காரர் காலப்போக்கில் நெகிழ்ச்சி தன்மையையும் ஆழமான உள் ஞானத்தையும் வளர்த்துக் கொள்கிறார்.

**ரேவதியில் சனி (மீனம் 16°40' - 30°00') [நான்கு பாதங்களும் அடக்கம்]**

ரேவதியின் இரக்க ஆற்றல் சனியால் கட்டமைக்கப்பட்டுள்ளது, ஜாதகரை மற்றவர்களின் நலனுக்காகப் பாடுபடும் ஒழுக்கமான மனிதாபிமானியாக ஆக்குகிறது.

முடிவு: ஒவ்வொரு நட்சத்திரத்திலும் சனியின் இடம் கர்ம பாடங்களைக் கற்பிக்கிறது மற்றும் பொறுமைக்கு வெகுமதி அளிக்கிறது. ஆரம்பத்தில் இது கஷ்டங்களைக் கொண்டு வந்தாலும், இறுதியில் அது ஆழ்ந்த ஞானத்திற்கும் நீண்டகால நிலைத்தன்மைக்கும் வழிவகுக்கிறது. வெவ்வேறு நட்சத்திரங்களில் சனியின் செல்வாக்கைப் புரிந்துகொள்வது தனிநபர்கள் தங்கள் வாழ்க்கைப் பாதைகளை விழிப்புணர்வு மற்றும் விடாமுயற்சியுடன் வழிநடத்த உதவும்.

## ஸ்ரீ ராமர் சீதாதேவி திருக்கல்யாணம் சிறப்பு வழிபாடு




**தர்மபுரி,மார்ச்29:**
தர்மபுரி மாவட்டம் பாலக்கோடு ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் திருக்கோவிலில் ஸ்ரீ ராம நவமியை முன்னிட்டு சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்கரித்து, ஹோமங்கள், வேத மந்திரங்கள் ஒலிக்க, மங்கள வாத்தியங்கள் இசைக்க, பாட்டுகள் பாடி, மாலைகள் மாற்றி ஸ்ரீராமர் சீதாதேவி திருக் கல்யாணமும் வெகு சிறப்பாக நடைபெற்றது.

பிரசாதம், நெய்வேத்தியங் களுடன், மகா தீபாராதனையும் நடைபெற்றது. அனைவருக்கும் உணவு, பிரசாதமும் வழங்கப்பட்டது. மாலை 6 மணிக்கு சுவாமி ஊர்வலமும் மகா தீபாராதனையும் நடைபெற்றது. ஊர்வலத்தில் குழந்தைகள் ராமர் சீதா வேடமணிந்து வந்திருந்தனர். உபயதாரர் : நானைய செட்டியார் குடும்பத்தினர், ஆர்ய வைஸ்யர்கள் அனைவரும் ஸ்ரீ ராமர், சீதாதேவி திருக்கல்யாணம் விழாவில் கலந்துகொண்டு வேண்டி அருள் பெற்றனர்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## பரத நாட்டிய அரங்கேற்றம்



**திருச்சி, மார்ச் 29:**
திருமதி .ஜெயஸ்ரீ திரு. கண்ணன் தம்பதியரின் மகள் குமாரி ஸ்ரீ வர்ஷாவின் பரதநாட்டிய அரங்கேற்றம் , பத்மஸ்ரீ கலைமாமணி சித்ரா விஸ்வேஸ்வரன் முன்னிலையில், திரு.பாரதிகிருஷ்ணகுமார் தலைமையில் தி.நகர் ஹபிபுல்லா சாலை ராமாராவ் கலா மண்டபத்தில் நேற்று (28.03.26) நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு தலைமை வகித்த திரு.பாரதி கிருஷ்ணகுமார் "கலை ஒரு தவம் , அது காணக் கிடைத்தது வரம்" என்றார்.

**ஸ்ரீகாந்த் திருச்சி**

## ஊஞ்சல் சேவை



மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் பங்குனி கோடை வசந்த உற்சவம் 2026-28.03.2026-6ம் நாள் மாலை ஊஞ்சல் சேவை.

மாது ஆடு பாகத்தன்; உத்தரகோசமங்கைத் தாது ஆடு கொன்றைச் சடையான்; அடியாருள் கோதாட்டி நாயேனை ஆட்கொண்டு, என் தொல் பிறவித் தீது ஓடாவண்ணம் திகழ, பிறப்பு அறுப்பான்; காது ஆடு குண்டலங்கள் பாடி, கசிந்து அன்பால், போது ஆடு பூண் முலையீர்! பொன் ஊசல் ஆடாமோ - திருப்பொன்னூசல்-08.16.06-திருவாசகம் சொக்கே நின் தாளே துணை

# ஸ்ரீ ராமநவமி சிறப்பு வழிபாடு






**கடலூர் , மார்ச்29:**
கடலூர் மாவட்டம் புவனகிரியின் கண் ஸ்ரீவைஷ்ணவ ஆர்ய வைஸ்ய பஜனை மடத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீபாண்டுரங்க சுவாமி சன்னதியில் விசுவாவசு வருடம் பங்குனி மாதம் 13ஆம் தேதி 27.3.2026 முதல் பங்குனி மாதம் 22 ஆம் தேதி 5.4.2026 முடிய உற்சவம் நடைபெறும்.

காலை 11 மணி அளவில் திருமஞ்சனம் மற்றும் சிறப்பு அபிஷேகங்கள், வண்ண மலர் மாலைகளால் அலங்கரித்து, தங்க ஆபரணங்களுடன், (1 -ஆம் நாள் ) மூலவர் தங்க கவச அலங்காரத்தில், (உற்சவர் சீதா லக்ஷ்மண சமேத ஸ்ரீ ராமர் சேவை) அலங்காரத்துடன், பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் மகா தீபாராதனையும் நடைபெற்றது.

ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும் பூஜையில் கலந்து கொண்டு சீதா ராமரை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் இரண்டு வேளையும் பிரசாதங்கள் வழங்கப்பட்டது . பூஜைகள் வெகு சிறப்பாக நடைபெற்றது. உபயம். புவனகிரி ஆர்ய வைஸ்ய ஸ்ரீ வைஷ்ணவர்கள். **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.**



தூத்துக்குடி விமான நிலையத்தில் இருந்து சென்னைக்கு நாளை (மார்ச் 29) ஞாயிற்றுக்கிழமை முதல் இரவு நேர விமான சேவை அதிகாரப்பூர்வமாகத் தொடங்கப்பட உள்ளது. இதனால் தென் மாவட்டப் பயணிகள் பெரும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். நாளை முதல் தூத்துக்குடியில் இருந்து புறப்படும் மற்றும் வந்து சேரும் விமானங்களின் நேரங்களில் சிறிய மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

## ஸ்ரீ வல்வில் ராமசுவாமி பிரம்மோற்சவம்




புல்லபுதங்குடி ஸ்ரீ வல்வில் ராமசுவாமி பிரம்மோற்சவம் நாள் 9 ரதோத்சவம்



வைரமுடி பிரம்மோத்ஸவ சிறப்பு அலங்காரம்

## மோகினி அலங்காரத்தில் பல்லாக்கு உற்சவம்..!



**வந்தவாசி, மார்ச் 29:**
திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஸ்ரீரங்கநாயகி தாயார் சமேத ஶ்ரீ ரங்கநாதர் பெருமாள் கோவிலில் நேற்று பங்குனி மாத பிரம்மோற்சவ விழாவின் ஐந்தாவது நாள் காலை பல்லாக்கு உற்சவம் நடைபெற்றது.

இந்த வைபவத்தில் உற்சவ மூர்த்தி மோகினி அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்தார். இந்த வைபவத்தில் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.

**பா. சீனிவாசன், வந்தவாசி.**

## தேமுதிக வேட்பாளர்களின் பட்டியல்



திமுக கூட்டணியில் உள்ள தேமுதிகவுக்கு 10 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இந்நிலையில், நேற்று (மார்ச் 28) அந்த தொகுதிகளில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களின் பட்டியல் வெளியாகியுள்ளது. அதன்படி, விருத்தாசலம் - பிரேமலதா விஜயகாந்த், தருமபுரி - இளங்கோவன், சேலம் மேற்கு - மோகன்ராஜ்,, விருதுநகர் - வி.விஜய பிரபாகர், ஓமலூர் - இளங்கோவன், மைலம் - எல்.வெங்கடேசன், பல்லாவரம்-முருகேசன், திருத்தணி - கிருஷ்ணமூர்த்தி, குடியாத்தம் - பிரதாப், போளூர்- சரவணன் ஆகியோர் போட்டியிடவுள்ளனர்.


## கூழமந்தல் அருள்மிகு ஸ்ரீ பேசும் பெருமாள் கோயிலில் மண்டல அபிஷேக நிறைவு விழா:



**செய்யாறு மார்ச் .29:**
செய்யாறு அடுத்த கூழமந்தல் அருள்மிகு ஸ்ரீபேசும் பெருமாள் கோயில் மகா கும்பாபிஷேகம் நடந்ததை முன்னிட்டு மண்டல பூஜைகள் நடைபெற்று வந்தது .

நேற்று 48 வது நாள் மண்டல அபிஷேக நிறைவு நாள் பூஜை வெகு விமர்சையாகநடைபெற்றது. அருள்மிகு ஸ்ரீ பேசும் பெருமாள் சிறப்பு அலங்காரத்தில் அருள் பாலித்தார். திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

## அதிமுகவில் இருந்து திமுகவில் இணைந்த 13 பேருக்கு வாய்ப்பு




தமிழ்நாடு தேர்தல் நெருங்கி வரும் நிலையில் திமுக நேற்று (மார்ச் 28) தனது வேட்பாளர்கள் பட்டியலை வெளியிட்டது. இதில், இதுவரை அதிமுகவில் இருந்து திமுகவில் இணைந்த 13 பேருக்கு வாய்ப்பு வழங்கப்பட்டு இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. அதன்படி ஆஸ்டின், மனோஜ் பாண்டியன், அனிதா ராதாகிருஷ்ணன், ராஜ கண்ணப்பன், கே.கே.எஸ்.எஸ். ஆர்.ஆர்.ராமச்சந்திரன், ஓ.பன்னீர்செல்வம், வைத்திலிங்கம், செந்தில் பாலாஜி, தோப்பு வெங்கடாசலம், முத்துசாமி, வேலு, வில்வநாதன், சேகர்பாபு உள்ளிட்டோருக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

## ஆழித் தேரோட்டம் விழா



திருவாரூர் மாவட்டம், தியாகராஜர் கோவில் சைவ சமயத்தின் தலைமையிடமாக திகழ்கிறது. பஞ்ச பூதங்களில் பூமிக்குரியதும், பிறந்தாலும் பெயர் சொன்னாலும் முக்தி அளிக்கிற தலமாகவும், சர்வதோஷ பரிகார தலமாகவும் விளங்குகிறது. இந்த சிறப்புமிக்க கோவிலில் ஆழித்தேர் என்பது மிகவும் பிரசித்தி பெற்றது. ஆசியாவிலேயே மிகப்பெரிய தேர் என்ற பெருமை மிக்கது. ஒவ்வொரு ஆண்டும் பங்குனி உத்திர திருவிழாவின் முக்கிய நிகழ்வாக ஆழித் தேரோட்டம் விழா நடைபெறுகிறது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் திரண்டு தேர் வடம் பிடித்து இழுப்பது வழக்கம்.

## மாற்றுத்திறனாளி களுக்கான மாதாந்திர ஒய்வூதியம் ரூ.2,500



மாற்றுத் திறனாளி களுக்கான மாதாந்திர ஓய்வூதியம் ரூ.2,500 ஆக உயர்த்தி வழங்கநடவடிக்கை எடுக்கப்படும் என அமமுக தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. அதிமுக கூட்டணியில் 11 தொகுதிகளில் அமமுக போட்டியிடும் நிலையில், நேற்று தேர்தல் வாக்குறுதிகளை வெளியிட்டுள்ளது. அதில், தமிழகத்தில் மத்திய அரசின் கேந்திரிய வித்யாலயா, பி.எம். ஸ்ரீ திட்ட பள்ளிகள் அதிக அளவில் தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

100 நாள் வேலைத் திட்டத்தை 150 நாட்களாகவும், ஊதியத்தை உயர்த்தவும் நடவடிக்கை எடுக்கப்படும் என கூறப்பட்டுள்ளது.

## 2026 பொது தேர்தல் வாக்கு சாவடி அலுவலர்களுக்கு முதற்கட்ட பயிற்சி



**திருவண்ணாமலை மார்ச் 29:**
சோ. கீழ்நாச்சிப்பட்டு பகுதியில் உள்ள காந்திநகர் மெட்ரிக் பள்ளியில் தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 நடைபெறவுள்ளதை முன்னிட்டு திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு க. தர்ப்பகராஜ் இ.ஆ. ப. அவர்கள் வாக்கு சாவடி அலுவலர்களுக்கு முதற்கட்ட பயிற்சி வகுப்பு நடைபெற்று வருவதை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## மதிமுக வேட்பாளர்கள்



திமுக கூட்டணியில் மதிமுகவுக்கு வரும் தேர்தலில் 4 தொகுதிகள் ஒதுக்கப்பட்டன. இந்நிலையில், தற்போது மதிமுக வேட்பாளர்கள் பட்டியல் வெளியாகியுள்ளது. அதன்படி மொடக்குறிச்சி - செந்தில் நாதன், மதுரை தெற்கு - பூமிநாதன், கடையநல்லூர் - ராஜேந்திரன், சீர்காழி - செந்தில் செல்வன் ஆகியோர் போட்டியிடவுள்ளனர். தமிழ்நாடு சட்டப்பேரவை தேர்தல் வருகிற ஏப்.23ஆம் தேதி நடைபெறவுள்ள நிலையில், திமுக நேற்று (மார்ச் 28) வேட்பாளர்கள் பட்டியலை வெளியிட்டது.

## 2026 பொது தேர்தல் கலை நிகழ்ச்சி, விழிப்புணர்வு பிரச்சாரம்



**திருவண்ணாமலை மார்ச் 29:**
திருவண்ணாமலை மாநகராட்சிகளில் உள்ள கலைஞர் நூற்றாண்டு பேருந்து நிலையத்தில் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 நடைபெறவுள்ளதை முன்னிட்டு வாக்காளர்களுக்கு தேர்தல் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் தேர்தல் பிரச்சார விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகளில் திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு. க. தர்ப்பகராஜ் இ. ஆ. ப. அவர்கள் தேர்தல் பிரச்சார விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு வாக்காளர் விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை வழங்கினார்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

**ர வுசு மணி**

**யாரிடமும் எதையும் எதிர்பார்க்காமல் வாழ்ந்து பார்...... உன் வாழ்க்கை உனக்கே அழகாக தெரியும்...**



**V. முத்து ராமகிருஷ்ணன்**

## புதியவர்களுக்கு வாய்ப்பு



தமிழக சட்டமன்ற தேர்தலையொட்டி திமுக சார்பில் 164 வேட்பாளர் அறிவிக்கப்பட்டுள்ளனர். இதில் 60-க்கும் மேற்பட்ட புதியவர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. 29 வழக்கறிஞர்கள், 17 பொறியாளர்கள், 15 மருத்துவர்கள், 7 முனைவர் பட்டதாரிகள் (PhD), 18 பெண்கள் இடம்பெற்றுள்ளதாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார். அதே போல் 11 கூட்டணி கட்சி வேட்பாளர்களும் திமுகவின் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடுகின்றனர்.

## "பார்டர் கார்டு" அதிரடிப் படை



வங்கதேசத்தில் எரி பொருள் பதுக்கலைத் தடுக்க 9 மாவட்டங்களில் உள்ள எரிபொருள் நிலையங்களில் "பார்டர் கார்டு" அதிரடிப் படை களமிறங்கியுள்ளது. எல்லை வழியாக எரிபொருள் கடத்தப்படுவதைத் தவிர்க்க, தரை மற்றும் நீர் வழி ரோந்துப் பணிகள் தீவிரமடைந்துள்ளன. லாரிகள் மற்றும் வாகனங்கள் தீவிர சோதனைக்குப் பிறகே அனுமதிக்கப்படுவதாக வங்கதேச உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

# சுற்றுலா: கோடை காலத்திலும் பனிப்பொழியும் 8 இடங்கள்!

கோடைகாலத்தில்கொளுத்தும் வெயில்தான் நாம் அறிந்தது. ஆனால் கோடையிலும் பனி பொழியும் இடங்கள் இந்தியாவில் இருக்கின்றன. அந்த வகையில் கோடையிலும் பனிப்பொழியும் 8 சிறந்த சுற்றுலா தலங்கள் குறித்து இப்பதிவில் காண்போம்.









### 1.யும்தாங் பள்ளத்தாக்கு:

இந்தியாவின் அழகிய இடங்களில் ஒன்றாகவும் சிக்கிமின் மலர் பள்ளத்தாக்கு என்று அழைக்கப்படும் சிக்கிமின் வடக்குப் பகுதியில் அமைந்துள்ள யும்தாங் பள்ளத்தாக்கு, கோடைக் காலங்களிலும் பனிப்பொழிவைப் பெறுகிறது. இதற்கு அருகில் லாச்சுங் பள்ளத்தாக்கு ,ஜீரோ பாயிண்ட் ஆகியவை உள்ளன.

### 2.பஹல்காம் :

இமயமலை மலைகள் மற்றும் உயரமான பைன் காடுகளுடன் மெல்லிய பனியால் மூடப்பட்டிருக்கும் , கடல் மட்டத்திலிருந்து 7200 அடி உயரத்தில் காஷ்மீரில் வசதியாக அமர்ந்திருக்கும் பஹல்காம், கோடைக்கு ஏற்ற குளுகுளு பனிப்பிரதேசமாக உள்ளது.

### 3.ட்ராஸ் பள்ளத்தாக்கு:

லடாக்கின் நுழைவாயில் என்று அழைக்கப்படும் ட்ராஸ் பள்ளத்தாக்கு10990 அடி உயரத்தில் அமைந்திருப்பதால் கோடையிலும் பனிப்பொழிவை காண முடியும் .

### 4.லே:

குளிர்காலத்தில் உறைந்தும் கோடை காலத்தில் பனிப்பொழிவை காணும் சிறந்த சுற்றுலா தலமாக இருக்கும் லே சில முக்கிய சாகச விளையாட்டு ஸ்பாட் ஆக இருக்கிறது.

### 5.குல்மார்க்:

ஜம்மு மற்றும் காஷ்மீர் இமயமலைச் சிகரங்களின் பின்னணியில் இருக்கும் குல்மார்க் குளிர்காலத்தில் மட்டுமல்ல, கோடை காலங்களிலும் இனிமையான பனிப்பொழிவுடன் கூடிய வானிலையைக் கொண்டுள்ளது .

### 6.முன்சியாரி:

உத்தரகாண்ட் பித்தோராகர் மாவட்டத்தில் 7200 அடி உயரத்தில் அமைந்துள்ள முன்சியாரி பனி படர்ந்த சிகரங்களால் சூழப்பட்டிருப்பதால், கோடைக்காலத்தில் கொளுத்தும் வெப்பத்தை மறந்து, சில்லென்று இருக்கலாம்.

### 7.ஜீலுக் :

கிழக்கு சிக்கிமில் உள்ள ஜீலுக் கிட்டத்தட்ட பத்தாயிரம் அடி உயரத்தில் அமைந்துள்ள இந்த அமைதியான இமயமலை கிராமம் கஞ்சன்ஜங்கா உட்பட லுங்துங், கலாபோக்ரி ஏரி, நாதாங் பள்ளத்தாக்கு ஆகியவற்றுடன் பனி படர்ந்து காணப்படுகிறது.

### 8.ரோஹ்தாங் கணவாய்:

உயரமான மலைப்பாதைகளில் ஒன்றான இமாச்சல பிரதேசத்தில் உள்ள ரோஹ்தாங் பிர் பஞ்சால் மலைத்தொடரில் 13050 அடி உயரத்தில் அமைந்துள்ளது. பாஸ்குலு பள்ளத்தாக்கு, லாஹவுல் மற்றும் ஸ்பிட்டி பள்ளத்தாக்குகளுடன் இணைக்கப்பட்டுள்ள இது மே முதல் நவம்பர் வரை பனிபடர்ந்து காணப்படுகிறது.

மேற்கூறிய 8 இடங்களும் கோடை காலத்திற்கு ஏற்ற பனிப்பொழியும் இடங்களாக இந்தியாவில் இருக்கின்றன.

## வேலைவாய்ப்பு கார்னர்

### அக்னிவீர் திட்டத்தின் கீழ் இந்திய ராணுவத்தில் வேலை: இளைஞர்கள் விண்ணப்பிக்கலாம்!




அக்னிவீர் திட்டத்தின் கீழ் இந்திய ராணுவத்தில் சேர்வதற்கு திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர்கள் விண்ணப்பிக்குமாறு ஆட்சியர் இரா.சுகுமார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அக்னிவீர் திட்டத்தின் கீழ் 2026-27-ஆம் ஆண்டுக்கு இந்திய இராணுவத்தில் சேர்வதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. அதற்கு விண்ணப்பிக்க வரும் ஏப்ரல் 1-ஆம் தேதி கடைசி நாளாகும். அக்னிவீர் திட்டத்தில் ராணுவம், விமானப்படை, கடற்படைகளில் சேர்வதற்கு இளைஞர்களை தயார்படுத்தும் வகையில் திருநெல்வேலி மாவட்ட நிர்வாகத்தின் சார்பில், மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டங்களிலும் வெற்றி நடை முகாம் நடைபெறுகிறது.

இதில், இளைஞர்கள் கலந்துகொண்டு பயனடையலாம். அக்னிவீர் திட்டத்தின் கீழ் இந்திய ராணுவத்தில் சேர 1.7.2005 முதல் 1.7.2009-க்குள் பிறந்திருக்க வேண்டும்). 8, 10, 12, ஐடிஐ, டிப்ளமோ, பட்டப்படிப்பு படித்தவராக இருக்க வேண்டும். உடல் தகுதி, தேர்வுக் கட்டணம் போன்ற விவரங்களை www.joinindianarmy.nic.in என்ற இணையதளத்தின் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

இதற்கான தேர்வு வரும் ஜூன் மாதம் நடைபெறவுள்ளது. எழுத்து தேர்வை தமிழிலும் எழுதலாம்.

மேலும், விவரங்களுக்கு 9952594351 என்ற கைப்பேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம். திருநெல்வேலி மாவட்ட நிர்வாகத்தால் அனைத்து வட்டங்களிலும் இத்தேர்வுக்கென நடத்தப்படும் கட்டணமில்லா பயிற்சியில் மாணவர்கள் சேர்ந்து பயன்பெறலாம்.

## மார்ச் மாதம் (2026) வார ராசிபலன்

### 29.03.2026 முதல் 04.04.2026 வரை

### மேஷம்

இந்த வாரம் சமூகத்தில் உயர்ந்தவர்கள் மத்தியில் புதியதொரு மரியாதையும் வரவேற்பும் உங்களுக்கு கிடைக்கப்பெறும. கணவன் மனைவி குடும்ப ஒற்றுமையில் சீரான நிலையே காணப்படும். ஆயுள் அபிவிருத்தி பெறுவதற்கான வகையில் சனியின் நற்செயல்கள் இருக்கும். தந்தை வழி சார்ந்த உறவினர்களால் உங்கள் முன்னேற்றத்தை கண்டு தங்களுக்கு தேவயான உதவிகளை உங்களிடம் கேட்டு பெற வருவார்கள்.

உத்தியோகஸ்தர்கள் அரசு தனியார் துறைகளில் உள்ளவர்களும் இது வரை இருந்த ஆடம்பர செலவினங்களை தவிர்த்து தங்களின் குடும்பத்தினர் மகிழ்க்கிக்காக சுபமங்களச் செலவுகளை செய்யும் வாய்ப்புகள் உருவாகும். தொழிலதிபர்கள் ஊழியர்களின் மிகுந்த ஒத்துழைப்பை பெற்று உற்பத்தியிலும் விற்பனையிலும் தகுந்த மேன்மை பெறுவார்கள். தொழில் மேன்மைக்காக நிறுவன இட விஸ்தரிப்பு, புதிய கிளை துவக்கம் போன்ற நற்பலன்களைப் பெறுபார்கள்..

### ரிஷபம்

இந்த வாரம் திருமணம் ஆனவர்களுக்கு புத்திரப்பேறு கிடைத்தாலும் வயது வந்த புத்திரர்கள் உள்ளவர்களுக்கு நல் உதவிகளும் கிடைக்கபெறும். கண்டகச் சனி நடப்பதால் புகைப்பிடித்தல் மது குடித்தல் போன்ற நச்சுத் தன்மை பொருந்தியவற்றை உபயோகப்படுத்துல் கூடாது. தம்பதிகள் இடையே ஒற்றுமை அதிகரிக்கும். ஆயுள் அபிவிருத்தி அடைவதற்கான வகையில் கிரகங்கள் கெயல்பட உள்ளதால் அதற்கேற்றவாறு பழக்கவழக்கங்களை அமைத்துக்கொள்ளுங்கள்.

உத்தியோகஸ்தர்கள் துறை சார்ந்த பணியாளர்களிடம் நீங்கள் காட்டி வந்த கடுமையான போக்கு மாறி உங்கள் செயலில் கனிவான தந்மை நிறந்த இருக்கும். இதனால் நற்பெயர் பெறுவதுடன் ஊழியர்களின் எதிர்பாராத உதவிகளும் உங்கள் மனதை மகிழ்ச்சி கொள்ளச் செய்யும். வியாபாரிகள் பொருட்களை குத்தகை முறையில் வியாபாரம் செய்பவர்கள் அதிக லாபம் பெறுவார்கள். தொழிலுக்கு புதிய சொத்துகள் வாங்கும் யோகம் உண்டாகும். .

### மிதுனம்

இந்த வாரம் முடங்கிக் கிடந்த திட்டங்கள் அனைத்தும் முழுமையான செயல்பட்டுக்கு வந்து விடும். உங்கள் செயல்பாட்டின் ஒவ்வொரு வெற்றிக்கும் உறவினர்கள், நண்பர்களின் உதவிக்கரம் முழு காரணமாக இருக்கும். கணவன் மனைவி குடும்ப ஒற்றுமையில் அனுகூல பயன்கள் உண்டாகும். தந்தை வழி உறவினர்கள் உங்கள் வளர்ச்சி உண்டு சிறிது பொறாமைப்படுவார்கள்.

உத்தியோகஸ்தர்கள் அரசு மற்றும் தனியார் துறைகளில் பணிபுரிபவர்களின் செயலில் இருந்த மந்த நிலைகள் நீங்கி சுறுசுறுப்பான செயல்பாடுகள் உருவாகும். நிர்வாகத் திறமையை வளர்த்துக்கொள்ள தேவையான பயிற்சி படிப்புகளை மேற்கொள்ளும் வாய்ப்பு உருவாகும். தொழிலதிபர்கள் புதிய ஆர்டர்கள் கிடைக்கப்பெற்று தங்கள் தொழிலில் வளம் காண்பார்கள்..

பெண்கள் நிறைவான வகையில் சத்தான பாக்கியம் அடையலாம். அழகு சார்ந்த பொருட்களை உருவாக்கும் பெண்கள் நிறை வேலை வாய்ப்புகள் பெற்று மன மகிழ்ச்சி அடைவார்கள்.

### கடகம்

இந்த வாரம் குடும்பத்தில் ஒற்றுமை கூடும். அரசாங்க அதிகாரிகளின் அனுகூலமான செயல்கள் உங்களுக்கு தேவையான சமயத்தில் கிடைக்கும். பூமி தொடர்பான விற்பனை தொழில் வாய்ப்புகளைப் பெற்றவர்கள் சுமாரான அளவில் லாபம் பெறுவார்கள். உத்தியோகஸ்தர்கள் அரசுத் துறைகளில் அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் சிலரது குறுக்கீடுகளின் காரணமாக சோர்வு மனப்பான்மைக்கு ஆளாவார்கள்.

பின்னர் வரும் காலங்களில் தகுந்த ஆலோசனைகள் கிடைக்கப்பெற்று தங்கள் பணியில் சிறந்து விளங்குவார்கள். தொழில்திபர்கள் தங்கள் நிறுவனத்தின் புகழை பரப்ப புதிய விளம்பர வியாபாரம் தொடர்பான வாகனங்கள் வைத்திருப்பாவர்கள், வாகன பராமதிப்புக்காக செலவு செய்ய வேண்டியது இருக்கும். பெண்கள் பணிச் சுமைகள் காரணமான மனக் குழப்பமும் துக்கமின்மையும் உண்டாகி பின்னர் சரியாகும்.

புத்திர பாக்கிய அமைப்பு அனுகூல நிலையில் உள்ளது. மாணவமணிகள் சிறப்பான பலனைக் காணலாம். நல்ல மதிப்பெண்கள் கிடைக்கும். .

### சிம்மம்

இந்த வாரம் நல்லவர்களிள் உதவி உங்கள் மனதை மகிழ்விக்கும். நீங்கள் பேசும் ஒவ்வொரு பேச்சும் மற்றவர்களால் வேதவாக்காக ஏற்றுக்கொள்பப்படும். ஆன்மீக உணர்வுடன் செய்த நற்செயல்கள் தகுந்த பலனைத் தரும். வீடு மனை வாகன வகைகள் புதியவை வாங்கவும் இருப்பவற்றை சீர்திருத்தம் செய்யவும் நல்வாய்ப்புகள் வந்து சேரும். உத்தியோகஸ்தர்கள் தங்கள் பணியின் பொருட்டு பல்வேறு இடங்களுக்கு சென்று வர நேரலாம்.

மனதில் புதிய உற்சாகமும் பொருளாதார வரவுகள் எதிர்கால வாழ்க்கையை உயர்த்தும் வகையில் பலன்கள் நடக்கும். உங்கள் உத்தரவுக்கு கட்டுப்பட தயக்கம் காட்டிய ஊழியர்கள் கூட உங்கள் சொல்லை மதித்து நடக்கும் நிலைகள் உண்டாகும்.

வியாபாரிகளுக்கு லாபம் கிடைக்கும். லாப விகிதங்களை கணக்கில் கொண்டு புதிய மூலதன்தை தொழிலில் போடுவார்கள். சொகுசான ஆடம்பர பொருட்கள் விற்பனை செய்பவர்கள் தங்கள் தொழில் நல்ல முன்னேற்றம் அடைந்து மேன்மை பெறுவார்கள்.

பெண்கள் நிர்வாகத்திடமிருந்து தேவையான கலுகைகளைப் பெறுவார்கள். சேமிப்பு செய்து பணத்தை குடும்பத்தின் சுப செலவுகளுக்காக பயன்படுத்துவார்கள்.

### கன்னி

இந்த வாரம் கடந்த காலங்களில் இருந்த வீண் செலவுகள் குறைந்து சுப காரிய செலவுகள் நிகழும். தைரியமான செயல்களைச் செய்து தகுந்த புகழை அடைவீர்கள். உத்திகோகஸ்தர்களுக்கு அரசு மற்றும் தனியார் துறைகளில் உள்ளவர்களு பல்வேறு விரயமான செலவுகள் வரலாம். அனைவரையும் அரவணைத்து வேலை வாங்கும் புதிய சிந்தனைகள் உருவாகும். புதிய செயல்திறன் பெற்று நிர்வாகத்திடமும் ஊழியர்களிடமும் நற்பெயர் பெறுவார்கள். வியாபாரிகள் எந்த வியாபாரம் செய்பவராக இருந்தாலும் அவர்கள் நல்ல முன்னேற்றம் காண்பார்கள். அறச்செயல்கள் செய்வதில் மனம் ஈடுபாடு கொள்ளும். நற்பெயரும் நற்புகழும் பெறுவீர்கள். வீடு, மனை வாகன யோகங்கள் சுமாரான பலனைத் தரும். கடன் மற்றும் எதிரிகள் விஷயத்தில் கவனம் தேவை. புதிய தொழில் முயற்சிகள் வெற்றிபெறும். பெண்கள் கடந்த காலங்களில் ஏற்பட்ட விரையமான செலவுகளைப் பற்றி மனதில் எதுவும் எண்ணாமல் நற்பலன்கள் முழுதும் பெற ஆயத்தமாகுங்கள். அரசு மற்றும் தனியார் துறைகளில் பணியாற்றும் பெண்கள் புதிய உத்வேத்துடன் செயல்பட்டு மன நிறைவு பெறுவார்கள்..

### துலாம்

இந்த வாரம் குடும்பத்தில் நல்ல முன்னேற்றம் உண்டு. நீங்கள் பேசும் வார்த்தைகள் மற்றவர்களுக்கு அக்னியைப் போல சுடலாம். ஆனால் வார்த்தைகள் வழிகாட்டும் ஒளி நிறைந்திருக்கும. நல்ல செய்கைகளினால் மட்டுமே புகழை தக்க வைக்க முடியும். உத்தியோகஸ்தர்கள் அரசு ஊழியர்கள் பொதுமக்களின் கண்டனத்திற்கு ஆளாகும் நிலைகள் உருவாகும். தனியார் ஊழியர்கள் தெய்வ பலத்தை நம்புங்கள். பொருளாதாரம் சரளமாக கிடைக்கும்.

இருக்கும் புகழை தக்க வைக்க நேரம் சரியாக இருக்கும். வியாபாரிகள் தங்கள் தொழிலில் மிகுந்த ஆர்வமுடன் செயல்பட்டு தகுந்த பொருளாதாரம் பெறுவார்கள். தொழிலில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். கடந்த காலங்களில் ஆதாயமாய் கிடைத்த பொருளாதாரம் சுபமங்களச் செலவுகளை உருவாக்கித் தரும். பெண்கள் அரசு மற்றும் தனியார் துறைகளில் பணிபுரியும் பெண்கள் தங்கள் கை சேமிப்பை குடும்பச் சுபசெலவுகளுக்காக பயன்படுத்தும் புதிய வாய்ப்புகள் ஏற்படும். தெய்வ காரியங்களில் பங்கெடுக்கும் மார்க்கங்கள் நிரம்பவே உண்டு.

### விருச்சிகம்

இந்த வாரம் நீங்கள் செய்கிற எல்லா செயல்களும் ஒன்றுக்கு பத்தாக லாபத்தை தரும். சாதனைகள் பல நிகழ்த்தி புகழ் பெறும் யோகம் உண்டாகும். வாழ்க்கைத் துணை வகையில் தகுந்த ஒத்துழைப்பும் கிடைக்கும். பொருளாதார நிலை உயர்வு தருவதாக அமையும். வீடு மனை வாகனம் தொடர்பான இனங்களில் அனுகூலமான நிகழ்வுகள் நடக்கும். திருமணவானவர்களுக்கு புத்திர பாக்கிய அனுகூலம் உண்டு. கடன் வழக்கு எதிரி ஆகிய வகைகளில் இருந்து வந்த எதிர்ப்புகள் சமரச பேச்சுகளால் சுமூக நிலைக்கு வரும். கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து ஆலோசனைகள் வழங்கி குடும்பத்தை நல்ல முன்னேற்றமான நிலைக்கு கொண்டு வருவர். தந்தை வழி உறவினர்கள் அளவான முறையில் உறவு வைத்துக் கொள்வார்கள். செய்தொழிலில் முன்னேற்றமும் ஆதாயமும் கண்கூடாக கிடைக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு கடந்த காலங்களில் இருந்த செயல் நிலைகள் மாறி மனதிற்கு மகிழ்ச்சி தரும் வகையிலான பணி வாய்ப்புகளைப் பெறுவார்கள். அரசு சுற்றுலா துறையில் பணிபுரியும் அதிகாரிகளும் தனியார் சுற்றுலா நிறுவன அதிகாரிகளும் பயனிகளுக்கு தேவையான வசதிகளை செய்துபொடுத்து பொருளாதார நிலை உயரப்பெறுவர்.

### தனுசு

இந்த வாரம் பொருளாதார மேன்மையும் புகழும் நிறைவாக கிடைக்கும். புத்திரர்கள் தவறான பழக்க வழக்கம் உள்ள நபர்களுடன் சேர்த்து சிரமப்படும் வாய்ப்புகள் உள்ளதால் விழிப்புடன் செயல்படுவது நன்மை தரும். கணவன் மனைவி குடும்ப ஒற்றுமையில் சிலரது குறுக்கீடுகளில் மனக் கசப்புகள் தோன்றி பின்னர் படிப்படியாக நிலைமை சீராகும். உத்தியோகஸ்தர்கள் வருமான வரித்துறை, சுங்க இலாகா தணிக்கை துறை ஆகியவற்றில் உயர் பதவி வகிப்பவர்களுக்கு தன் துறை சார்ந்த ஊழியர்கள் ஒத்துழைப்பு குறைவினால் இடம் மாற்றம் அல்லது துறை சார்ந்த அதிகாரிகளின் நெருக்குதல்கள் ஆகியவற்றுக்கு ஆளாகி புதிய அனுபவ பாடங்களைப் பெறுவார்கள். தொழிலதிபர்கள் தங்கள் தொழிலில் சிறிது சுணக்கமான நிலை அடைவார்கள். வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வார்கள். புதிய ஒப்பந்தங்களைப் பெற்று முன்னேறுவர். பொருளாதார வரவுகள் சமச்சீராக இருக்கும். நற்செயலுக்கு ஏற்ப புகழ் கிடைக்கும். பெண்கள் முன்னேற்றம் காண்பர்.

### மகரம்

இந்த வாரம் நன்மைகள் கிடைக்கக் கூடிய காலகட்டமாகும். எடுத்த காரியம் கைகூடும். பணப் புழக்கம் அதிகரிக்கும். தேவைகள் பூர்த்தியாகும். மதிப்பும் மரியாதையும் சிறப்பாக இருக்கும். தாயின் உடல் நலத்தில் தகுந்த அக்கறை காட்ட வேண்டும். வழக்கு தொடர்பான விவகாரங்களில் உங்கள் மனம் விரும்பும் படியான வெற்றிகள் கிடைக்கும். மனைவி வகை உறவினர்கள் உங்கள் உதவிகளை நாடி வரவும் மார்க்கம் உண்டு. கணவன் மனைவி மற்றும் குடும்ப ஒற்றுமையில் இணக்கமான சூழ்நிலை உண்டு. தந்தையின் ஆதரவுடன் புதய தொழில்கள் துவங்கி செயல்படுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வு, சம்பள உயர்வு கிடைக்கும். பிற இடங்களுக்கு மாற்றலும் கிடைக்கும். உங்கள் மேல் இருக்கும் நம்பிக்கையும் உயரும். உங்களது கோரிக்கைகள் ஒவ்வொன்றாக நிறைவேறும். வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு முயற்சிகள் எடுத்தபின் நல்ல வேலை கிடைக்கும். வேலையினால் ஏற்பட்ட சோர்வும், மன அழுத்தமும் இனி இருக்காது. தொழிலதிபர்கள் கடந்த காலங்களில் மனதில் இருந்த சஞ்சலங்கள் மாறி நம்பிக்கை ஒளி பிறக்கும். புதிய சந்தை பாய்ப்புகளைப் பெற்று சிறந்த முன்னேற்றம் காண்பர்.

### கும்பம்

இந்த வாரம் வீடு மனை வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும். பூர்வ புண்ணிய சொத்துக்களால் வருமானம் கிடைக்கும். எதிரிகளால் இருந்த தொந்தரவுகளை சமாளிக்க கடந்த காலங்களில் பணம் விரையமானது. அந்நிலை அடியோடு அழிந்து விட்டது. மேலும் நோய்களுக்கான சிகிச்சைக்கோ வீணான செயல்களுக்கோ கிரகநிலை இடம் தராது. கணவன் மனைவி மற்றும் குடும்ப ஒற்றுமை மேலோங்கும். உங்களின் தேவைகளுக்கு வாழ்க்கைத் துணையின் உதவி நிச்சயம் உண்டு. உத்தியோகஸ்தர்கள் அலுவலகத்தில் சுமுகமான சூழ்நிலையைக் காண்பீர்கள்.

உங்களின் வேலைகளை தன்னம்பிக்கையுடன் செய்து முடிப்பீர்கள். பணப் புழக்கம் அதிகமாகும். உங்கள் வேலைகளுக்கு உரிய அங்கீகாரத்தை மேலதிகாரிகள் வழங்குவார்கள். சக ஊழியர்கள் சற்று தள்ளியே இருப்பார்கள். தொழிலதிபர்கள் அடுக்குமாடி கட்டடங்களை கட்டி விற்பனை செய்யும் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களும் ஆதாயம் பெற்று முன்னேற்றம் அடைவார்கள் பணப் புழக்கம் தங்கு தடையின்றி இருக்கும். நிறுவனத்தின் புகழ் எட்டுத்திக்கும் பரவும். வியாபாரிகளுக்கு கொடுக்கல், வாங்கல் விஷயங்கள் சுமுகமாக முடியும்.

### மீனம்

இந்த வாரம் சொல்லால் மகத்துவமும் செயலால் புகழ் கீர்த்தி ஆகியனவும் ஏற்படும். சேமித்து வைக்க நல்வழிகள் உண்டாகும். வெளியூர் பிரயாணங்கள் மற்றும் வெளிநாட்டு பிரயாணங்கள் சென்று வரும் வகையினர் தகுந்த பாதுகாப்பு முறைகளை பின்பற்ற வேண்டும். உத்தியோகஸ்தர்களுக்கு, பெற்றோரின் மூலமாக வேலை கிடைக்கும். உங்களுடன் வேலை செய்பவர்களிடம் அனுசரனையாக செல்லவும். வீணான பிரச்சனைகளும் மனக் குழப்பங்களும் வேண்டாம்.

பதவி உயர்வு, பணி இட மாற்றம், சம்பள உயர்வு ஆகியவை களைக் கிடைக்கப் பெறுவீர்கள். மேலதிகாரிகளிடம் அனுசரனையுடன் நடந்து கொள்ளவும். வியாபாரிகளுக்கு செய்து வரும் தொழிலில் சிறப்பான பலன்களைக் காணலாம். கடந்த காலத்தை விட கூடுதல் லாபம் கிடைத்தா லும் தொழிலை விரிவுபடுத்து வற்குண்டான வேலைகளை இப்போது ஆரம்பிக்கலாம். தொழில் நிமித்தமாக சிலர் தூர தேச பயணம் மேற்கொள்ள வேண்டி வரலாம். பெண்கள் உடல்நலனில் மிகுந்த அக்கறை செலுத்த வேண்டும். கணவரை விட்டுப் பிரிந்தவர்கள் கணவருடன் மீண்டும் சேர்வார்கள். உங்களின் கணவருக்கு உங்களால் அனுகூலம் உண்டாகும்..

# அரசுத் தேர்வுக்குத் தயாராகும் தமிழ்வழி மாணவர்களுக்கு உதவித் தொகை எனக்கூறி நூதன மோசடி: எச்சரிக்கை




**வேலூர், மார்ச் 29:**
வேலூர் சைபர் குற்றப்பிரிவு காவல் ஆய்வாளர் சிவசங்கா கூறுகையில், வேலூர் மாவட்டத்தில் நீட் மருத்துவ நுழைவுத் தேர்வு உள்ளிட்ட அரசுத் தேர்வுகளுக்கு தயாராகி வரும் மாணவர்களைக் குறிவைத்து மோசடி சம்பவங்கள் நடைபெற்று வருகிறது. அதன்படி, மாணவர்களின் முழு விவரங்களையும் முன்கூட்டியே சேகரிக்கும் அடையாளம் தெரியாத கும்பல், நேரடியாக அவர்களின் கைப்பேசி எண்ணை தொடர்பு கொள்கின்றனர். உடனடியாக மாணவர்களின் முகவரி, அவர்கள் படித்த கல்வி நிறுவனங்களின் பெயர்களைத் துல்லியமாகக் கூறி அவர்களின் நம்பிக்கையை பெறுகின்றனர்.

பின்னர், தமிழ் வழியில் படித்ததால் உங்களுக்கு அரசின் கல்வி உதவித்தொகை வந்துள்ளது. உங்களது வாட்ஸ்ஆப் எண்ணுக்கு ஒரு கியூ.ஆர் கோடு அனுப்புகிறோம். அதனை ஸ்கேன் செய்து ஓகே என தெரிவித்தால் பணம் உடனடியாக உங்கள் கணக்கில் வரவு வைக்கப்படும் என கூறுகின்றனர். இதை நம்பி ஸ்கேன் செய்யும் மாணவர்களின் வங்கிக் கணக்கில் இருந்து உடனடியாக ரூ. 5,000 முதல் ரூ. 25,000 வரை அந்த கும்பல் திருடுகின்றனர். ஒருவேளை மாணவர்களின் வங்கிக் கணக்கில் பணம் இல்லை என்றால், உங்கள் கணக்கில் குறைந்தபட்சம் ரூ. 5,000 இருந்தால்தான் உதவித்தொகை உள்ளே வரும் எனக்கூறி, பணத்தை வங்கிக் கணக்கில் செலுத்த வைத்தும் ஏமாற்றி மோசடி செய்கின்றனர்.

எனவே, இணையதளங்கள் மூலமாகவோ அல்லது கைப்பேசி வழியாகவே கல்வி உதவித்தொகை தருவதாகக் கூறினால், பொதுமக்கள், மாணவர்கள் யாரும் அதை நம்ப வேண்டாம். அரசு வழங்கும் கல்வி உதவித்தொகை மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மாவட்டக் கல்வி அலுவலகம் அல்லது தாங்கள் பயின்ற கல்வி நிறுவனங்கள் வழியாக மட்டுமே முறையாக வழங்கப்படும்.

கைப்பேசியில் அழைத்து யாரும் உதவித்தொகை வழங்குவதில்லை. அப்படி வரும் அழைப்புகளைப் பொதுமக்கள் முற்றிலும் தவிர்க்க வேண்டும்.

இதுபோன்று யாரேனும் சைபர் மோசடியில் பாதிக்கப்பட்டால், உடனடியாக 1930 என்ற இலவச உதவி எண்ணை தொடர்புகொண்டோ அல்லது வேலூர் சைபர் குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் நேரிலும் புகார் அளிக்கலாம் என்றார்.

## விளையாட்டு செய்திகள்

### நடப்பு சீசனில் முதல் 2 வாரங்களை தவறவிடும் தோனி: சிஎஸ்கே அறிவிப்பு

**சென்னை, மார்ச் 29:**
நடப்பு ஐபிஎல் சீசனில் முதல் இரண்டு வார காலத்தில் நடைபெறும் ஆட்டத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் முன்னாள் கேப்டன் தோனி தவறவிடக் கூடும் என அந்த அணியின் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

காலின் பின் பகுதியில் ஏற்பட்ட தசைபிடிப்பு பாதிப்பு காரணமாக தோனிக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளதாக சிஎஸ்கே நிர்வாகம் தெரிவித்துள்ளது. இதனால் நடப்பு ஐபிஎல்சீசனில் அவர் முதல் இரண்டுவார கால ஆட்டங்களை தவறவிடக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

44 வயதான தோனி, ஐபிஎல் கிரிக்கெட்டில் 242 இன்னிங்ஸில் 5,439 ரன்கள் எடுத்துள்ளார். சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்காக 248 போட்டிகளில் விளையாடி 4,865 ரன்கள் எடுத்துள்ளார். சிஎஸ்கே அணியின் கேப்டனாக ஐந்து முறை அந்த அணிக்கு சாம்பியன் பட்டம் வென்று கொடுத்துள்ளார். ஐபிஎல் கிரிக்கெட்டில் சிறந்த கேப்டன்களில் ஒருவராக அறியப்படுகிறார்.

கடந்த ஐபிஎல் சீசனில் 13 இன்னிங்ஸில் 196 ரன்கள் எடுத்திருந்தார் தோனி. அவரது ஸ்ட்ரைக் ரேட் 135.17 என இருந்தது. 12 சிக்ஸர்கள் மற்றும் 12 பவுண்டரிகளை அவர் விளாசி இருந்தார். இறுதி ஓவர்களில் அவரது ஸ்ட்ரைக் ரேட் 151.72 என அமைந்தது.

### ஐபிஎல் 2026: மீண்டும் முனைப்பில் சிஎஸ்கே, மும்பை

மும்பை இந்தியன்ஸ், சென்னை சூப்பர் கிங்ஸ், கொல்கத்தா நைட் ரைடர்ஸ் ஆகிய மூன்று அணிகளும் இணைந்து மொத்தம் 13 ஐபிஎல் பட்டங்களை வென்றுள்ளன. இருப்பினும், கடந்த சீசன் இந்த அணிகளுக்கு கடும் போராட்டமாகவே அமைந்தது.

கடந்த முறை பிளே-ஆஃப் சுற்று வரை மும்பை அணி சென்றாலும், அவர்களின் முழுத் திறனும் வெளிப்படவில்லை. 5 முறை சாம்பியன் என்ற அடிப்படையில் இம்முறை மும்பை அணி கம்பீரமான ஆட்டத்தை வெளிப்படுத்துவதில் முனைப்பு காட்டக்கூடும்.

கடந்த சீசனில் 10-வது இடத்தைப் பிடித்த சிஎஸ்கே, இந்த முறை அணியைப் பெரிதும் மாற்றியமைத்துள்ளது. ராஜஸ்தான் ராயல்ஸ் அணியிலிருந்து சஞ்சு சாம்சன் சிஎஸ்கே-வுக்கு வந்துள்ளார். மேலும், மேட் ஹென்றி, நூர் அகமது ஆகியோரும் அணியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தனது ஓய்வு குறித்த சஸ்பென்ஸைத் தொடர்ந்து நீட்டித்து வரும் எம்.எஸ்.தோனி இம்முறை சிறப்பான விடைபெறுதலை நிகழ்த்துவார் என ரசிகர்கள் எதிர்பார்க்கின்றனர். கடந்த முறை 8-வது இடம் பிடித்த கொல்கத்தா அணி தனது பேட்டிங் வரிசையை வலுப்படுத்தியுள்ளது. டிம் ஷெய்பர்ட், ஃபின் ஆலன், ரச்சின் ரவீந்திரா, ஐபிஎல் வரலாற்றிலேயே அதிக விலைக்கு வாங்கப்பட்ட கேமரூன் கிரீன் ஆகியோர் அணியில் இணைந்துள்ளனர்.

ராஜஸ்தான் ராயல்ஸ், குஜராத் டைட்டன்ஸ் ஆகிய அணிகள் 2-வது முறையாக கோப்பையை வெல்லப்போராடும். டெல்லி கேபிடல்ஸ், பஞ்சாப் கிங்ஸ், லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ் ஆகிய அணிகள் தங்களது முதல் பட்டத்தை வெல்வதற்கான வேட்டையைத் தொடங்கக்கூடும்.

# மாற்றுத் திறனாளிகள் மீதான தாக்குதல் மிகத் தீவிரமானது: காவல் துறையின் நடவடிக்கைக்கு ஐகோர்ட் கண்டனம்

**சென்னை, மார்ச் 29:**
மாற்றுத் திறனாளிகள் மீதான தாக்குதல் மிகத் தீவிரமானது என காவல் துறைக்கு கண்டனம் தெரிவித்துள்ள சென்னை உயர் நீதிமன்றம், இது தொடர்பாக எழும்பூர் காவல் உதவி ஆணையர் பதிலளிக்க உத்தரவிட்டுள்ளது.

தமிழ்நாடு அனைத்து வகை மாற்றுத் திறனாளிகள் பாதுகாப்பு மற்றும் உரிமைகளுக்கான சங்கத்தின் மாநில பொதுச்செயலாளரான பா.ஜான்சிராணி சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனுவில், “தமிழகம் முழுவதுமிருந்து சுமார் 1,800 மாற்றுத் திறனாளிகள் கடந்த பிப்.17 அன்று சென்னை சேப்பாக்கம் சிவானந்தா சாலையில் அமைதியாக கூடி பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஜனநாயக முறையில் போராட்டத்தில் ஈடுபட்டோம்.

அப்போது அங்கு வந்த எழும்பூர் காவல் உதவி ஆணையர் ஜெகதீசன், காவல் ஆய்வாளர் பிரகாஷ் ஆகியோர் போராட்டத்தில் ஈடுபட்ட மாற்றுத் திறனாளிகளிடம் ராஜரத்தினம் ஸ்டேடியம் பகுதிக்குச் சென்று போராட அறிவுறுத்தினர்.

அதன்படி அங்கு சென்று அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டோம்.

பின்னர் இரவு 8 மணியளவில் திருமங்கலத்தில் உள்ள திருமண மாளிகையில் தங்கவைப்பதாகக் கூறி 20-க்கும் மேற்பட்ட பேருந்துகளில் ஏற்றிச்சென்று அடிப்படை வசதிகள் இல்லாத பல்வேறு இடங்களில் அடைத்து வைத்து சித்ரவதை செய்தனர்.

கால்களை இழந்த மாற்றுத் திறனாளியான என்னை போலீஸார் பேருந்தில் தூக்கிப்போட்டு கைகளை முறுக்கினர். மயக்கமுற்ற என்னை மருத்துவமனையில் கூட சேர்க்கவில்லை.

பின்னர் அங்கிருந்தவர்களின் உதவியுடன் ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனை அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றேன். மாற்றுத் திறனாளிகளுக்கு எதிராக கடுமையாக நடந்து கொண்ட காவல் துறை அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்க உத்தரவிட வேண்டும்.

பாதிக்கப்பட்ட எங்களுக்கு ரூ.25 லட்சம் இழப்பீடு வழங்க உத்தரவிட வேண்டும். எழும்பூர் காவல் உதவி ஆணையர் ஜெகதீசன் மற்றும் காவல் ஆய்வாளர் பிரகாஷ் ஆகியோரை இடைநீக்கம் செய்ய உத்தரவிட வேண்டும்” எனக் கோரியிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதி எம். நிர்மல்குமார் முன்பாக விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதி, போராட்டத்தில் ஈடுபட்ட மாற்றுத் திறனாளிகள் மீது காவல் துறை தாக்குதல் நடத்தியதாக கூறப்படும் குற்றச்சாட்டு மிகத் தீவிரமானது எனக் கண்டனம் தெரிவித்தார்.

பின்னர் இது தொடர்பாக எழும்பூர் காவல் உதவி ஆணையர் பதிலளிக்க உத்தரவிட்டு விசாரணையை ஏப்.21-க்கு தள்ளிவைத்துள்ளார்.

# ஸ்ரீவில்லி.யில் உரிய ஆவணங்கள் இல்லாமல் கொண்டு செல்லப்பட்ட 500 குக்கர்கள் பறிமுதல்

**ஸ்ரீவில்லிபுத்தூர், மார்ச் 29:**
ஸ்ரீ வில்லிபுத்தூர் அருகே தேர்தல் பறக்கும் படையினரின் வாகன தணிக்கையில், சரக்கு வாகனத்தில் உரிய ஆவணங்கள் இல்லாமல் கொண்டு வரப்பட்ட ரூ.9 லட்சம் மதிப்பிலான 500 குக்கர் பெட்டிகளை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

ஸ்ரீவில்லிபுத்தூர் - சிவகாசி சாலையில் மல்லி பஜார் பகுதியில் மண்டல துணை வட்டாட்சியர் பாண்டீஸ்வரி தலைமையிலான தேர்தல் பறக்கும் படையினர் வாகன தணிக்கையில் ஈடுபட்டனர். அப்போது சிவகாசியில் இருந்து ஸ்ரீவில்லிபுத்தூர் நோக்கி வந்த சரக்கு வாகனத்தை நிறுத்தி சோதனை செய்தனர்.

அதில் ரூ.1,875 விற்பனை விலை குறிப்பிடப்பட்ட 3 லிட்டர் கொள்ளளவு கொண்ட 500 குக்கர் பெட்டிகள் இருந்தது கண்டறியப்பட்டது.

இது குறித்து சரக்கு வாகனத்தை ஓட்டி வந்த ராஜபாளையம் அருகே முகவூர் முத்துச்சாமிபுரம் பகுதியை சேர்ந்த கருப்பசாமி(25) என்பவரிடம் விசாரித்த போது, உரிய ஆவணங்கள் இல்லாதது தெரியவந்தது.

இதையடுத்து ரூ.9,37,500 மதிப்புள்ள 500 குக்கர் பெட்டிகளை பறிமுதல் செய்த அதிகாரிகள், அவற்றை ஸ்ரீவில்லிபுத்தூர் சார்நிலை கருவூலத்தில் ஒப்படைத்தனர்.

# மகாவீர் ஜெயந்தியை முன்னிட்டு மார்ச் 31-ல் மதுக்கடைகள் மூடல்

**சென்னை, மார்ச் 29:**
மகாவீர் ஜெயந்தி தினத்தில் மதுபானம் விற்பனை செய்யக் கூடாது, மீறினால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என சென்னை மாவட்ட ஆட்சியர் ரஷ்மி சித்தார்த் ஜகடே தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: மார்ச் 31-ம் தேதி மகாவீர் ஜெயந்தி தினத்தை முன்னிட்டு தமிழ்நாடு மதுபான சில்லறை விற்பனை மற்றும் தமிழ்நாடு மதுபான உரிமம் மற்றும் அனுமதி விதிகளின் கீழ் சென்னை மாவட்டத்தில் உள்ள அனைத்து டாஸ்மாக் மதுபான சில்லறை விற்பனைக் கடைகள், அதைச் சார்ந்த பார்கள், கிளப்புகளை சார்ந்த பார்கள், ஹோட்டல்களை சார்ந்த பார்கள் மற்றும் உரிமம்கொண்ட மதுபான விற்பனையகங்கள், மதுபான கூடங்கள் அனைத்தும் கண்டிப்பாக மூடப்பட வேண்டும்.

மார்ச் 31ம் தேதி (செவ்வாய்க்கிழமை) மகாவீர் ஜெயந்தி தினத்தில் மதுபானம் விற்பனை செய்யக்கூடாது என கூறியுள்ளார்.

# தமிழகத்தில் புதிய உச்சத்தை எட்டிய சூரிய சக்தி மின் உற்பத்தி

**சென்னை, மார்ச் 29:**
தமிழகத்தில் சூரிய சக்தி மின் உற்பத்தி எப்போதும் இல்லாத வகையில் 5.48 கோடி யூனிட்களாக அதிகரித்து புதிய உச்சத்தை எட்டியுள்ளது.



தமிழகத்தில் தனியார் நிறுவனங்கள், அதிக திறனில் சூரிய சக்தி மின் நிலையங்களை அமைத்து மின் உற்பத்தி செய்து வருகின்றன. இது தவிர அரசு மற்றும் தனியார் என சமீபகாலமாக ஏராளமான கட்டடங்களின் மேற்கூரையில் குறைந்த திறனில் மேற்கூரை சூரிய சக்தி மின் நிலையங்களும் அமைக்கப்பட்டு மின் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

இதன்படி, தற்போது மாநிலம் முழுவதும் ஒட்டுமொத்தமாக 11,969 மெகாவாட் திறனில் சூரியசக்தி மின் நிலையங்கள் உள்ளன.

இவற்றில் இருந்து தினமும் சராசரியாக 4 கோடி யூனிட் மின்சாரம் உற்பத்தியாகிறது. இந்த மின்சாரத்தை உற்பத்தி செய்பவர்கள், பயன்படுத்தியது போக மீதி மின்சாரத்தை மின்வாரியத்துக்கு விற்பனை செய்து வருகின்றனர்.

கடந்த 2025 ஆக.20-இல் 5.39 கோடி யூனிட் உற்பத்தியானது. இதுவே இதுவரை சூரிய சக்தி மின் உற்பத்தியின் உச்ச அளவாக இருந்தது.

இந்த நிலையில் சில தினங்களுக்கு முன்பு எப்போதும் இல்லாத வகையில் சூரிய சக்திமின் நிலையங்களில் 5.48 கோடி யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு புதிய உச்சத்தை எட்டியுள்ளது.

இனி வரும் காலங்களில் இந்த அளவு மேலும் அதிகரிக்கும் என பசுமை எரிசக்திக்கழக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## க்ரைம் கார்னர்

### இளம்பெண்.. சாமியார் மீது பரபரப்பு புகார்!

**நாசிக், மார்ச் 29:**
மராட்டிய மாநிலம் நாசிக் மாவட்டத்தை சேர்ந்த அசோக் காரத் என்பவர் வாழ்ந்து வந்தார். தன்னை ஒரு ஆன்மீகவாதி என அடையாளப்படுத்தி கொண்டவர். மேலும் இவர் முன்னாள் வணிக கப்பல் போக்குவரத்து துறை அதிகாரியாக பணியாற்றியதால் “கேப்டன் காரத்” என்று அழைக்கப்படுவதாக தெரிகிறது.

அசோக் காரத் புனேயை சேர்ந்த 35 வயது பெண்ணிடம் தன்னை சிவபெருமானின் அவதாரம் என்றும், அந்த பெண் பார்வதி தேவி என்றும் கூறி ஆசைவார்த்தை கூறி உள்ளார். இந்த பிரபஞ்சம் முழுவதும் நான் சொல்வதை கேட்கும் என கூறி மயக்கி வந்துள்ளார். அந்த பெண்ணிற்கு அசோக்குடன் முதலில் சமூக வலைதளம் மூலமாக பழக்கம் ஏற்பட்டது.

அதே ஆண்டு டிசம்பர் மாதம், அந்த பெண்ணை சந்திக்க அசோக் காரத் புனே வந்துள்ளார். அங்குள்ள ஒரு விடுதியில் அந்த பெண்ணிற்கு மயக்க மருந்து கொடுத்து பாலியல் வன்கொடுமை செய்ததோடு, அதை ரகசியமாக படமெடுத்து மிரட்டியதாகவும் கூறப்படுகிறது. அந்த வீடியோவை காட்டி.. காட்டி.. கடந்த மூன்று ஆண்டுகளாக தொடர்ந்து அவரை பாலியல் கொடுமை செய்து வந்துள்ளார்.

கடந்த ஆண்டு மே மாதம், அவர் வசாயில் உள்ள ஒரு ஹோட்டலுக்கு அந்த பெண்ணை வரவழைத்து, மீண்டும் பாலியல் வன்கொடுமை செய்துள்ளார். ஒரு கட்டத்தில் காட் சாமியாரின் இச்சைகளை தாங்காமல் பொறுத்தது போதும் என பொங்கி எழ முடிவு செய்தார். அதனை தொடர்ந்து அந்த பாதிக்கப்பட்ட பெண் போலீசில் புகார் அளித்துள்ளார். குற்றம் முதலில் புனேவில் நடந்ததால் மணிக்பூர் போலீசார் புதன்கிழமை அன்று ‘ஜீரோ எஃப்.ஐ.ஆர்’ பதிவு செய்து, மேல விசாரணைக்காக புனேவில் உள்ள ஹடப்சர் காவல் நிலையத்திற்கு விசாரணையை மாற்றினர்.

மணிக்பூர் காவல் நிலைய ஆய்வாளர் ஹிராலால் ஜாதவ் இது குறித்து தெரிவிக்கையில், குற்றவாளியை பிடிக்க நான்கு தனிப்படைகள் அமைக்கப்பட்டு தேடுதல் வேட்டை தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக கூறியுள்ளார். விரைவில் காட் சாமியார் பிடிபடுவார் என போலீசார் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்ட பெண்ணை தொடர்ந்து காட் சாமியாரால் பாதிக்கப்பட்ட பல பெண்களும் புகார் கொடுக்க முன்வந்துள்ளனர்.

சாமியாரின் ஆசிரமத்தில் இருந்து 100க்கும் மேற்பட்ட ஆபாச வீடியோக்களை போலீசார் பறிமுதல் செய்துள்ளனர். மேலும் பல ஆவணங்கள், கோப்புகள், ஒரு டைரி மற்றும் தாள்களையும் போலீசார் கைப்பற்றி உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

மராட்டியத்தில் காட் சாமியார் குறித்த லீலைகள் வெளியாகி இருப்பது பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

### சிறுமியிடம் பாலியல் சீண்டல்: முதியவருக்கு 5 ஆண்டுகள் சிறை

5 வயது சிறுமியிடம் பாலியல் சீண்டலில் ஈடுபட்ட முதியவருக்கு 5 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து புதுச்சேரி போக்சோ விரைவு கோர்ட்டு உத்தரவிட்டது. புதுவை முத்திரையர்பாளையத்தை சேர்ந்தவர் அந்தோணிராஜ் (வயது 66). தொழிலாளி. இவர் 5 வயது சிறுமியிடம், கடந்த 2023-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் பாலியல் சீண்டலில் ஈடுபட்டார்.

இதுகுறித்து சிறுமியின் பெற்றோர் மேட்டுப்பாளையம் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தனர். அதன்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி அந்தோணிராஜை கைது செய்தனர். இந்த வழக்கு விசாரணை புதுச்சேரி போக்சோ விரைவு கோர்ட்டில் நீதிபதி சுமதி முன்னிலையில் நடைபெற்று வந்தது. இந்த வழக்கில் விசாரணை முடிவடைந்த நிலையில் நேற்று தீர்ப்பு கூறப்பட்டது.

இதில் குற்றம்சாட்டப்பட்ட அந்தோணிராஜுக்கு 5 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை விதித்து நீதிபதி தீர்ப்பளித்தார். மேலும் ரூ.10 ஆயிரம் அபராதமும் விதிக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட சிறுமிக்கு ரூ.2 லட்சம் அரசு இழப்பீடு வழங்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது. அரசு தரப்பில் வக்கீல் பச்சையப்பன் ஆஜராகி வாதாடினார்.

## வணிகச் செய்திகள்

### தங்கம் விலை பவுனுக்கு ரூ.1,840 உயர்வு

**சென்னை, மார்ச் 29:**
22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை (மார்ச் 28) பவுனுக்கு ரூ.1,840 உயர்ந்துள்ளது. வெள்ளி விலையும் கிலோவுக்கு ரூ.5,000 என விலை அதிகரித்துள்ளது.

சர்வதேச பொருளாதார மற்றும் அரசியல் சூழல், அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு, தங்கத்தின் மீதான முதலீடு அதிகரிப்பு, உலக பங்குச் சந்தை முதலீடுகள் உள்ளிட்டவற்றின் அடிப்படையில், தங்கத்தின் விலை நிர்ணயிக்கப்படுகிறது. உலக அளவில் தங்கத்தை இறக்குமதி செய்யும் நாடுகளில் இந்தியா முன்னணியில் உள்ளது.

அமெரிக்கா-இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையிலான போர் காரணமாக உலக அளவில் கச்சா எண்ணெய் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் கச்சா எண்ணெய் விலையும் உயர்ந்துள்ளது. இதன் காரணமாக பல்வேறு நாடுகளில் பெட்ரோல், டீசல் மற்றும் எல்பிஜி விலை அதிகரித்துள்ளது. இதன் தாக்கம் தங்கம், வெள்ளி உள்ளிட்ட பொருட்களின் மீதும் எதிரொலிக்கிறது.

அந்த வகையில் இன்று காலை வர்த்தகம் தொடங்கியதும் சென்னையில் 22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை கிராமுக்கு ரூ.230 உயர்ந்து, ஒரு கிராம் ரூ.13,660-க்கும், பவுனுக்கு ரூ.1,840 உயர்ந்து, ஒரு பவுன் ரூ.1,09,280-க்கும் விற்பனை ஆகிறது. 24 காரட் தங்கம் பவுனுக்கு ரூ.2,008 உயர்ந்து, ஒரு பவுன் ரூ.1,19,216-க்கும், 18 காரட் தங்கம் பவுனுக்கு ரூ.1,600 உயர்ந்து, ஒரு பவுன் ரூ.91,200-க்கும் விற்பனை ஆகிறது.

# 2026 நிதி மசோதாவிற்கு மாநிலங்களவை ஒப்புதல்

**புதுடெல்லி, மார்ச் 29:**

*2026-27ம் நிதியாண்டுக்கான நிதி மசோதா மக்களவையில் தாக்கல் செய்யப்பட்டு, அதன் மீது விவாதம் நடத்தப்பட்டது. இதில் அரசின் 32 திருத்தங்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டன. பின்னர் அந்த திருத்தங்களுடன் நிதி மசோதா மக்களவையில் கடந்த 25-ந்தேதி நிறைவேறியது.*



தொடர்ந்து மத்திய நிதி மசோதா மாநிலங்களவை பரிசீலனைக்காக அனுப்பப்பட்டது. இதன்படி மாநிலங்களவையில் இன்று நிதி மசோதா குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட்டது. தொடர்ந்து 2026 நிதி மசோதாவிற்கு மாநிலங்களவை ஒப்புதல் அளித்தது. இதன் மூலம், ஏப்ரல் 1-ந்தேதி முதல் தொடங்கும் அடுத்த நிதியாண்டிற்கான வரவு செலவு திட்டப் பணிகள் நிறைவடைந்துள்ளன.

மத்திய நிதி மசோதாவில், 2026-27ம் நிதியாண்டிற்கான மொத்த செலவினம் ரூ.53.47 லட்சம் கோடியாக இருக்கும் என்று கூறப்பட்டுள்ளது. இது, வரும் மார்ச் 31-ந்தேதியோடு முடிவடையும் நடப்பு நிதியாண்டை விட 7.7 சதவீதம் அதிகமாகும்.

அதே போல், மத்திய நிதி மசோதாவில், அடுத்த நிதியாண்டிற்கான மொத்த மூலதனச் செலவு ரூ.12.2 லட்சம் கோடி என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், அடுத்த நிதியாண்டில் மொத்த வரி வருவாய் வசூல் ரூ.44.04 லட்சம் கோடியாகவும், கடனாக வாங்கும் தொகை ரூ.17.2 லட்சம் கோடியாக இருக்கும் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது.

2027-ம் நிதியாண்டிற்கான நிதிப் பற்றாக்குறை, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.3 சதவீதமாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

இது நடப்பு நிதியாண்டில் இருந்த 4.4 சதவீதத்தை விட குறைவாகும்.

## ‘பெட்ரோல், டீசல் மீதான கலால் வரி குறைப்பு: டி.கே.சிவக்குமார் விமர்சனம்

**பெங்களூரு, மார்ச் 29:**

மத்திய கிழக்கு நாடுகளில் போர் நடைபெற்று வருவதால் பெட்ரோல்-டீசல், சமையல் கியாஸ் விலை உயர்ந்து வருகிறது. சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை உயர்ந்தாலும் இந்தியாவில் எண்ணெய் நிறுவனங்கள் பெட்ரோலிய பொருட்களின் விலையை உயர்த்தவில்லை.

இந்த நிலையில் பெட்ரோல்-டீசல் மீதான சுங்க வரி லிட்டருக்கு ரூ.10 குறைத்து மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. ஆனால் பெட்ரோல்-டீசல் விலையில் எந்த மாற்றமும் இல்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து துணை முதல்-மந்திரி டி.கே.சிவக்குமார் பெங்களூருவில் நேற்று நிருபர்களுக்கு பேட்டி அளிக்கையில் கூறியதாவது:-

மத்திய அரசு நம்மை கொலை செய்கிறது. தேர்தல் நேரத்தில் சுங்க வரியை குறைத்துள்ளனர். தேர்தலை மனதில் வைத்து மத்திய அரசு இந்த விலை குறைப்பை செய்துள்ளது. நயாரா நிறுவனம் ஏற்கனவே பெட்ரோல்-டீசல் விலையை உயர்த்திவிட்டது. இதுகுறித்து நாங்கள் மக்களிடம் கொண்டு செல்வோம். கர்நாடகத்தில் அவற்றின் மீதான வரியை குறைப்பது குறித்து பின்னர் பேசுகிறோம்..

## ஒன்றாம் வகுப்பு சேர்க்கைக்கான வயது வரம்பில் மாற்றம்: கர்நாடக அரசு உத்தரவு

**புதுடெல்லி, மார்ச் 29:**

ஓட்டுநர் உரிமம் காலாவதியான பிறகு, 30 நாட்கள் சலுகைக் காலம் வழங்கும் வகையில் மோட்டார் வாகனச் சட்டத்தில் திருத்தம் செய்ய மத்திய அரசு பரிந்துரைத்துள்ளது. இந்தக் காலத்தில் உரிமம் தொடர்ந்து செல்லுபடியாகும்.

இது வர்த்தகம் மற்றும் தொழில்துறை இணை அமைச்சர் ஜிதின் பிரசாதாவால் மக்களவையில் அறிமுகப்படுத்தப்பட்ட ஜன் விஸ்வாஸ் (JAN VISHWAS) மசோதாவின் ஒரு பகுதியாகும்.

வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளரின் கூற்றுப்படி, மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் சில இணக்கங்களுக்குத் தளர்வு அளிக்கவும், சட்டரீதியான 20 திருத்தங்கள் முன்மொழியப்பட்டுள்ளன.

குறிப்பிட்ட அதிகார வரம்பிற்குப் பதிலாக மாநிலம் முழுவதும் வாகனப் பதிவை அனுமதிப்பது, மற்றும் ஓட்டுநர் உரிமம் காலாவதியான பிறகு விண்ணப்பிக்கும் பட்சத்தில், காலாவதியான தேதியிலிருந்து அல்லாமல், விண்ணப்பித்த தேதியிலிருந்தே புதுப்பிக்க அனுமதிப்பது உள்ளிட்டவை இதில் அடங்கும்.

உரிமம் காலாவதியான பிறகு முப்பது நாட்கள் சலுகைக் காலம் வழங்கவும் முன்மொழிந்துள்ளது.

## 4 அங்குல அதிசயம்: சாக்பீஸில் ராமர் கோவிலை செதுக்கிய ஒடிசா கலைஞர்



**புவனேஸ்வர், மார்ச் 29:**

ஒடிசா மாநிலத்தின் குர்தா மாவட்டத்தில் உள்ள கோபிநாத்பூர் அருகே உள்ள ஹட்பஜாரை சேர்ந்த எல். ஈஸ்வர் ராவ் என்பவர் வசித்து வருகிறார். இவர் ஒரு மினியேச்சர் கலைஞர். பல ஆண்டுகால அனுபவம் கொண்ட ஒரு சிறந்த நுண்கலை கலைஞர். ஒவ்வொரு ஆண்டும் பண்டிகைகளின் போது ஏதாவது ஒரு புதுமையை செய்வது அவரது வழக்கம். இந்தநிலையில் ராம நவமி நாடு முழுவதும் கொண்டாடப்படுவதையொட்டி, அயோத்தி ராமர் கோவிலை மையமாக வைத்து ஒரு படைப்பை உருவாக்க அவர் திட்டமிட்டார். அதன்படி இந்த ஆண்டு ராம நவமியை முன்னீட்டு சாக்பீஸை பயன்படுத்தி அயோத்தி ராமர் கோவிலின் ஒரு விரிவான மினியேச்சர் மாதிரியை உருவாக்கி அசத்தி உள்ளார். இந்த தனித்துவமான படைப்பின் மூலம் அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளார் அவர். சுமார் 7 நாட்கள் இரவு பகலாக உழைத்து, வெறும் 4 அங்குல உயரமும், 4 அங்குல நீளமும் கொண்ட மிகச்சிறிய ராமர் கோயில் மாதிரியை தத்ரூபமாக செதுக்கி உள்ளார். இதில் கோவிலின் கோபுரங்கள், தூண்கள் மற்றும் நுணுக்கமான வேலைப்பாடுகள் அப்படியே தத்ரூபமாகப் பிரதிபலிக்கின்றன.

இந்த சிறிய படைப்பின் மூலம் ராம நவமி திருவிழாவிற்கு எனது வாழ்த்துகளையும், அமைதி மற்றும் பக்தியின் செய்தியையும் மக்களிடம் கொண்டு சேர்க்க விரும்புகிறேன்” என்கிறார் ஈஸ்வர் ராவ்.

## ‘ஊரடங்கு அமல்படுத்தும் திட்டம் எதுவும் இல்லை’ - நிர்மலா சீதாராமன்

**புதுடெல்லி, மார்ச் 29:**



*மத்திய கிழக்கில் நிலவி வரும் போர் சூழலுக்கு இடையில், ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளது. அந்த வழியாக அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் அதன் நட்பு நாடுகளின் கப்பல்கள் கடந்து செல்வதற்கு ஈரான் அனுமதி மறுத்து உள்ளது. இதனால் சர்வதேச அளவில் வணிக கப்பல் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.*

இதன் விளைவாக இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் சமையல் எரிவாயு தட்டுப்பாடு ஏற்படும் சூழல் உருவாகியுள்ளது. இந்த சூழ்நிலையை எதிர்கொள்ளும் வகையில் வணிக சிலிண்டர் விநியோகத்திற்கு மத்திய அரசு பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. மேலும் எண்ணெய் சந்தைப்படுத்தும் நிறுவனங்கள் பெட்ரோல் விலையை உயர்த்தாமல் இருப்பதை உறுதி செய்வதற்காக, மத்திய அரசு பெட்ரோல் மற்றும் டீசல் மீதான கலால் வரியை தலா ரூ.10 குறைத்துள்ளது. இதற்கிடையில், எரிபொருள் தட்டுப்பாடு உள்ளிட்ட காரணங்களுக்காக இந்தியாவில் மீண்டும் கொரோனா காலத்தைப் போன்ற ஊரடங்கு அமல்படுத்தப்பட உள்ளதாக தகவல் பரவி வருகிறது. இதனை மத்திய அரசு மறுத்துள்ளது.

இது குறித்து மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு துறை மந்திரி ஹர்தீப் சிங் பூரி வெளியிட்ட ‘எக்ஸ்’ பதிவில், “இந்தியாவில் ஊரடங்கு அமல்படுத்தப்பட உள்ளதாக பரவும் வதந்திகள் முற்றிலும் உண்மைக்கு மாறானவை. அத்தகைய எந்த ஒரு திட்டமும் இந்திய அரசிடம் இல்லை” என்று தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், மாநிலங்களவையில் இன்று நிதி மசோதா 2026 மீதான விவாதத்தின்போது மத்திய நிதி மந்திரி நிர்மலா சீதாராமன் பேசுகையில், “பல நாடுகள் மோட்டார் எரிபொருள் விலையை 20 முதல் 50 சதவீதம் வரை உயர்த்தியுள்ள நிலையில், இந்திய அரசு பெட்ரோல் மற்றும் டீசல் விலைகளை மாற்றாமல் வைத்துள்ளது என்று தெரிவித்தார்.

## ராகுலை பழிக்கும் கேரள முதல்வர் பிரதமரை விமர்சிக்காதது ஏன்? காங்கிரஸ் கேள்வி

**திருவனந்தபுரம், மார்ச் 29:**

கேரள சட்டப்பேரவைத் தேர்தல் ஏப்ரல் 9-ஆம் தேதி நடைபெறவுள்ள நிலையில், அங்கு ஆளும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தலைமையிலான இடதுசாரி ஜனநாயக முன்னணிக்கும், காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணிக்கும் இடையே கடும் போட்டி நிலவி வருகிறது. இது தவிர பாஜகவும் களத்தில் உள்ளது.

காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி அண்மையில் பேசுகையில், ‘பினராயி விஜயனுக்கு எதிராக பல ஊழல் வழக்குகள் நிலுவையில் உள்ளன. ஆனால், அவருக்கு எதிராக மத்திய விசாரணை அமைப்புகள் நடவடிக்கை எடுக்கவில்லை. பாஜக-மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தொடர்புக்கு இதுவே ஆதாரம்’ என்றார். இதைக் கடுமையாக விமர்சித்த பினராயி விஜயன், ‘காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி பாஜகவுடன் ரகசிய கூட்டணியில் உள்ளார்; இத்தனை ஆண்டு அரசியலில் இருந்து அவர் எதையும் கற்றுக் கொள்ளவில்லை’ என்றார். இதனால், இரு கட்சிகள் இடையே கடுமையான வார்த்தைப் போர் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், வயநாட்டில் செய்தியாளர்களைச் சந்தித்த கே.சி.வேணுகோபால், ‘கடந்த இரு நாள்களாக ராகுல் காந்தியை பினராயி விஜயன் கடுமையாக விமர்சித்துப் பேசியுள்ளார். இதற்கு கேரளத்தில் ராகுல் காந்திக்கு உள்ள செல்வாக்குதான் காரணம். ராகுலைப் பார்த்து கேரள முதல்வர் அஞ்சுகிறார். அதேநேரத்தில், பிரதமர் மோடியை ஒரு வார்த்தைகூட விமர்சிக்கவில்லை. ஏனெனில் பி.எம். ஸ்ரீ பள்ளிகள், தொழிலாளர் சட்டங்கள் குறித்து மத்திய அரசுடன் அவர் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளார். மத்திய அரசிடம் இருந்து மாநிலத்துக்குத் தேவையான நிதியைப் பெற தமிழக முதல்வர் தொடர்ந்து உறுதியான கோரிக்கைகளை முன்வைக்கிறார். ஆனால், கேரள முதல்வர் ராகுலை மட்டுமே குறிவைக்கிறார் என்றார்.

## காலியாக உள்ள நீதிபதி பணியிடங்களை விரைந்து நிரப்ப தலைமை நீதிபதி அறிவுறுத்தல்

**புதுடெல்லி, மார்ச் 29:**



டில்லி வட்டாரத் தகவல்கள் கூறியதாவது: 25 உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதிகளுக்கு உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி சூர்ய காந்த் கடந்த வாரம் கடிதம் எழுதினார். அந்தக் கடிதத்தில் உயர்நீதிமன்றங்களில் நீதிபதி பணியிடங்கள் காலியாக இருப்பதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார். மேலும், அமர்வுகளில் பெண் நீதிபதிகள் எண்ணிக்கையை அதிகரிக்கும்படியும் வலியுறுத்தியுள்ளார்.

கொலீஜியத்தின் பரிந்துரைகளை தாமதிக்க வேண்டாம் எனவும், புதிதாக காலியிடம் உருவாகும் முன்பு ஏற்கெனவே இருக்கும் காலியிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகளை எடுக்கும்படியும் சூர்ய காந்த் அறிவுறுத்தியுள்ளார் எனத் தெரிவித்தன.

முன்னதாக, உயர்நீதிமன்றங்களில் காலியாக உள்ள நீதிபதிகளின் எண்ணிக்கை குறித்த தரவைமக்களவையில் அண்மையில் மத்திய சட்டத் துறை அமைச்சர் அர்ஜுன்ராம் மேக்வால் தாக்கல் செய்தார்.

அதில், உயர்நீதிமன்றங்களில் 1,122 நீதிபதி பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டு இருப்பதாகவும், அவற்றில் 308 பணியிடங்கள் காலி யாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதேபோல், 2014-ஆம் ஆண்டுமுதல் உயர்நீதிமன்றங்களில் 170 பெண் நீதிபதிகள் நியமிக்கப்பட்டு இருப்பதாகவும், அவர்களில் 96 பேர் கடந்த 5 ஆண்டுகளில் நியமிக்கப்பட்டுள்ளனர் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

## தெலங்கானாவில் தெருநாய் தாக்கியதில் கண்ணை இழந்த 4 வயது சிறுவன்!

**புவனகிரி, மார்ச் 29:**

தெலங்கானா மாநிலம், புவனகிரி நகரில் உள்ள தனது வீட்டிற்கு வெளியே அந்த சிறுவன் வியாழக்கிழமை விளையாடிக் கொண்டிருந்தான். அப்போது தெருநாய் தாக்கியதில் சிறுவனின் ஒரு கண் கருவிழி பெயர்ந்து தரையில் விழுந்தது. உடனே அச்சிறுவன் ஹைதராபாத்தில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டான். தற்போது சிறுவன் நலமுடன் இருப்பதாகவும், அவனது மற்றொரு கண் பாதிக்கப்படவில்லை என்றும் காவல் துறை தெரிவித்துள்ளது. இதுபோன்ற சம்பவங்களைத் தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட ஆட்சியர் மற்றும் பிற அதிகாரிகளுக்கு காங்கிரஸ் எம்.பி. கிரண் குமார் ரெட்டி உத்தரவிட்டார். சிறுவனின் தந்தையிடமும் பேசி, சிகிச்சைக்கான செலவை அரசு ஏற்கும் என்று உறுதியளித்தார். சிறுவன் ஹைதராபாத்தில் உள்ள இரண்டு தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகிறான் என்று கிரண் குமார் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவித்தார். தெருநாய்களின் தொல்லையைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நகராட்சி அதிகாரிகளையும் அவர் கேட்டுக்கொண்டார்.

# ரூ.2.38 லட்சம் கோடிக்கு பாதுகாப்புத் தளவாடங்கள் கொள்முதல்: மத்திய அரசு ஒப்புதல்

**புதுடெல்லி, மார்ச் 29:**

*எஸ்.400 வான் பாதுகாப்பு சாதனம், 60 ராணுவ போக்குவரத்து விமானம் உள்பட ரூ.2.38 லட்சம் கோடிக்கு பாதுகாப்புத் தளவாடங்களைக் கொள்முதல் செய்வதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.*



டில்லியில் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தலைமையில் பாதுகாப்புத் தளவாடக் கொள்முதல் கவுன்சில் (டிஏசி) கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஆயுத தளவாடக் கொள்முதல் தொடர்பாக விவாதிக்கப்பட்டு ஒப்புதல் வழங்கப்பட்டது. இதுகுறித்து பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்ட அறிவிப்பில், ‘இந்திய விமானப் படைக்காக நடுத்தர போக்குவரத்து விமானம் வாங்கும் திட்டம், ரஷியாவிடம் இருந்து எஸ்.400 நீண்ட தூர வான் பாதுகாப்பு ஏவுகணை அமைப்பு, ஆளில்லா தாக்குதல் விமானம், சுகோய் 30 விமான என்ஜின் பராமரிப்பு தொடர்பான திட்டங்களுக்கு டிஏசி ஒப்புதல் வழங்கியது. தற்போது பயன்பாட்டில் உள்ள சோவியத் யூனியன் கால ஏஎன் 32, ஐஎல் 76 போக்குவரத்து விமானங்களுக்கு பதிலாக நடுத்தர போக்குவரத்து விமானங்களை இந்திய விமானப் படையில் சேர்க்கும் திட்டத்துக்கு ஒப்புதல் தரப்பட்டது’ எனக் கூறப்பட்டுள்ளது. அதேநேரத்தில் எத்தனை எஸ்.400 வான் பாதுகாப்பு சாதனங்கள் கொள்முதல் செய்யப்பட இருக்கிறது, எத்தனை ராணுவ போக்குவரத்து விமானங்கள் வாங்கப்பட இருக்கிறது என்ற தகவல் பாதுகாப்பு அமைச்சக அறிவிப்பில் இல்லை. ஆனால் இதுகுறித்து அதிகாரிகள் கூறுகையில், ‘5 எஸ்.400 சாதனங்களும், 60 ராணுவ போக்குவரத்து விமானங்களும் வாங்கப்பட உள்ளன. முதலில் 12 விமானம் நேரடியாக வாங்கவும், எஞ்சிய 48 விமானங்களை இந்தியாவில் தயாரிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது’ என்றனர்.

லாக்ஹீட் மார்ட்டின் நிறுவனம், ஏர் பஸ் நிறுவனம் உள்ளிட்ட ஏதேனும் ஒரு நிறுவனத்திடம் இருந்து 60 விமானங்கள் வாங்கப்படலாம் என கூறப்படுகிறது. ரஷிய, அமெரிக்க நிறுவனங்களுடன் ஒப்பந்தம்: பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்ட இன்னொரு அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இந்திய ராணுவத்துக்காக துன்சுகா வான் பாதுகாப்பு ஏவுகணை அமைப்பு ரஷியாவின் ஜேஎஸ்சி ரோசோபோரன்எக்ஸ்போர்ட் நிறுவனத்திடம் இருந்து கொள்முதல் செய்யப்பட இருக்கிறது. இதுதொடர்பாக ரூ.445 கோடி மதிப்பிலான ஒப்பந்தத்தை அந்நிறுவனத்துடன் பாதுகாப்பு அமைச்சகம் செய்துள்ளது. இந்த வான் பாதுகாப்பு ஏவுகணை அமைப்பு, ட்ரோன்கள், க்ரூஸ் ரக ஏவுகணைகளால் இந்திய வான் பகுதிக்கு ஏற்படும் அச்சுறுத்தல்களை எளிதில் சமாளிக்க உதவும். இந்த ஒப்பந்தம் மூலம் இந்தியா-ரஷியா இடையேயான பாதுகாப்பு ரீதியான ஒத்துழைப்பு மேலும் வலுப்படும். அதேபோல் இந்திய கடற்படையிடம் உள்ள நீண்ட தூர கண்காணிப்பு மற்றும் நீர்மூழ்கிக் கப்பலைத் தாக்கி அழிக்கும் பி81 ரக விமானங்களை பராமரிப்பது தொடர்பாக அமெரிக்காவின் போயிங் நிறுவனத்துடன் ரூ.413 கோடி மதிப்பிலான ஒப்பந்தத்தில் பாதுகாப்பு அமைச்சகம் கையொப்பமிட்டுள்ளது. இந்திய கடற்படையிடம் இந்த ரக விமானங்கள் 12 உள்ளன எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சந்திரசேகர் ராவ் மகள் கவிதா ஏப்.25-ல் புதிய கட்சி தொடக்கம்!

**ஐதராபாத், மார்ச் 29:**

தெலங்கானா முன்னாள் முதல்வர் சந்திரசேகர் ராவின் மகள் கவிதா வரும் ஏப்ரல் 25 அன்று புதிய கட்சியைத் தொடங்குவதாகத் தெரிவித்துள்ளார்.

தெலங்கானா முன்னாள் முதல்வரும், பாரதிய ராஷ்டிரிய சமிதி (பி.ஆர்.எஸ்.) கட்சியின் தலைவருமான சந்திரசேகர் ராவின் மகள் கவிதா கடந்த 2025 ஆம் ஆண்டு அக்கட்சியில் இடைநீக்கம் செய்யப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து, பி.ஆர்.எஸ். கட்சியில் இருந்து விலகிய கவிதா விரைவில் புதிய கட்சியைத் தொடங்குவேன் என கடந்த பிப்ரவரி மாதம் அறிவித்திருந்தார். இந்த நிலையில், வெள்ளிக்கிழமை (மார்ச் 27) நடைபெற்ற செய்தியாளர்களுடனான சந்திப்பில் பேசிய கவிதா, வரும் ஏப்ரல் 25 அன்று முனீராபாதில் நடைபெறவுள்ள நிகழ்ச்சியில் புதிய கட்சியின் பெயர் மற்றும் கொடி ஆகியவை அறிமுகம் செய்யப்படும் என அறிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் கூறுகையில், இதுவரை ஆண்கள் தொடங்கிய கட்சிகள் மட்டுமே தெலங்கானாவில் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன என்றும், தனது கட்சிக்கு பெண்கள் மற்றும் இளம் தலைமுறையினர் ஆதரவளிக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

# “வெனிசுலா, ஈரான்... அடுத்து கியூபா தான்” - அமெரிக்க அதிபர் ட்ரம்ப் ‘இலக்கு’



**வாஷிங்டன், மார்ச் 29:**

“வெனிசுலா மற்றும் ஈரானின் ராணுவ வெற்றிக்குப் பிறகான அடுத்த இலக்கு கியூபாதான்” என்று அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் மியாமியில் நடைபெற்ற முதலீட்டு மாநாட்டில் உரையாற்றிய டொனால்டு ட்ரம்ப், வெனிசுலா மற்றும் ஈரானில் அமெரிக்க ராணுவம் மகத்தான வெற்றிகளைப் பெற்றுள்ளதாக பாராட்டினார்.

அப்போது அவர், “நான் இந்த மகத்தான (அமெரிக்க) ராணுவத்தை உருவாக்கினேன். நீங்கள் ஒருபோதும் போரில் ஈடுபட வேண்டியிருக்காது என்று நான் அவர்களிடம் கூறி இருந்தேன். ஆனால், சில நேரங்களில் ராணுவத்தைப் பயன்படுத்த வேண்டியுள்ளது. சொல்லப்போனால் அடுத்தது கியூபாதான்” என தெரிவித்தார்.

எனினும் பின்னர், “நான் அப்படி சொல்லவில்லை என்று பாவித்துக்கொள்ளுங்கள். நான் அப்படி சொல்லவில்லை என்றே நினைத்துக்கொள்ளுங்கள்” என குறிப்பிட்டார்.

வெனிசுலாவின் நட்பு நாடாக இருந்து வந்த கியூபா, அந்த நாட்டிடம் இருந்து எரிபொருட்களை பெற்று வந்தது.

கடந்த ஜனவரியில் வெனிசுலா அதிபர் நிகோலஸ் மதுரோவை அமெரிக்க ராணுவம் கைது செய்து தங்கள் நாட்டுக்கு கொண்டு சென்றதை அடுத்து, கியூபாவுக்கான எரிபொருள் விநியோகத்தை அமெரிக்கா நிறுத்திவிட்டது.

இது குறித்து குறிப்பிடும் ட்ரம்ப், “கடுமையான பொருளாதார நெருக்கடியை கியூபா சந்தித்து வருகிறது. கியூப அரசாங்கம் வீழ்ச்சியின் விளிம்பில் உள்ளது என்றே நான் நம்புகிறேன். அந்த நாட்டுக்கு எதிராக அமெரிக்கா, ராணுவ ரீதியிலான நேரடி நடவடிக்கையை எடுக்கலாம்.

எனினும், ராணுவ மோதலை தவிர்க்கும் நோக்கில், அமெரிக்காவுடன் தங்கள் நாடு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளதாக கியூப அதிபர் மிகுவல் டியாஸ்-கேனல் ஒப்புக்கொண்டுள்ளார். பேச்சுவார்த்தையின் இறுதியில் கியூபா நட்பான கையகப்படுத்தலுக்கு உள்ளாகலாம்; உள்ளாகாமலும் போகலாம்” என்று தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அபுதாபியில் இடைமறித்து அழிக்கப்பட்ட ஏவுகணை பாகங்கள் விழுந்து 5 இந்தியர்கள் படுகாயம்

**அபுதாபி, மார்ச் 29:**

ஈரான் நாட்டை அமெரிக்காவும், இஸ்ரேலும் கூட்டாக இணைந்து வான்வழியாக கடந்த பிப்ரவரி 28-ந்தேதி கடுமையாக தாக்கின. இதில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பலியாகி உள்ளனர்.

ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி காமேனி, பாதுகாப்பு மந்திரி அமீர் நசீர்ஜடே மற்றும் புரட்சிகர காவல்படை தளபதி முகமது பாக்பூர் உள்ளிட்ட பல முக்கிய அதிகாரிகள், தலைவர்கள், தளபதிகள் அடுத்தடுத்து கொல்லப்பட்டனர். இதனை ஈரான் நாடும் உறுதி செய்துள்ளது. இதனால் மத்திய கிழக்கு பகுதியில் கடும் பதற்ற நிலை காணப்படுகிறது.

இதனை தொடர்ந்து ஈரான் நடத்தி வரும் பதிலடி தாக்குதல்களால் இஸ்ரேல், அமெரிக்கா மற்றும் அவற்றின் படை தளங்கள் அமைந்த வளைகுடா நாடுகள் பாதிக்கப்பட்டு உள்ளன. இதுபோன்று, அபுதாபியில் கலீபா பொருளாதார மண்டலம் பகுதியில், தாக்க வந்த ஏவுகணை ஒன்றை வான் பாதுகாப்பு சாதனங்கள் இடைமறித்து அழித்தன.

இதில் அந்த ஏவுகணையின் பாகங்கள் விழுந்ததில் சிக்கி 5 இந்தியர்கள் காயம் அடைந்துள்ளனர். மித அளவில் இருந்து படுகாயம் வரை அவர்களுக்கு ஏற்பட்டு உள்ளது என அதிகாரிகள் தெரிவித்தனர். மற்ற தகவல்கள் பின்னர் தெரிவிக்கப்படும் என்றும் அவர்கள் கூறினர்.

இதேபோன்று, அதிகாரப்பூர்வ தகவல்களை மட்டுமே பொதுமக்கள் பெற வேண்டும் என கேட்டு கொண்டதுடன், பரவி வரும் வதந்திகள் அல்லது சரிபார்க்கப்படாத தகவல்களை தவிர்க்கும்படியும் கேட்டு கொள்ளப்பட்டு உள்ளது.

## அமெரிக்கா, ஐரோப்பாவில் மீண்டும் கரோனா



**வாஷிங்டன், மார்ச் 29:**

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் மீண்டும் கரோனா வைரஸ் பரவி வருகிறது.

கடந்த 2019-ம் ஆண்டு இறுதியில் சீனாவின் வூஹான் நகரில் கரோனா வைரஸ் கண்டறியப்பட்டது. அங்கிருந்து உலகம் முழுவதும் வைரஸ் பரவியது. சுமார் 71 கோடி பேர் வைரஸால் பாதிக்கப்பட்டனர். சுமார் 70 லட்சம் பேர் உயிரிழந்தனர். இந்த சூழலில் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் ஒமைக்ரான் வகையை சேர்ந்த பிஏ 3.2 என்ற கரோனா வைரஸ் பரவி வருகிறது. இது சிக்காடா என்ற புனைப்பெயருடன் அழைக்கப்படுகிறது. கடந்த 2024-ம் ஆண்டு நவம்பரில் முதல்முறையாக தென்னாப்பிரிக்காவில் பிஏ 3.2 கரோனா வைரஸ் கண்டறியப்பட்டது. கடந்த 2025-ம் ஆண்டில் இந்த வைரஸ் ஜெர்மனி, நெதர்லாந்து நாடுகளில் மிதமாக பரவுவது கண்டறியப்பட்டது. தற்போது அமெரிக்காவின் 25 மாகாணங்களில் பிஏ 3.2 கரோனா வைரஸ் பரவியிருப்பது கண்டறியப்பட்டு உள்ளது.

இதுகுறித்து அமெரிக்க அரசின் நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம் (சிடிசி) கூறியதாவது: கடந்த ஆண்டு இறுதியில் நெதர்லாந்தில் இருந்து அமெரிக்காவின் சான் பிரான்சிஸ்கோ விமான நிலையத்துக்கு வந்த சுற்றுலா பயணிக்கு மருத்துவ பரிசோதனை நடத்தப்பட்டது. அப்போது அவர் பிஏ 3.2 கரோனா வைரஸால் பாதிக்கப்பட்டிருப்பது தெரியவந்தது.

இதன்பிறகு இந்த ஆண்டு தொடக்கத்தில் இருந்தே அமெரிக்காவின் பல்வேறு மாகாணங்களில் பிஏ 3.2 கரோனா வைரஸ் பரவல் கண்டறியப்பட்டது. தற்போது அமெரிக்காவின் டெக்சாஸ், புளோரிடா, கலிபோர்னியா உள்ளிட்ட 25 மாகாணங்களில் இந்த வைரஸ் பாதிப்பு கண்டறியப்பட்டிருக்கிறது. நூற்றுக்கணக்கானோர் வைரஸால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளனர்.

பிஏ 3.2 கரோனா வைரஸ் 75 மரபணு மாற்றங்களை மேற்கொண்டுள்ளது. குறிப்பாக மனித உடலின் நோய் எதிர்ப்பு சக்தியை மீறி தாக்கும் தன்மையை கொண்டிருக்கிறது. எனினும் முந்தைய கரோனா வைரஸ்களைவிட புதிய பிஏ 3.2 கரோனா வைரஸின் பாதிப்பு குறைவாகவே உள்ளது. இந்த வைரஸ் குறித்து அச்சப்படத் தேவையில்லை. இவ்வாறு சிடிசி அமைப்பு தெரிவித்துள்ளது.

# இஸ்ரேல் மீது ஹவுதி கிளர்ச்சியாளர்கள் ஏவுகணை தாக்குதல்



**டெல் அவிவ், மார்ச் 29:**

ஏமனில் இருந்து இஸ்ரேலை நோக்கி காலையில் ஒரு ஏவுகணை ஏவப்பட்டதாக இஸ்ரேல் பாதுகாப்புப் படை (IDF) தெரிவித்துள்ளது. ஈரான் மற்றும் இஸ்ரேல், அமெரிக்கா போர் தொடங்கியதிலிருந்து ஹவுதிகள் நடத்திய முதல் தாக்குதல் இதுவாகும்.

ஏமனில் இருந்து ஹவுதி கிளர்ச்சியாளர்களால் ஏவப்பட்ட ஏவுகணையை இடைமறிப்பதற்காக வான் பாதுகாப்பு அமைப்பு செயல்படுத்தப்பட்டதாகவும், நெகேவில் உள்ள பீர்ஷேபா மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் வான் பாதுகாப்பு எச்சரிக்கை சைரன்கள் ஒலித்ததாகவும் இஸ்ரேல் பாதுகாப்புப் படை தெரிவித்துள்ளது. இந்த தாக்குதலில் உயிரிழப்புகள் மற்றும் நேரடித் தாக்கங்கள் குறித்த உடனடித் தகவல்கள் எதுவும் இல்லை. ஈரான் மற்றும் பிராந்திய பகுதிகளில் அமெரிக்க-இஸ்ரேல் தாக்குதல் தொடர்ந்து அதிகரித்தால், நேரடி ராணுவத் தலையீட்டிற்குத் தயாராக இருப்பதாக ஏமன் ஹவுதி கிளர்ச்சிப் படைகள் நேற்று அறிவித்த நிலையில், இந்த முதல் ஏவுகணை தாக்குதல் நடந்துள்ளது என ஈரானிய அரசு ஊடகமான பிரஸ் டிவி தெரிவித்துள்ளது.

இந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கை மூலம் மேற்கு ஆசியா முழுவதும் தனது ஆதிக்கத்தை விரிவுப்படுத்த இஸ்ரேல் முனைவதாக ஏமன் குற்றம்சாட்டியுள்ளது. இத்தகைய திட்டங்களையும், அவற்றுக்குப் பின்னால் இருப்பவர்களையும் எதிர்ப்பது பிராந்திய மக்களின் சட்டபூர்வமான உரிமை என்பதுதான் தங்களின் நிலைப்பாடு என ஏமன் தெரிவித்துள்ளது.

போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான ராஜதந்திர முயற்சிகளுக்கு அமெரிக்காவும் இஸ்ரேலும் பதிலளிக்க வேண்டும் என்று தெரிவித்த ஹவுதி செய்தித் தொடர்பாளர் பிரிகேடியர் யாஹ்யா சரீ, “இஸ்ரேலின் அநியாயமான, அடக்குமுறையான மற்றும் நியாயமற்ற நடவடிக்கைகள் உலக மற்றும் பிராந்திய ஸ்திரத்தன்மை மற்றும் பாதுகாப்பிற்கு தீங்கு விளைவிப்பதோடு, உலகப் பொருளாதாரத்தையும் பாதிக்கின்றன” என்றும் கூறினார்.

# நேபாள முன்னாள் பிரதமர் ஒலி கைது: Gen Z போராட்டங்களை கொடூரமாக ஒடுக்க முயன்றதாக நடவடிக்கை

**பக்தபூர், மார்ச் 29:**

நேபாளத்தின் புதிய பிரதமராக பாலேந்திர ஷா பதவியேற்ற மறுநாளே, கடந்த ஆண்டு நடந்த ஜென் ஸீ போராட்டங்களில் ஏற்பட்ட உயிரிழப்புகள் குறித்த குற்றச்சாட்டின் பேரில், நேபாள முன்னாள் பிரதமர் கே.பி. சர்மா ஒலி கைது செய்யப்பட்டார். பக்தபூர் மாவட்டத்தின் குண்டு பகுதியில் அமைந்துள்ள அவரது இல்லத்திலிருந்து, நேபாள காவல்துறையினரால் ஒலி கைது செய்யப்பட்டார்.

சர்மா ஒலியுடன் சேர்த்து, முன்னாள் உள்துறை அமைச்சர் ரமேஷ் லேகக்கும் கைது செய்யப்பட்டார். இதுகுறித்து பேசிய காத்மண்டு பள்ளத்தாக்கு காவல்துறையின் செய்தித் தொடர்பாளர் ஓம் ஆதிகாரி, “அவர்கள் இன்று காலை கைது செய்யப்பட்டனர்; சட்டத்திற்கு உட்பட்டு அடுத்தகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்,” என்று கூறினார்.

ஒலி கைது செய்யப்பட்ட சில நிமிடங்களிலேயே, புதிதாகப் பொறுப்பேற்ற உள்துறை அமைச்சர் சுதான் குருங், “கொடுத்த வாக்குறுதி என்பது வாக்குறுதியே. சட்டத்திற்கு அப்பாற்பட்டவர் எவரும் இல்லை. நாங்கள் முன்னாள் பிரதமர் கே.பி. சர்மா ஒலியையும், முன்னாள் உள்துறை அமைச்சர் ரமேஷ் லேகக்கையும் கைது செய்துள்ளோம். இது எவருக்கும் எதிரான பழிவாங்கும் நடவடிக்கை அல்ல; இது நீதியின் தொடக்கம் மட்டுமே. இதன் மூலம் நாடு ஒரு புதிய திசையை நோக்கிப் பயணிக்கும் என்று நான் நம்புகிறேன்,” என்றார்.

தனது கைது குறித்து ஊடகங்களிடம் தெரிவித்த சர்மா ஒலி, “பழிவாங்கும் நோக்கத்துடன் நான் கைது செய்யப்பட்டுள்ளேன். இதற்கு எதிராக நான் சட்டரீதியான போராட்டத்தை முன்னெடுப்பேன்,” என்று தெரிவித்தார். கடந்த ஆண்டு செப்டம்பர் 8 மற்றும் 9 தேதிகளில் நடைபெற்ற ஊழல் எதிர்ப்பு ஜென் ஸீ போராட்டத்தில், 19 இளைஞர்கள் உட்பட 70-க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். சமூக ஊடகங்களுக்கு விதிக்கப்பட்ட தற்காலிகத் தடையின் காரணமாகத் தொடங்கிய இந்தப் போராட்டம், அரசுக்கு எதிரான போராட்டமாக மாறியது. நாடு முழுவதும் பரவிய இப்போராட்டத்தில், நாடாளுமன்றம் மற்றும் அரசு அலுவலகங்கள் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன. இதன் காரணமாக, ஒலி தலைமையிலான அரசாங்கம் கவிழ்ந்தது. நேபாளத்தில் புதிதாக அமைந்த அரசாங்கத்தின் முதல் அமைச்சரவைக் கூட்டம், பாலேந்திர ஷா தலைமையில் நடைபெற்றது.

## ஈரான்-அமெரிக்கா இடையே மறைமுகப் பேச்சுவார்த்தை

**வாஷிங்டன், மார்ச் 29:**

ஈரான்-அமெரிக்காவுக்கு இடையே மறைமுகப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருவதாகப் பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர் இஷாக் தார் உறுதிப்படுத்தியுள்ளார். இந்த முயற்சியில் பாகிஸ்தான் ஒரு பாலமாகச் செயல்பட்டு வருவதாகவும், இது நேரடிப் பேச்சுவார்த்தை அல்ல என்றும், பாகிஸ்தான் மூலமாக செய்திகள் பரிமாறிக் கொள்ளப்படும் ஒரு மறைமுக முயற்சி என்றும் இஷாக் தார் குறிப்பிட்டுள்ளார். பாகிஸ்தானுடன் துருக்கி, எகிப்து ஆகிய நாடுகளும் தங்களது ஆதரவை தெரிவித்துள்ளன.

## சீனா ஒரு சிறந்த நட்பு நாடு : லூலா புகழாரம்

சீனா பிரேசிலின் “சிறந்த நட்பு நாடு” என்று அதன் ஜனாதிபதி லூலா புகழாரம் சூட்டியுள்ளார். பிரேசிலின் சிஏஓஏ வாகன நிறுவன தொழில் பூங்காவில் பேசிய போது, பிரேசிலின் மிகச்சிறந்த நட்பு நாடாக சீனா இருப்பதால், இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு மேலும் வலுவடையும் என அவர் கூறினார். சீனாவின் அதிகாரப்பூர்வ தரவுகளின்படி, 2024 ஆம் ஆண்டில் பிரேசில் மற்றும் சீனா இடையிலான இருதரப்பு வர்த்தகம் சுமார் 188 பில்லியன் அமெரிக்க டாலர்களை எட்டியுள்ளது. இதன் மூலம் பிரேசிலின் மிகப்பெரிய வர்த்தகக் கூட்டாளியாக சீனா உருவெடுத்துள்ளது.


## நேபாள பிரதமராக பாலேந்திர ஷா பதவியேற்பு

நேபாளத்தின் புதிய பிரதமராக ராஷ்டிரிய சுதந்திரக் கட்சியின் (RSP) தலைவரான பாலேந்திர ஷா(35) வெள்ளிக்கிழமை பதவியேற்றார்.வேலை யின்மை, பொருளாதார நெருக்கடி சமூக ஊடகத்தடை ஆகியவற்றின் பின்னணியில் ஜென் சி தலைமுறையினர் அந்நாட்டில் பெரும் போராட்டத்தை நடத்தினர். இதனால் கே.பி சர்மா ஒலி தலைமையிலான அரசு ராஜினாமா செய்ய வேண்டிய கட்டாயம் உருவானது. இதன் பிறகு 2026 மார்ச் 5 இல் அந்நாட்டில் பொதுத்தேர்தல் நடைபெற்றது. அதில் ராப் பாடகரும் காத்மாண்டு மேயருமான பாலேந்திர ஷா பிரதமர் வேட்பாளராக முன்னிறுத்தப்பட்டார். அவரது கட்சி தேர்தலில் தனிப்பெரும்பான்மையுடன் வென்றது.

## மெட்டா நிறுவனத்தில் ஆயிரம் ஊழியர்கள் பணிநீக்கம்

செயற்கை நுண்ணறிவு (AI) தொழில்நுட்பத்திற்காகப் பெரும் தொகையைச் செலவிட்டு வரும், மெட்டா நிறுவனம் சுமார் ஆயிரம் ஊழியர்களைப் பணிநீக்கம் செய்ய உள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இதனால் நிறுவனத்தின் விற்பனை, ஆள்சேர்ப்பு, ‘ரியாலிட்டி லேப்ஸ், வன்பொருள் உள்ளிட்ட பிரிவுகளில் பணியாற்றும் ஊழியர்கள் பணி நீக்கப்பட வாய்ப்புள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்கா மட்டுமின்றி பிற நாடுகளில் பணியாற்றிவரும் ஊழியர்களையும் பணி நீக்கம் செய்வோம் என அந்நிறுவனம் கூறியுள்ளது. ஏற்கனவே கடந்த ஜனவரி மாதம், 1,000-க்கும் மேற்பட்ட ஊழியர்களை பணி நீக்கம் செய்தது குறிப்பிடத்தக்கது.

## அடிமை வர்த்தகத்திற்கு எதிராக ஐ.நா வரலாற்றுத் தீர்மானம்




அடிமை வர்த்தகத்தை “மனித குலத்திற்கு எதிரான மிக மோசமான குற்றம்” என்று அங்கீகரிக்கும் தீர்மானத்தை ஐ.நா அவை நிறைவேற்றியுள்ளது. இந்த தீர்மானத்தை மேற்கு ஆப்பிரிக்க நாடுகளும், ஆப்பிரிக்க ஒன்றியமும் வரவேற்றுள்ளன. இந்த தீர்மானத்தை அமெரிக்கா மற்றும் சில ஐரோப்பிய நாடுகள் கடுமையாக எதிர்த்த நிலையிலும் ஐ.நா அங்கீகரித்துள்ளது. இந்த வரலாற்று முடிவு உண்மை, நீதி மற்றும் ஆற்றுப்படுத்துதலை நோக்கிய ஒரு முக்கியமான படி. அடிமைத்தனத்தின் நீடித்த வடுக்களைக் கையாள வேண்டிய அவசியத்தை இது மீண்டும் உறுதிப்படுத்துகிறது என ஆப்பிரிக்க ஒன்றியம் தெரிவித்துள்ளது.

# அமெரிக்க புலனாய்வு அமைப்பு தலைவர் காஷ் படேலின் மின்னஞ்சல்களை ஹேக் செய்த ஈரான் ஆதரவு குழு




**வாஷிங்டன், மார்ச் 29:**

அமெரிக்காவின் எஃப்பிஐ (FBI) புலனாய்வு அமைப்பின் இயக்குநர் காஷ் படேலின் தனிப்பட்ட மின்னஞ்சல்கள் மற்றும் புகைப்படங்களை ஈரானுடன் தொடர்புடைய குழு ஹேக் செய்தது. மேலும், அந்தக் குழு காஷ் படேலின் புகைப்படங்களையும், ஆவணங்களையும் இணையத்தில் வெளியிட்டது.

‘HANDALA HACK TEAM’ என்ற ஈரான் தொடர்புடைய ஹேக்கர் குழு, காஷ் படேலின் மின்னஞ்சல் கணக்கை ஹேக் செய்ததாக அறிவித்துள்ளது. அந்தக் குழு, “படேலின் பெயர் இனி வெற்றிகரமாக ஹேக் செய்யப்பட்டவர்களின் பட்டியலில் இடம்பெறும்” என்று தெரிவித்தது. அமெரிக்காவின் சில பாதுகாப்பு அதிகாரிகள் இச்சம்பவம் நிகழ்ந்ததை உறுதிப்படுத்தினர். இருப்பினும், இந்தச் சம்பவம் குறித்து எஃப்பிஐ மற்றும் அமெரிக்க நீதித்துறை ஆகியவை இதுவரை எந்தக் கருத்தையும் தெரிவிக்கவில்லை.

இந்த ஹேக்கிங் மூலம், பத்தாண்டுகளுக்கும் மேலான பழமையான சில ஆவணங்கள் ஹேக் செய்யப்பட்டுள்ளது. அந்த மின்னஞ்சல்களில், படேலின் பயணங்கள் மற்றும் வணிகம் தொடர்பான கடிதப் பரிமாற்றங்கள் வெளியாகியுள்ளன. ஒரு பழமையான ஸ்போர்ட்ஸ் கார் அருகே நிற்கும் படேல், வாயில் சிகார் வைத்துக்கொண்டு அவர் போஸ் கொடுக்கும் படம் மற்றும் கையில் ரம் பாட்டிலுடன் கண்ணாடி முன் நிற்கும் படம் ஆகியவை வெளியாகியுள்ளது.

கடந்த 2025-ஆம் ஆண்டில் அமெரிக்காவின் எஃப்பிஐ (FBI) புலனாய்வு அமைப்பின் 9-வது இயக்குநராக இந்திய வம்சாவளியை சேர்ந்த காஷ் படேல் பதவியேற்றுக் கொண்டார். தங்களை பாலஸ்தீன ஆதரவு ஹேக்கர் குழுவாக சொல்லிக்கொள்ளும் இந்தக் குழு, சமீபத்தில் ‘STRYKER’ என்ற மருத்துவ உபகரண நிறுவனத்தின் கணக்கையும் ஹேக் செய்தது. ஈரானிய இணையப் புலனாய்வுத் துறையுடன் தொடர்புடையதாகக் கூறப்படும் இந்தக் குழு, தெற்கு ஈரானின் மினாப் நகரில் உள்ள குழந்தைகள் பள்ளி மீது அமெரிக்கவும், இஸ்ரேலும் நடத்திய தாக்குதலுக்குப் பதிலடியாகவே இந்த ஹேக்கிங் நடத்தப்பட்டதாகக் கூறியது.

# திமுக சார்பில் போட்டியிடும் 164 வேட்பாளர்களை அறிவித்தார் ஸ்டாலின்





# தே.மு.தி.க வேட்பாளர் பட்டியல் வெளியீடு!

# தமிழகத்தில் புதிய உச்சத்தை எட்டிய சூரிய சக்தி மின் உற்பத்தி

# அரசுத் தேர்வுக்குத் தயாராகும் தமிழ்வழி மாணவர்களுக்கு உதவித் தொகை எனக்கூறி நூதன மோசடி: எச்சரிக்கை

# எதிரிகளுக்கு உதவுவதை நிறுத்துங்கள்: ஈரான் அதிபர் எச்சரிக்கை

# வார ராசிபலன்கள்


தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

Tamilnaduepaper

சென்னை 29.03.2026 ஞாயிற்றுக்கிழமை இலவச இ–பேப்பர்